

கல்கி
KALKI 23.1.94 ரூ [illegible].00
“துரோகியா? நானா?”

• நல்ல வேலை • வெளிநாட்டு வேலைவாய்ப்பு



புத்தாண்டு பிறந்து விட்டது! உங்களது வளமான எதிர்காலம் பற்றித் திட்டமிட ஏற்ற தருணம் இதுவே!

உங்களது குறிக்கோள் எதுவாக வாக இருந்தாலும் அதை அடைய இன்றுமுதல் செயல் படத் துவங்குங்கள்.

நீங்கள் விரும்பும் முன்னேற்றத்தை அடைய ஆங்கில மொழியில் போதிய புலமையின்மை ஒரு தடையாக இருந்தால் அதைப் பற்றி இனி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை.

உங்களால் இத்தடையை எளிதில் அகற்றிவிட முடியும்.

ஆம்... விவேகானந்தா கல்வி நிலையம் அளித்து வரும் ஓர் எளிய பயிற்சியினை நீங்கள் மேற் கொண்டால் போதும்!

அடிப்படையிலிருந்து துவங்கி, ஆங்கில இலக்கணத்தைச் சுலபமாகக் கற்றுக் கொண்டு, தவறாகப் பேசி விடுவோமோ என்ற தயக்கமின்றி ஆங்கிலத்தில் சகஜமாகப் பேசும் ஆற்றலை நீங்கள் நிச்சயம் பெற முடியும்.

வீட்டிலிருந்தபடியே, ஓய்வு நேரத்தில் தபால் மூலம் மேற்கொள்ளும் எளிய பயிற்சி முறை இது! பயிற்சிக்காக தினசரி அரைமணி நேரம் செலவிட்டால் போதும்! இதுவரை இரண்டு லட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இப்பயிற்சியின் மூலம் பயனடைந்துள்ளனர்.

ஆங்கிலத்தில் சரளமாகப்பேச வேண்டும், இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத வேண்டும் என்ற உங்களது நீண்ட நாளைய விருப்பம் இப்புத்தாண்டில் நிச்சயம் நிறைவேறப் போகிறது.

இன்றே ஒரு போஸ்ட் கார்டில் உங்களது முகவரியைத் தெளிவாக எழுதி, கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புங்கள்.

பயிற்சி பற்றிய விபரங்களை உடனே உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

நேர்முகப் பயிற்சியும் உண்டு


விவேகானந்தா கல்வி நிலையம்

9, நடேசன் தெரு, தி.நகர்
சென்னை-600 017.

• நல்ல வேலை • புதிய தொழில் முயற்சி

• உயர் படிப்பு • பதவி உயர்வு • வெளிநாட்டு வேலைவாய்ப்பு •

• வியாபார அபிவிருத்தி • புதிய தொழில் முயற்சி • பதவி உயர்வு •


எங்களைத் தூக்கிட்டு, எம். ஜி. ஆர். புகழை அழிக்கப் பார்க்கிறாங்க, விடுவோமா?
சும்மா போட்டுப் பாருங்க, அட்டகாசமா இருக்கும்!
அதே இருக்கை
ஜி. விஸ்வநாதன்
சென்னா ரெட்டி
தாயே ஜெயலலிதாம்பிகே... பாக்கியம்மா... சசிகலாப்ரியே...
போதும், போதும், வழியாதீங்க... முதல்வரோட ஒரு கோடி யாத்ரா ஸ்பெஷலில வந்தீங்கன்னு நல்லாவே தெரியுது...
அப்பாடா! காலைக் கொஞ்சம் உசரமா தூக்கி வச்சுக்கிட்டா இதமாத்தான் இருக்கு!...
முதல்வர் பதவி
கவர்னர் பதவி
சென்னா ரெட்டி



● புதுமணத் தம்பதி

சேஷன் மாமி!

"எனது கணவரை மிகவும் டென்ஷனான நிலைமையில் காணுவது கடந்த சில மாதங்களாகத்தான். காரணம், உயர் பதவியில் இருப்பவர்கள் யாராயினும் ஒரிரு முறை வாயால் சொல்வதைச் செயலிலும் செய்து காண்பித்தால்தானே அடுத்தவருக்கும் நம்பிக்கை வரும். அன்பு வளரும்!"

கூறுபவர், ஜெயலட்சுமி சேஷன். தலைமைத் தேர்தல் அதிகாரி டி. என். சேஷனின் துணைவியார். 52 வயது ஆகிறது. 1959-ல் திருமணம். 35 வருட இல்லற வாழ்க்கை.

"கடந்த சில மாதங்களாக என்று சொல்கிறீர்கள். அப்படியானால் அதற்கு முன்பு எல்லாம் சரியாக இருந்ததா?"

"ஒரு நிகழ்ச்சி குறிப்பிடுகிறேன். 15.2.1989 மதியம், பம்பாயின் அருகே சமுத்திரத்தின் நடுவே பெரிய பெரிய கப்பல்களைப் பார்வையிட்டு கப்பற் படையினரின் மரியாதையை ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் ஏற்றார். அருகில் பிரதமர் ராஜீவ் காந்தி, ராணுவ மந்திரி கிருஷ்ண சந்திரபந்த் முதலிய பலர் இருந்தனர். மதிய உணவிற்குப் பிரிந்த சமயம், டி. என். சேஷனிடம் பிரதமர் ராஜீவ் காந்தி கூறினார் : 'Mr. Seshan. I intend to make you cabinet secretary. But my senior ministers are scared of you. They prevent me from doing so. Please show sympathy and affection. Don't be rude and crude. பிப்ரவரி 27, 1989ல் எனது கணவருக்கு மந்திரிசபைச் செயலராக நியமனப் பத்திரம் கைக்குக் கிடைத்து விட்டது.

"அப்போது மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த ஷீலா தீக்ஷித் என்னிடம் கூறியது : "தயவுசெய்து தங்களது கணவரிடம் அடிக்கடி நினைவுபடுத்துங்கள். சக அதிகாரிகளிடம் கோபத்தைக் காண்பிக்க வேண்டாம்!" நான் ஷீலா தீக்ஷித்திடம் சொன்னேன் : "My husband is a leopard born without spots!" ஆக, குணத்தை மாற்ற முடியாது!

"எனது கணவரது குடும்பத்தில் அனைவருமே, என் மாமனார் நாராயண ஐயர் உட்பட, மிகவும் கோபக்காரர்கள்தாம். என் மாமனார் என் ஜாதகத்தை 1956லிருந்து "ஓ.கே." செய்யாமல் வைத்திருந்து, 1959ல் தான் திருமணத்துக்கு ஒப்புக் கொண்டார்!"

ஜெயலட்சுமி சேஷனின் 'ஹாபி' அழகான (அரிசி மாவு) கோலம் வாயிற்படியில் போடுவது. பண்டிகை விசேஷ நாட்களில் சேஷனின் அரசு பங்களாவின் (AB-4 பண்டாரா ரோடு, புதுடில்லி) மிகப் பெரிய வாயிற்படியினைப் பார்க்க வேணும். 82 அடிக்கு 82 அடி பெரிய கோலம்! நடுவே ஓர் அகல் விளக்கை ஏற்றி வைத்து விட்டுச்

சுமார் மூன்று மணி நேரம் ஒரே கோலத்தைப் போடுவார் ஜெயலட்சுமி!

''என்னைக் கண்டு பயப்படுவதாக நிருபர்களிடையே எனது கணவர் சேஷன் கூறியது சரியான ஜோக்! அவராவது பயப்படுவதாவது? மற்றவர்களை மிரள வைப்பார். விரட்டுவார். ஆனால் அடிப் படையில் இளகிய மனது உடையவர். பெரிய பெரிய காரியங்களைச் சாதித் துக் கொள்ள வேண்டுமாயின் அவரைப்



● சஷ்டியப்த பூர்த்தி

புரிந்து கொண்டு சரிவர பிரச்னைகளைக் கூறினால் விளக்கமும், தீர்வும் தருவார். ஜெயலலிதாவுடன் இரண்டு மணி நேரம் தமிழகத் தலைமைச் செயலகத்தில் பேசி விட்டு வெளியே வரும் போது, எனது கணவர் கடைசியாகக் கூறியது என்ன தெரியுமா? 'உண்மை எது என்பதைத் துளைத்துத் துளைத்துப் பார்த்துப் புரிந்து கொள்ள வேண்டும். விறைப்பாக நின்று வரட்டு கௌரவம் பார்க்கக் கூடாது. உண் மைக்கு வளைந்து கொடுக்கத்தான் வேண் டும்.' ''

இல்லத்தைச் சுத்தமாக வைத்துக் கொண்டிருக்கிறார் திருமதி சேஷன். காலை யில் சமையல் செய்து முடித்து விட்டால், வீடு முழுவதும் துடைத்து அலங்காரம் செய் கிறார். உதவிக்கு இரண்டு பணியாட்கள் உள்ளனர். வீட்டில் இரண்டு டெலிவிஷன் கள். மாடியில் டிஷ் ஆண்டென்னா. ஏஷியா நெட், ஸ்டார் டீவி, எம்.டீ.வி. என்று பதினைந்து சேனலிலும் இருபத்தி நாலு மணி நேரமும் 'பிக்சர்'! ''போர் அடித்தால் டீவி யில் சானல்களை மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருப்பேன்'' என் கிறார்.

''எங்களுக்குக் குழந்தைகள் கிடை யாது. இவருக்கு வரும் சுமார் 3000 ரூபாய் 'பென்ஷன்' மாதிரிதான். கார ணம், 9000 சம்பளமாயினும் வரு மான வரி, பிடிப்பு போக கையில் ரொக்கமாகக் கொண்டு வருவது ரூ. 2975தான். இதை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று புரியவில்லை!''

ஜெயலட்சுமி வாரத்தில் மூன்று நாட்கள் ஸ்தோத்ர வகுப்பு நடத்து கிறார். சக ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளின் துணைவியர்களைச் சேர்த்துக் கொண்டு ஒரு பஜனை மண்டலியும் நடத்துகிறார். முகுந்த மாலை, நாராயணீயம், ஸ்ரீஸ்துதி, விஷ்ணுசகஸ்ரநாமம் போன்றவற் றைப் படித்து அறிந்திருக்கிறார்.

நவராத்திரி சமயத்தில் சேஷன் தமது துணைவியாரிடம் கூறியது : ''எந் தெந்த நண்பர்களது வீட்டில் கொலு வைத்திருக்கிறார்கள்? அழைப்புகள் வந்திருப்பதை வரிசைப்படுத்தி எழுதி வை. உன்னுடன் நானும் வருகிறேன்!''

அழைக்காத விருந்தாளியாக வந்து சேஷன், பாடவும் செய்வார்! ஜெய லட்சுமி மாமி எந்தக் கொலுவுக்குப் போனாலும் சிறிய பிள்ளையார் விக்ரஹத்தைப் பரிசளிப்பாகக் கொலுப் படிக்கட்டில் வைப்பார்.

டி.என். சேஷனுக்கு 'Z plus' தரத்தில் பாதுகாப்பு உண்டு. எனவே, துணைவி யாருக்கும் ரேடியோவுடன் போலீஸ் 'கார் பின்தொடரும். ஐந்து பெண் போலீஸார் வீட்டு வாயிலில் பாதுகாப்பாக நிற்கிறார் கள்!

பேட்டி : வசந்தா நந்தகுமார்

“துரோகியா?

கேள்வி : 'திராவிட இயக்கங்களுக்கு வருகின்ற சோதனைகள் எதிரிகளாலா அல்லது துரோகிகளாலா?' என்று அண்ணா அறிவாலயத்தில் பட்டிமன்றம் நடத்துகிறார்களே, நீங்கள் எதிரியா அல்லது துரோகியா?

வை. கோபால்சாமி : அறிஞர் அண்ணா, எம்.ஜி.ஆரைத் தி.மு.க.வின் மிகப் பெரும் சொத்தாக - கருவூலமாகப் பயன்படுத்தினார். தி.மு.க.வில் இருந்தவரை எம்.ஜி.ஆர். தாம் முதல்வராகவோ, கட்சித் தலைவராகவோ வர வேண்டுமென்று எண்ணியதில்லை. எந்தச் சூழ்நிலையில் எம்.ஜி.ஆர். வெளியேற நேர்ந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். எம்.ஜி.ஆர். இல்லாத தி.மு.க. என்ன கதிக்கு ஆளானது என்பதும் அனைவருக்குமே தெரியும். ஆக, தி.மு.க.வை, அண்ணாவின் மறைவுக்குப் பிறகு, கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைத்ததே கலைஞர்தான். இந்த உண்மையை இன்றைய தி.மு.க. தொண்டர்கள் புரிந்து கொண்ட காரணத்தினால்தான், கலைஞர் தமது கனவிலும் கண்டிராத அளவுக்குக் குமுறும் எரிமலையாக வெடித்திருக்கிறார்கள். அவரது தலைமையின் எதேச்சாதிகாரப் போக்கை எதிர்த்து, நாங்கள் எடுத்திருக்கும் 'இன்றைய முயற்சிக்குத் துணை நிற்கிறார்கள்.

கேள்வி : அ.தி.மு.க.விலிருந்து உங்களுக்குப் பணம் வருவதாகச் சொல்கிறார்களே?

“அறிவாலயத்தை மட்டுமல்ல; மற்ற சொத்துக்களையும் கலைஞரே பயமின்றி ஆண்டு அனுபவிக்கட்டும். எங்களுக்குத் தேவையானதெல்லாம் அண்ணாவின் கொள்கைகளும் லட்சியங்களும் அவற்றைத் தங்களின் மூச்சாகக் கொண்டிருக்கும் லட்சோபலட்சம் தொண்டர்களும்தான்!”



வை.கோ.: ஆரம்பத்தில் கலைஞர் என்ன சொன்னார்? உளவுத் துறை தி.மு.க.வைப் பிளக்கப் பார்க்கிறது என்றார். பிறகு தி.மு.கவை உடைப்பதற்கு விடுதலைப் புலிகளிடமிருந்து பணம் வருவதாகச் சொன்னார். அதன் பிறகு ஜெயலலிதாவும், அ.தி.மு.க. அரசும் தி.மு.க.வை உடைக்கப் பணம் தருவதாகச் சொன்னார். இப்போது, ஜெயலலிதாவோ, அ.தி.மு.க. அரசோ சம்பந்தப்படவில்லை; அ.தி.மு.க.வைச் சேர்ந்த சிலர்தான் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள் என்று அந்தர் பல்டி அடித்து இருக்கிறார். ஜெயலலிதாவின் ஆட்சியை மிகக் கடுமையாக விமர்சித்து வரும் என்னைப் பார்த்து, நீண்ட கால அரசியல் இயக்கத்தை நடத்தி வந்த கலைஞரா இப்படியெல்லாம் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறார் என்று வியப்பாகவும் வேத

னானா?”



னையாகவும் இருக்கிறது.

கேள்வி : அ.தி.மு.க.வுக்கும் உங்களுக்கும் தொடர்பு இருக்கிறதா, இல்லையா? பணம் வருகிறதா இல்லையா?

வை.கோ.: போயஸ் தோட்டத்திலிருந்து கலைஞருக்குக் கோடி கோடியாகப் பணம் வருகிறது என்று நான் குற்றம்சாட்டினால் அது எந்த அளவுக்குப் பொய்யோ அதே போல்தான் கலைஞருடைய குற்றச்சாட்டும் பச்சைப் பொய்யானது.

கேள்வி : நீங்கள் எப்போது கலைஞருக்கும் தி.மு.க.வுக்கும் விரோதமாக நடக்க ஆரம்பித்தீர்கள்?

வை.கோ.: ஒருபோதுமே நான் விரோதமாக நடக்க ஆரம்பிக்கவில்லை. எனக்கு முன்னால் கட்சி முன்னணியினரை வைத்துக் கொண்டே 'கட்சியில் புதிய சம்பந்துகள் தோன்றி விட்டார்கள்' என்று அவர் பல முறை ஜாடை பேசியிருக்கிறார். அப்போதும் நான் வாயைத் திறந்தவனல்லன். நான் கழக முன்னணிப் பேச்சாளர்களில் ஒருவனாக இருந்தும் என்னை வைத்துக் கூட்டம் ஏற்பாடு செய்யக் கட்சியினர் அஞ்சினார்கள். திருச்சியில் என்னை அழைத்துக் கூட்டம் நடத்திய மாவட்டச் செயலாளரை அழைத்து, 'வை.கோவை வைத்தா கூட்டம் போடுகிறீர்கள்? அவன் என்ன கட்சியில் முக்கியமான ஆள் என்று நினைத்துக் கொண்டீர்களா?' என்று மிரட்டியிருக்கிறார்.

கேள்வி : இதற்கு என்ன காரணம் என்று நீங்கள் கலைஞரிடம் நேரடியாகக் கேட்டீர்களா?

வை.கோ.: கேட்டேன். நான் எந்த நிலையிலும் உங்களுக்கு விரோதமாக நடந்து கொண்டவனில்லையே, அப்படியிருக்க, நீங்கள் எதற்காக என் மீது வெறுப்புக் காட்டுகிறீர்கள் என்று அவரிடமே கேட்டேன். அதற்கு அவர், 'நீங்கள் ஏன் முருகன் மாதிரி உலகத்தைச் சுற்றி வருகிறீர்கள்? பிள்ளையார் மாதிரி என்னையே சுற்றி வர வேண்டியதுதானே?' என்றார்.

ஆக, நான் பொதுக் கூட்டம் பேசுவதே கலைஞருக்குப் பிடிக்கவில்லை. ஆயினும் நான் கட்டுப்பாடு கருதி மௌனமாகத்தான் இருந்தேன்.

கேள்வி : சமயம் கிடைக்கும்போதெல்லாம் உங்களை நீங்கள் முன்னிலைப் படுத்திக் கொண்டீர்கள் என்று சொல்லப் படுகிறதே?

வை.கோ.: அதாவது நெல்லையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் கலைஞரை விட்டு விட்டு, சில கழகத் தோழர்கள் என் மீது பூக்களை வீசியதாகக் கலைஞர் தஞ்சாவூரில் பேசியிருக்கிறார். அதைத்தான் நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் என்று கருதுகிறேன். உண்மையில் அந்தப் பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்த போது, கலைஞர் படங்களைத் தவிர, என் படங்கள் ஒட்டப் பட்டிருந்ததைப் பார்த்த நான், அவற்றை உடனே கிழித்தெறிய ஏற்பாடு செய்தேன். அந்த அளவுக்குக் கலைஞருக்கே நான் முக்கியத்துவம் கொடுத்தேன். நான் ஈழத்திற்குச் சென்று வந்த பிறகு - கலைஞர் என் மீது கடுமையான கண்டனம் தெரிவித்த பிறகு - கலைஞர் என் மீது வெறுப்போடு இருக்கிறார் என்று நினைத்துக் கொண்டிருந்த கழகத் தோழர்கள் - முதன் முதலாக அந்தப் பொதுக் கூட்டத்தில் கலைஞரோடு என்னைப் பார்த்த சந்தோஷத்தில் அவர்களையறியாமலேயே சிலர் பூக்களை என் மீதும் தூவியிருக்கிறார்கள். அவ்வளவுதான். போஸ்டர் ஒட்டியதும் அந்த நோக்கில்தான். நான் என்னையே முன்னிலைப்படுத்திக்

கொள்ள ஆசைப்பட்டிருந்தால், அதன் பிறகு கலைஞர் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்துக்கு வந்த போது ஏற்பாடு செய்திருந்த கழக நிகழ்ச்சியை ஊண் உறக்கமின்றிப் பாடுபட்டுச் செய்திருப்பேனா? அந்த நிகழ்ச்சிக்காக நான் ஒட்டியிருந்த கலைஞர் படம் தாங்கிய போஸ்டர்கள் பற்றி முரசொலியில் குறிப்பிடுகிற போது, ''தடாகத்தில் நெருக்கமாகக் காட்சியளிக்கும் தாமரையிலைகளுக்கு அவைகளை ஒப்பிடலாம்'' என்று கலைஞர் பாராட்டியிருக்கிறாரே! இப்போது கலைஞர் கூறுவது போல், பூக்கள் தூவிய காலத்திலேயே நான் தலைவனாக முயற்சி செய்திருந்தால் அப்படியொரு வரலாறு காணாத நிகழ்ச்சியை நான் எப்படி ஏற்பாடு செய்திருப்பேன்?

கேள்வி : நீங்கள் நாகூர் அனீபாவைச் சந்தித்து உங்களைப் பற்றிப் பாடச் சொன்னீர்களாமே?

வை.கோ.: இந்தப் பண்பாடற்ற குற்றச்சாட்டையும் கலைஞர்தான் சுமத்தியிருக்கிறார். நான் ஈழத்துக்குச் சென்று வந்த பிறகு, இசை முரசு நாகூர் அனீபாவைச் சந்தித்துப் பாடச் சொன்னது உண்மைதான். ஆனால், என்னைப் பற்றியல்ல; ஈழத்திலுள்ள இயக்கங்கள் பற்றியும் நான் பாடச் சொல்லவில்லை. முழுக்க முழுக்க ஈழத் தமிழர்கள் படும் துயரங்கள் பற்றித்தான் பாடச் சொன்னேன். அவர் மறுத்து விட்டார். நானும் விட்டு விட்டேன். என்னைப் பற்றியே நான் ஒருவரை பாடச் சொல்லிக் கேட்கிற அளவுக்கா நான் பண்பாடற்றவனாகி விட்டேன்!

கேள்வி : நீங்கள் கட்சியின் அனுமதியின்றி இலங்கைக்குச் சென்று வந்ததால் தி.மு.க.வுக்கு ஒரு தர்மசங்கடமான நிலை ஏற்பட்டதென்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?

வை.கோ.: என்னால் கட்சிக்கு எந்த நிலையிலும் தர்மசங்கடம் ஏற்பட்டதேயில்லை. நான் இலங்கைக்குச் சென்று வந்த பிறகுதான் 'தமிழ் ரத்தம் குடித்தோடும் வீரன் பிரபாகரன்' என்றும் 'என் தமிழ்ச் சாதி மக்களைக் கொன்று குவித்த இந்திய ராணுவத்தை நான் வரவேற்கப் போக மாட்டேன்' என்றும் கலைஞர் சட்டசபையிலேயே அறிவித்தார் - அப்படி அவர் அறிவித்தது தவறு என்று இப்போதும் நான் சொல்ல மாட்டேன் என்றாலும் நான் ஓர் உதாரணத்துக்காகச் சொல்கிறேன் - அந்த அறிவிப்பை விடவா எனது ஈழப் பயணம் கட்சிக்கு ஒரு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியிருக்க முடியும்? ஒருபோதும் இல்லை.

கேள்வி : கடந்த இடைத்தேர்தலின் போது, நீங்கள் கட்சியிட்ட பணியை ஒழுங்காகச் செய்யவில்லையாமே?

வை.கோ.: கட்சி எனக்கு எந்தப் பணியையுமே கொடுக்கவில்லை என்பதுதான் வருத்தத்துக்குரிய விஷயம். இருப்பினும் நான் தேர்தல் பணிச் செயலாளராக இருப்பதால் கட்சி அழைக்கவில்லையே எப்படிப் போவது என்கிற சுயமரியாதையையெல்லாம் இந்த விஷயத்தில் பார்க்கக் கூடாது என்பதால், நானே எனது தேர்தல் பிரசாரப் பயணத் திட்டத்தை வகுத்தேன். ஒவ்வொரு நாளும் சுமார் நாற்பது கிராமங்களிலாவது தேர்தல் பிரசாரம் செய்யும்படியாக எனது பிரசாரத் திட்டம் அமைந்தது. இதைப் பாராட்டாவிட்டால் பரவாயில்லை. ஆனால் கலைஞர் இகழ்ச்சியாகப் பேசினார் என்று கேள்விப்பட்ட போது துடித்துப் போனேன்.

கேள்வி : இடைத் தேர்தல் பிரசாரம் என்பது முக்கியமான ஒரு விஷயம் என்கிற நிலையில், அதில் உங்களை ஒதுக்கியதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

வை.கோ.: எனக்கு கிராமப்புற இளைஞர்கள் மத்தியில் வளர்ந்து வருகிற செல்வாக்கு கலைஞருக்குப் பிடிக்கவில்லை. எனக்காக இரண்டு பேர் கைத்தட்டினால் கூட கலைஞரால் பொறுத்துக் கொள்ள முடியாமல் போனது. காரணம், எனது செல்வாக்கு அவரது வாரிசுக்கு இடைஞ்சலாகி விடுமே என்கிற கவலைதான். அதனால் தான் நான் போட்டித் தலைவராக உருவாகி வருகிறேன் என்றும் அறிக்கை விட்டார். இதுவரையில் கலைஞருக்கான போஸ்டர்களை விடப் பெரிய போஸ்டர்கள் கட்சியில் வேறு யாருக்கும் அடிக்கப்பட்டதில்லை. ஸ்டாலினுக்கு மட்டும்தான் அத்தகைய போஸ்டர் அடிக்கப்பட்டது. கலைஞர் இருக்கும்போதே ''அடுத்த முதல்வர்'' என்று ஸ்டாலின் வர்ணிக்கப்பட்டார். ஆக, கலைஞருக்குப் போட்டியாகச் செயல்பட்டது நானல்ல; ஸ்டாலின்தான்.

கேள்வி : விடுதலைப் புலிகளையும் உங்களையும் இணைத்து சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு உளவுத் துறையின் தகவல் அல்ல; இவர்களாகவே செய்த சதிதான் என்று எப்படிக் கூறுகிறீர்கள்?

வை.கோ.: 'விடுதலைப் புலிகள் கோபால்சாமியைப் பயன்படுத்தி தி.மு.க.வை உடைக்கப் பார்க்கிறார்கள். கோபால்சாமி தி.மு.க.விலுள்ள புற்றுநோய்' என்று சுப்பிரமணியம் சாமி சொன்ன போது, கலைஞர் வாயையே திறக்கவில்லையே, அது ஏன்? என் தம்பி தடாவில் கைது செய்யப்பட்ட போது, அவனுக்கும் கட்சிக்கும் சம்பந்தமேயில்லை என்று அறிக்கை விட்ட கலைஞர், என் தம்பி மேலுள்ள குற்றச்சாட்டை விடக் கடுமையான குற்றச்சாட்டின் கீழ் சுப்புலட்சுமி ஜெகதீசன் கைது செய்யப்பட்ட போது மட்டும் தடாவைக்

கண்டித்து அறிக்கை விடுவானேன்? ஆக, என் விஷயத்தில் கலைஞரின் அணுகுமுறையே வேறுவிதமாகத்தான் இருந்தது. இல்லையென்றால், 'எனக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சம்பந்தமேயில்லை; கலைஞரின் உயிரைக் காக்க நான் என்னுடைய உயிரையும் தரத் தயாராயிருக்கிறேன்!' என்று நான் கொடுத்த அறிக்கையை இன்றுவரை முரசொலியில் வெளியிடாமல் இருந்திருப்பார்களா? என்னால் கலைஞருடைய உயிருக்கு ஆபத்து இருப்பதாகவே - ஒரு பேச்சுக்கு வைத்துக் கொள்வோம். நாங்கள் பொதுக் குழுவைக் கூட்டச் சொன்ன போது, இவர் ஏன் கூட்டவில்லை? கலைஞரின் உயிருக்கே ஆபத்து; அதுவும் கட்சியின் முன்னணியிலுள்ள ஒருவனே அதில் சம்பந்தப்பட்டிருக்கிறான் என்பதை விடவா பொதுக் குழுவைக் கூட்டுவதற்கு வேறொரு முக்கியமான காரணம் தேவை?

கேள்வி : பொதுக் குழுவைக் கூட்டினால், அந்த நிலையில் உங்கள் தரப்பால் கலாட்டா ஏதும் நிகழ வாய்ப்புண்டு என்று கலைஞர் கருதியிருக்கலாமே?

வை.கோ.: கலாட்டாவும் வன்முறையும் கலைஞரால் ஏவி விடப்பட்டதே தவிர, என்னால் அல்ல. இல்லையென்றால் விஜயா தாயன்பன் வீடு தாக்கப்பட்டிருக்காது. தென்னாற்காடு மாவட்டத்தில் முருகன் என்ற இளைஞன் கொல்லப்பட்டிருக்க மாட்டான். செங்குன்றம், காரைக்குடி ஆகிய இடங்களில் என்னுடைய கார் தாக்கப்பட்டிருக்காது. வன்முறை எங்களுக்குப் பழக்கமானதே அல்ல.

கேள்வி : அறிவாலயத்தைக் கைப்பற்றப் போவதாக உங்கள் தரப்பில் சொல்லப்பட்டதே, அது பலாத்காரமாகாதா?

வை.கோ.: நாங்கள் அப்படிச் சொல்லவேயில்லை. அறிவாலயம் தி.மு.க.வுக்குச் சொந்தமானது அல்ல என்று கலைஞர் சொன்னதைத்தான் நாங்கள் எதிர்த்தோமே தவிர, அறிவாலயத்தைக் கைப்பற்றுவோம் என்று சொல்லவில்லை. இப்போதும் சொல்கிறேன். அறிவாலயத்தை மட்டுமல்ல; மற்ற சொத்துக்களையும் கலைஞரே பயமின்றி ஆண்டு அனுபவிக்கட்டும். எங்களுக்குத் தேவையானதெல்லாம் அண்ணாவின் கொள்கைகளும் லட்சியங்களும் அவற்றைத் தங்களின் மூச்சாகக் கொண்டிருக்கும் லட்சோபலட்சம் தொண்டர்களும்தான்!


கேள்வி : நீங்கள் அண்மையில் திருச்சியில் கூட்டிய பொதுக் குழு, கட்சியின் சட்டதிட்டங்களின்படி செல்லுபடியாகக் கூடியது தானா?

வை.கோ.: கழகத்தின் சட்டதிட்ட விதிகள் 37-ன் படி (அதுதான் கடைசி விதி) பொதுக் குழு கூடி தீர்மானங்கள் கொண்டு வரவும், திருத்தவும் மாற்றவும் அதிகாரம் இருக்கிறது. அவர்கள் சொல்வது போல் மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிடியினர் கூடித்தான் செய்ய வேண்டும் என்று எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. எனவே, நாங்கள் கூட்டிய பொதுக்குழு சட்டப்படி சரியானது. நாங்கள் அதில் எடுத்த முடிவுகளும் சட்டப்படி சரியானவை.

கேள்வி : நீங்கள் ஏன் புதிய கட்சி ஆரம்பிக்காமல், போட்டி தி.மு.க. நடத்துகிறீர்கள்?

வை.கோ.: நாங்கள் அண்ணாவின் கொடியையும் கொள்கையையும் நேசிக்கிறோம். தமது குடும்பச் சொத்தாகக் கட்சியைப் பயன்படுத்தும் கலைஞரின் எதேச்சாதிகாரப் போக்கினால் கட்சி மேலும் சிதைந்து விடக் கூடாது என்பதால்தான் கட்சியை அவர்களிடமிருந்து மீட்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். எங்களின் இந்த முயற்சிக்குத் தொண்டர்கள் எங்களுக்குத் தோள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், புதிய கட்சி என்கிற நிலை எங்களுக்கெதற்கு?

பேட்டி : இளங்கோவன்
அட்டை வண்ணப்படம் : ஆர். கண்ணன்
படங்கள் : பாலாஜி



அடுத்த இதழ்...

வாசகர்களே தயாரிக்கும் பொள்ளாச்சி நகரச் சிறப்பிதழ்

- ●● பொள்ளாச்சி சந்தையிலே...
- ●● பொள்ளாச்சியில் ஒரு தொழில் புரட்சி!
- ●● 'அம்மா பார்த்துக்குவாங்க!' - எம். எல். ஏ. பேட்டி


மங்களம்
பொங்குக !
உங்கள் அன்புக்குரிய வாழ்க்கைத்
துணையின் பேரில், துகரின் ஏதேனும்
ஒரு டெபாஸிட் திட்டத்தில் 31 ஜனவரி
1994 முன் முதலீடு செய்து . துகரின் தனித்தன்
மையான 'மங்கள' வாழ்த்துக்களைப் பெறுங்கள்.
DUGAR
KUM
KUM
DEPOSIT
• HIRE PURCHASE • LEASING • PROPERTY DEVELOPMENT • PUBLIC DEPOSITS • MERCHANT BANKING • FOREIGN EXCHANGE
தலைமை அலுவலகம்: 'துகர் டவர்ஸ்', 123, மார்ஷல்ஸ் ரோட், எழும்பூர்,
சென்னை-600 008. ☎ 828 35 35 (10 lines) Tlx: 041-6670 DUGR IN
Fax: 044-8281122. Grams: DUGFINANCE.

SCHEME I – FIXED DEPOSITS

PERIOD	RATE OF INTEREST PER ANNUM	INTEREST PAYABLE
1 YEAR	14%	MONTHLY
2 YEARS		
3 YEARS		
4 YEARS	14.16%	QUARTERLY
5 YEARS		

MINIMUM OF Rs. 3,000/- AND IN MULTIPLES OF Rs. 1,000/-

SCHEME II – CUMULATIVE DEPOSITS

INITIAL DEPOSIT	AMOUNT PAYABLE AFTER				
	1 YEAR	2 YEARS	3 YEARS	4 YEARS	5 YEARS
Rs. 1,000/-	Rs. 1,150/-	Rs. 1,321/-	Rs. 1,518/-	Rs. 1,745/-	Rs. 2,006/-
ANNUAL YIELD	15%	16.05%	17.27%	18.62%	20.12%

MINIMUM OF Rs. 1,000/- AND IN MULTIPLES OF Rs. 1,000/-

Particulars required to be specified as per Non-Banking Financial Companies and Miscellaneous Non-Banking Companies (Advertisement) Rules, 1977.

(a) Name of the Company: DUGAR FINANCE INDIA LIMITED

(b) Date of Incorporation: 20th May, 1981.

(c) Business: Hire Purchase, Leasing, Property Development, Merchant Banking, Foreign Exchange & Portfolio Management.

(d) Branches: Mount Road, Mylapore, T. Nagar, Adayar (Madras), Bangalore, Calicut, Coimbatore, Ernakulam, Gudur, Madurai, Nellore, Salem, Secunderabad, Tirupati, Visakhapatnam.

(e) Management: The Company is managed by its Managing Director under the supervision of the Board. Grams: DUGINVEST

(f) Names, Addresses and occupation of the Directors

Name	Address	Occupation
DR. C. ANNA RAO (Chairman)	Chellikani Anna Rao Road, Sripuram Colony, Tirupathi - 517 507.	Former Chairman, Board of Trustees, Tirumala Tirupathi Devasthanams
Shri B. LALCHAND MARLECHA (Vice-Chairman)	30, Mannarswami Koil Street, Royapuram, Madras - 600 013.	Merchant & Banker
Shri C.R. RAO	'White House' Gudur - 524 101 (A.P.)	Company Director
Shri V. RAMACHANDRAN	24, Nungambakkam High Road, Madras - 600 034.	Senior Advocate
Shri C.V. KRISHNAIAH	'Sree Krupa', Nehru Nagar, Gudur - 524 101 (A.P.)	Mine Owner & Company Director
Shri R. RAMAKRISHNAN	'Hari', 14, Seethamma Road, Madras - 600 018.	Industrialist & Former Member, Rajya Sabha
Shri M.K. PANDURANGA SETTY	'Prashanth', 27, Bull Temple Road, Bangalore - 560 004.	Industrialist & Company Director
Shri K.S.T. PANI	'Suseelam' 45, Mandapam Road, Kilpauk, Madras - 600 010.	Chief General Manager, (Retd.) SBI & Company Director
Shri T. PADAM DUGAR	21, Commander-in-Chief Road, Madras - 600 105.	Company Director
Shri N. TARACHAND DUGAR (Managing Director)	21, Commander-in-Chief Road, Madras - 600 105.	Industrialist & Banker

(g) & (h) Profits of the Company, before and after making provision for Tax and Dividends, declared by the Company for the three financial years immediately preceding the date of advertisement.

Year ended	Profit before provision for tax (Rs. in lakhs)	Profit after provision for tax (Rs. in lakhs)	Dividend Declared
30-06-1991	48.99	48.99	25%
30-06-1992	81.55	79.26	25%
30-06-1993	92.95	91.90	25%

(i) Summarised financial position of the Company as appearing in the two latest Audited Balance Sheets.

Liabilities	30-06-93 (Rs. in lakhs)	30-06-92 (Rs. in lakhs)	Assets	30-06-93 (Rs. in lakhs)	30-06-92 (Rs. in lakhs)
Share Capital	300.00	300.00	Fixed Assets	590.7	532.36
Reserves & Surplus	711.59	94.36	Investment	64.69	27.00
Secured Loans	625.77	664.49	Current Assets	1856.32	1610.21
Unsecured Loans	1303.37	924.81	Loans & Advances	212.74	199.33
Current Liabilities & Provisions	442.60	400.77	Miscellaneous Expenditure	58.81	15.55
	2783.33	2384.43		2783.33	2384.43

(j) Contingent liabilities as on 31.03.93

	30-06-93 (Rs. in lakhs)	30-06-92 (Rs. in lakhs)
(a) Estimated amount of contracts remaining to be executed on capital account and not provided for	1.00	3.00
(b) Counter guarantees to Bankers	5.00	5.00
The Company can raise by way of deposits under the directions	3517.80	3788.12
Aggregate of deposits actually held	1303.37	924.81

(k) **The Company has no overdue deposits other than unclaimed deposits.**

(l) The Company hereby declares

(i) that the Company has complied with the applicable provisions of the directions of Reserve Bank of India.

(ii) that the compliance with the directions does not imply that the repayment of deposits is guaranteed by the Reserve Bank of India, and

(iii) that the deposits accepted by the Company will be unsecured and rank pari passu with other unsecured liabilities.

This advertisement is issued on the authority and in the name of the Board of Directors of the Company. The text was approved by the Board of Directors on 23rd December 1993 and a copy duly signed by a majority of the Directors has been filed with the Regional Office of Reserve Bank of India, Department of Financial Companies, Bangalore.

By Order of the Board
For DUGAR FINANCE INDIA LIMITED
N. TARACHAND DUGAR
Managing Director

Madras
23rd December 1993.

DUGAR
FINANCE INDIA LTD

கிளைகள்:

• அடையார்	☎ 4917700	• கூடூர்	☎ 830	• பெங்களூர்	☎ 5584422
• மௌண்ட் ரோடு	☎ 831888	• மதுரை	☎ 33663	• கோழிக்கோடு	☎ 63344
• மைலாப்பூர்	☎ 72256	• நெல்லூர்	☎ 27576	• கோவை	☎ 37867
• தி. நகர்	☎ 441541	• சேலம்	☎ 68769	• எர்ணாகுளம்	☎ 369515.
• செகந்திராபாத்	☎ 846006	• திருப்பதி	☎ 22990	• விசாகபட்டினம்	☎ 46581.

Kalki Shopping Page

Kalki Shopping Page

தங்க நகையில்
மங்கையர் எண்ணம்
'எங்கள் கைவண்ணம்



22ct தங்கம், வைர,
வெள்ளி நகைகளுக்கு

சாந்தி கோல்டு ஹவுஸ்

எங்கள் நகை சேமிப்புத் திட்டத்தில்
சேர்ந்து பயன்பெறுங்கள்.
சேரும் அங்கத்தினர்களுக்கு
மாதாந்திர தவணைத் தொகைக்கு
ஏற்ற பரிசுப் பொருள்
அளிக்கப்படும்.

72, உஸ்மான் ரோடு,
தி. நகர்,
சென்னை - 600 017.
Phone : 441730.

புத்தம் புதிய டிசைன்களில்
உயர்ரக மதுரை சுங்குடி
புடைவைகளுக்கு

RAMACHANDRA SAREES



(மதுரை சுங்குடி
புடைவைகளின்
உலகம்)

37-B, Arya Gowder Road,
Postal Colony Bus Stop
West Mambalam, Madras - 33.

வழங்குவோர் :
ராமச்சந்திரா சாரீஸ்,
20-B, குயவர்பாளையம் ரோடு,
மதுரை - 9.

எங்களிடம் இப்பொழுது தரமான
சென்னை தேவேந்திரா
புடைவைகளும் கிடைக்கும்



ஈ. வி. பி. யில் எம். எம். டி. ஏ. வீட்டுமனை விற்பனை

சென்னை - போரூர் - அய்யப்பன்தாங்கல்
பஸ் நிலையம் பின்புறம்.

ஈ. வி. பி. பிரபு அவின்யூ

எம். எம். டி. ஏ. அப்ரூவ்டு மனையின் விலை ரூ. 42,000/- மட்டுமே.
முதலில் அட்வான்ஸ் ரூ. 10,000/-
மீதியை 2 மாதங்களில் செலுத்தலாம்.

பிரதி ஞாயிறு தோறும் மனையைப் பார்வையிடலாம்

ஈ. வி. பி. எஸ்டேட்,

27-வி, மேட்லி சாலை, போரூர்,
சென்னை - 116, போன் : 4828515.

ஈ. வி. பி. பண்ணைத் தோட்டத்தில் ரூ. 1100/-, ரூ. 1,400/- முதலீடு செய்து
45.5% வரை லாபம் பெறுங்கள்.





கல்கி



1994
ஜனவரி 23
மலர் : 52
இதழ் : 26
ஸ்ரீமுக
தை 10

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

தெய்வமான தெய்வம்!

நடமாடும் தெய்வமாக நம்மிடையே இருந்தவர், நிலையான தெய்வமாக நம் இதயத்தில் குடிகொண்டு விட்டார்.

பழுத்த ஞானப்பழம் ஒன்று உதிர்ந்தது. எந்த பூமியிலிருந்து பிறந்து வந்ததோ, அந்தப் பூமியுடன் இரண்டறக் கலந்து விட்டிருக்கிறது.

நம்மிடம் கருணை கொண்டு, இறைவனிடமிருந்து பிரிந்து வந்து நமக்கு அருளியவர், திரும்பவும் இறைவனுடன் ஐக்கியமாகியிருக்கிறார்.

அத்வைதத்தைப் போதித்து அத்வைதியாக வாழ்ந்து காட்டியவர், அத்வைதமாகவே மாறி விட்டிருக்கிறார்.

ஜீவன் முக்தர், இன்று ஜீவனையும் துறந்து, நிறைந்த நிறைவான முக்தி நிலை அடைந்தார்.

இது வருத்தப்பட வேண்டிய விஷயமல்ல. அப்படி வருந்தி அழுதோமானால் பெரியவாளின் அருள்வாக்குகளிலிருந்து நாம் ஏதொன்றும் கற்கவில்லை என்று அர்த்தமாகி விடும்.

அவர் அமைதி அடைந்த நிலை நமது உள்ளத்திலும் அமைதி ஏற்படுத்த வேண்டும்.

மகான்களுக்கு மரணம் என்பது இல்லை. பரம்பொருளுடன் ஒன்றி, கடவுளாகவே மதிக்கப்படுகிறவர்களுக்கு மரணமிலாப் பெருவாழ்வுதான்.

சரீரம் இங்கில்லை. ஆனால் அந்த இனிய எளிய உபதேசங்கள் எங்கும் போய் விடவில்லை. அவை மூலம் வாழ்கிறார்; அவருக்கே உரிய அருள்பார்வையையும் குறுஞ் சிரிப்பையும் நம் மீது செலுத்துகிறார். நாம் ஏற்கத் தயாராக இருக்கிறோமா என்பதுதான் கேள்வி.

''தேசத்துக்குப் பேரிழப்பு'' என்று புலம்புவதிலே என்ன அர்த்தம்? அவ்வாறு காஞ்சிக்கு ஓடிச் சென்று அறிக்கை விட்டவர்களும் போகாமலே அறிக்கை விட்டவர்களும் அவர் உபதேசங்களை உணர்ந்து நடந்தாலே போதும். நாட்டுக்கு இழப்பு ஒன்றுமில்லை; பெருஞ்சிறப்புத்தான் என்பதை உணர்வார்கள். ஆனால் 'மகான்' என்றும் 'மேதை' என்றும் வார்த்தைகளை அடுக்குவார்களே தவிர, அவர் காட்டிய வழியில் நடக்க மாட்டார்கள்! நடந்தால் நாடு நன்றாகி விடுமே!

எத்தனை ஞானம்! அந்த மெய்யான ஞானத்தின் விளைவாகப் பிறந்த உண்மையான அடக்கம். அதனால்தான் அவரால் எம்மதமும் சம்மதம் என்று காண முடிந்தது. உலக ஞானிகளையெல்லாம் தம்பால் ஈர்க்க முடிந்தது. அவர் முன் அவர்களும் அடங்கினார்கள்.

எளியோரையும் கவர்ந்த ஏந்தல் அவர். அவர்கள் தங்கள் துயரங்களையெல்லாம் அவரிடம் சமர்ப்பித்து நெஞ்சச் சுமை குறைத்தார்கள். வேறு பலர் அவர் ஆசி பெற்று விட்டால் தங்கள் பாபங்கள் போய் விடும் என்று நம்பி வந்தார்கள். அவர்களின் சுமையைக் கனிவுடனும் பரிவுடனும் அவர் ஏற்றார் - ஏசு சிலுவை சுமந்தது போல. அது அவருக்கு விதிக்கப்பட்ட தர்மம். அது போல் இன்னும் எத்தனையோ தர்மநெறிகள். எதிலும் குறையின்றி நிறைவேற்றினார்.

தம்மை அணுகி வந்தவர்களையெல்லாம் சிறிதும் பெரிதுமான எத்தனையோ நற்பணிகளில் ஈடுபடுத்தினார். அதன் மூலம் அவர்களுக்கு மன அமைதியையும் சமூகத்துக்கு நன்மையையும் ஏற்படுத்தினார். அவராகவே செய்த, அவரது தூண்டுதலால் நடந்த நற்பணிகள் என்று ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் ஒரு அரசின் சாதனையையே விஞ்சும்.

என்ன கூறினார் காஞ்சி முனிவர்? இறையுணர்வுடனும் குருபக்தியுடனும் ஒவ்வொரு காரியத்தையும் செய்வோமானால் தவறு செய்யாதிருப்போம். நமது வாழ்க்கை செம்மையாக, நேர்மையாக அமையும். அச்சம் நம்மை அணுகாது.

அறிவாற்றலும் செல்வமும் மனிதனுக்கு மனிதன் வேறுபடலாம். ஆனால் தர்மம் என்பது எல்லோருமே சுலபமாகக் கடைப்பிடிக்கக்கூடியது. அதற்கு அளவுகோல் மனச்சாட்சியே. தார்மிகபலமும் பக்தியும், செல்வத்தையும் அறிவாற்றலையும் விடவும் சக்திவாய்ந்தவை; சிறந்தவை. இதனுடன் நட்பையும் அன்பையும் வளர்த்துக் கொண்டால் எல்லோருடைய இதயங்களையும் வென்று விடலாம். ''மைத்ரீம் பஜத'' என்றல்லவா ஐ.நா. சபையில் பாடச் செய்தார்!


குடும்ப அமைதியிலிருந்து குவலயத்தின் அமைதி வரை அனைத்தையும் உள்ளடக்கிய செய்தி இது. ஏற்று, நடந்து காட்டப் போகிறோமா?

துணுக்'ஸ்

அரபு நாடுகளில் ஒட்டக ஒட்டப் பந்தயம் நடைபெறுவது வழக்கம். மணிக்கு 40 கி.மீ. வேகம் ஓடி முதல் பரிசை வென்ற ஒரு பெண் ஒட்டகத்தை, சமீபத்தில், தமது பெயரை வெளியிட விரும்பாத யூ.ஏ.இ. நாட்டவர் ஒருவர், 1,34,000 அமெரிக்க டாலர் கொடுத்து வாங்கி இருக்கிறார்.

ஆதாரம் : இந்தியன் எக்ஸ்பிரஸ்

தகவல் : கல்லிடை ஏ.கே. சங்கர்.




ஆக்டோபஸ் அதிசயங்கள்!

எட்டுக்கை உள்ள Octopus உடுமீன் என்று அழைக்கப்படுகிறது; இது பற்றிய சில அதிசயத் தகவல்கள் :

இது இரை பிடிக்கும் போது வாய் வழியாகத் தன் வயிற்றை வெளியே தள்ளி இரையைக் கவர்ந்து உண்கிறது. இதன் உணவு சிப்பி மீன்கள், சோழி மீன்கள், நத்தைகள் முதலியன.

ஏதாவது ஒரு 'கை'க்கு ஆபத்து ஏற்பட்டுத் துண்டாக்கப்பட்டு விட்டால் அதை முழுமையாக உதறிவிடும். மீண்டும் அந்த இடத்தில் புதிய 'கை' முளைத்து விடும்!



பெண் மீன்களுக்குப் பற்றாக் குறை ஏற்பட்டு விட்டால் ஆண் ஆக்டோபஸ்கள் பெண் ஆக்டோபஸ்களாக மாறி இன விருத்தி செய்கின்றன!

ஆதாரம் : யுனெஸ்கோ கூரியர்.

- எஸ். ஆலன்.

எல்லாமே இரவல்தான்!

அந்த விளையாட்டின் அம்பயர்கள் கண்தானம் மூலம் பார்வை பெற்றவர்கள்! இதை விட வியப்பான விஷயம் உண்டு. சியாட்டிலில் நடைபெற்ற அந்த மென் பந்துப் போட்டியில் 'கிட்னீ ஸ்' என்ற அணி, 'ஹார்ட் பீட்ஸ்' அணியைத் தோற்கடித்தது. முதலில் கூறிய அணியில் உள்ளவர்கள் மாற்றுச் சிறுநீரகம், ஈரல் இவை பொருத்தப்பட்டவர்கள்! அவர்களது எதிர் அணியினர் இருதய பை-பாஸ் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள்!

நன்றி : ஹெல்த் அண்டு நியூட்ரிஷன்

அமெரிக்க அப்பாக்கள்!

அமெரிக்காவில் குழந்தைகளைக் கவனிக்கும் 'பேபி சிட்டர்'கள் (Baby sitters) கிடைப்பது வர வர அரிதாகி விட்டது. அதனால் வேலைக்குப் போகும் ஆண் பெண் இருபாலரும் பகுதி நேர வேலைகளைத் தேடிக் கொள்கிறார்கள். இதனால் அப்பா, அம்மா இருவரில் ஒருவர், குழந்தைகளை மாறி மாறி கவனித்துக் கொள்ள முடிகிறது. அப்பாக்களும் குழந்தைகளைக் குளிப்பாட்டி சாப்பாடு கொடுத்து, தூங்க வைக்கிறார்கள். இவ்விதம் வேலைகளைப் பகிர்ந்து கொள்ளும் தம்பதியருக்கு டென்ஷன் குறைகிறது. அவர்கள் பிரச்னைகளைத் திறந்த மனத்துடன் விவாதித்து, மகிழ்வான குடும்பங்களை உருவாக்குகின்றனர்.

– American Association of Family Therapy

உயர்ந்த பரிசு!

இரை தேடிச் செல்லும் பறவைகளாக குடும்ப அங்கத்தினர்கள் வெவ்வேறு இடங்களில் வசித்தாலும், அந்த வயதான தம்பதியரின் திருமண நாளன்று மட்டும் எல்லோரும் ஒன்று சேருவது வழக்கம். அவர்களின் 35 வது திருமண நாளுக்கு என்ன பரிசு கொடுப்பது என்று யோசித்தனர். ஏதாவது 'ஒரிஜனல் ஐடியா' தேடினர். தாத்தா, பாட்டிக்கு சீட்டு விளையாடும் வழக்கம் உண்டு.

ஒரு புதிய சீட்டுக் கட்டு தயாரித்தனர். சீட்டுக் கட்டில் உள்ள 'ஆட்டின்' (ஹார்ட்) ராஜா, ராணி சீட்டுக்களில் முறையே தாத்தா, பாட்டியின் புகைப்படங்கள் ஒட்டப்பட்டன. மீதி சீட்டுக்களைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு அவர்கள் தொடர்பான சுவாரஸ்யமான சம்பவங்கள், கவிதைகள் இவ்வடல்கள் என்று எழுதிப் பூர்த்தி செய்தனர். பரிசாக அளித்தனர். அந்தச் சீட்டுக்கட்டு தந்த மகிழ்ச்சியை என்ன என்று சொல்வது!

- கிருஷ்ணவேணி ரங்கநாதன்.



✱ எம்.வி. வெங்கட்ராம்

பரிசு பெற்ற ‘காதுகள்’

செவிகள் புரட்சி செய்யும் என்று யாராவது கற்பனை செய்வார்களா? மகாலிங்கமும் முதலில் அப்படி எண்ணவில்லை. ஒரு நல்ல நாளாய்ப் பார்த்துக் கொண்டு இடது காது விசில் அடிப்பது போல் ஒய்ய்ய்ங் ஒய்ய்ய்ங் என்று சத்தம் எழுப்பியது. சில மாதங்களுக்குப் பிறகு வலது காது அதற்கு எதிரொலி கொடுத்தது. நாடகக் கொட்டகையில் தரைக்காரர்கள் விசில் அடிப்பது போல் இரண்டு செவிகளும் போட்டி போட்டுக் கொண்டு ஓய்வு ஒழிவு இல்லாமல் ஒய்ய்ங்காரம் எழுப்பியபடி இருந்தன.

செவிகள் செவிடுபடுவதாய் மகாலிங்கம் நினைத்துக் கொண்டான். தாய் வழியில் பரம்பரையாக இந்த நோய் உண்டு. வாய்வுக் கோளாறு என்றார்கள். பெருங்காயம் கரைத்த நீரைக் காதுகளில் விட்டார்கள்; வெதுவெதுப்பாகக் காய்ச்சிய எண்ணெய் விட்டார்கள்; ஹைட்ரஜன் பாரக்ஸைட் ஊற்றிக் காதுகளைச் சுத்தம் செய்து கொண்டான். இந்தக் கைப்பாகங்களுக்கு எல்லாம் செவிகள் மசியவில்லை. அவை போட்ட சத்தத்தால் பிறர் பேசுவதைச் சற்று சிரமப்பட்டுக் கேட்க வேண்டியதாயிற்று. அவனுக்குக் காதுமந்தம் என்பது பிரபலமாகி எல்லாரும் அவனோடு சற்று உரத்தே பேசலானார்கள். செவிடனாய் வாழப் பழக வேண்டியதுதான் என்று அவன் வருத்தத்தோடு எண்ணிக் கொண்டான்.

சிறிது காலம் சென்றபின், காதுகள் எழுப்புவது ஒய்ய்ங்காரம் அல்ல, ஓஓஓங்காரம் என்று அவனுக்குத் தோன்றியது. தன் தியானமும் வழிபாடும் முற்றிக் கனிந்ததால் மூலாதாரத்தில் சுருண்டு உறங்கிக் கிடந்த குண்டலினி சக்தி விழித்து எழுந்ததன் விளைவாக மூல ஒலிவெளிப்பாடு கொள்கிறதோ என்று ஒரு சபலம் கூட அவனுக்கு உண்டாயிற்று. இது பேராசையான மனப் பிராந்தி என்று அந்த எண்ணத்தை ஒதுக்கினான். அவன் ஒதுக்குவதென்ன, பல வித சப்த ஜாலங்களைக் காட்டிக் காதுகளே அவனுடைய மனப் பிராந்தியை ஒழித்து விட்டன. ஃபம்ஃபம் என்று சங்கு ஊதுவது போலவும், ஃடாங் ஃடாங்கென்று கோவில் மணிமுழங்குவது போலவும், ஜ்ஜோஹ் என்று அலைகள் ஓலமிடுவது போலவும், ஜிணிங் ஜிணிங் என்று பூஜை மணி ஒலிப்பது போலவும் ஃடம் ஃடம் என்று தமுக்கு அடிப்பது போலவும் சத்தங்களின் பலசாயல்களைக் காட்டின காதுகள். இந்தச் சத்த பேதங்கள் எல்லாம் தன் செவிட்டுத் தன்மை வலுப்பதன் முன்னோடி என்று அவன் முடிவு செய்து கொண்டான். எந்த நேரத்தில் என்ன சத்தம் கிளம்பும் என்று தெரியாத இந்த நிலையில், பிறர் பேசுவதைக் கேட்பதற்கு அவன் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருந்தது. எல்லோரும் அவனிடம் முன்னை விட உரத்துப் பேசத் தொடங்கினார்கள்.

எல்லையில் எதிரிகளின் படை நிற்கையில் உள்நாட்டில் பூசல் கிளப்பும் கலகக்காரர்கள் போல், பகைமையாக இருந்த தொழில் வாடி வதங்குகிற நேரம் பார்த்துக் காதுகள் கலகக் கொடி உயர்த்தியுள்ளன என்று அவன் இப்போதும் கருதவில்லை; அது ஏதோ ஒரு சின்ன கலவரம் என்று அலட்சியம் செய்துவிட்டான். எப்போதும் அவனுக்கு மனோதிடம் மிகுதி; வியாபாரம் சேதப்பட்டாலும் முற்றிலும் அழிந்து விடவில்லை. பணப்புழக்கம் குறைந்தாலும் பஞ்சம் ஏற்படவில்லை. வியாபாரத்தைத் திருத்தி விட முடியும் என்ற நம்பிக்கை இன்னும் அவனுக்கு இருந்தது. வீட்டில் செலவுகள் வழக்கம்போல் ஆடம்பரமாக நடந்தன. நூறு வந்தாலும் செலவாயிற்று, ஆயிரம் வந்தாலும் செலவாயிற்று. தொழிலை நேராக்க அவன் போட்ட திட்டங்கள் தோல்வியே கண்டாலும் அவன் மேலும் திட்டமிட்டானே தவிர ஒடுங்கிவிடவில்லை. வறுமை தன்னையும் குடும்பத்தையும் அள்ளித் தின்ன வருவதை அவன் புரிந்து கொள்ளவில்லை....

(எம்.வி. வெங்கட்ராம் எழுதிய - 1993 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி பரிசு பெற்ற ''காதுகள்'' நாவலில் இருந்து..... வெளியீடு : அன்னம் (பி) லிட், சிவகங்கை - 623 560.)





காதலும் வீரமும் கலந்தோடிய கதைகள்!

◆ அமரர் "கல்கி" எனும் தோணி ஏறி (கதைக் கோர்வை) சாண்டில்யன் எனும் கோலை ஊன்றி (படை அமைப்பு, போர் முறை) சரித்திரக் கதைக் கடலில் கரையேறிய புது எழுத்தாளர் விஷ்வக்சேனன் அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.
வாணாதிராயபுரம்,
ஆர். தமிழரசி தேவசேனாபதி.

◆ அருமையான நடை. ஆதாரபூர்வமான குறிப்புகள். தெளிவான கருத்து. இத்தனையும் சேர்த்துப் பாண்டியன் மகள் சரித்திரத் தொடரை எங்கள் உள்ள மேடைகளில் உற்சாகமாக உலாவச் செய்து விட்டார் விஷ்வக்சேனன்!
சேலம் - 2, சூர்யநிலா.

◆ 'பாண்டியன் மகள்' அற்புதமான ஒரு படைப்பு. ஒரு பெரும் பேரரசு அமைய சிறிய வீரனான அரையன் மதுராந்தகனின் ராஜதந்திரத்தை விரிவாக எடுத்துக் காட்டிய விதம் அருமை.
மஞ்சபுத்தூர், ப. பழனி.

◆ காதலும் வீரமும் கலந்தோடிய பாண்டியன் மகள் 'லதா'வின் கைவண்ணத்தால் மேலும் மெருகேற்றப்பட்டு, சந்தனம் பூசியது போல் நெஞ்சைக் குளிரச் செய்தது.
குச்சிப்பாளையம்,
க. சந்தானம்.

◆ எங்கள் உள்ளங்களில் நீங்கா இடம்பெற்று விட்டான் அரையன் மதுராந்தகன். ஒவ்வொரு வாரமும் கதையை மிக்க எதிர்பார்ப்பிற்கு உள்ளாக்கி விட்டார் விஷ்வக்சேனன்.
கடப்பேரி,
எம். நாராயணன்.

◆ திகிலூட்டும் வரிகள் எழுதக் கூடிய கரங்களில் காதலின் தன்மையையும், நாட்டுப்பற்றின் மகத்துவத்தையும் விளக்கக்கூடிய புதுமையான கதை உருவாகி, கதைக்கேற்ற தன்னம்பிக்கை வரிகளும் அதற்கு மெருகூட்டி, 'மடிமீது தலை வைத்து' தொடர் கதையை தங்கம் போல் மிளிரச் செய்து, மனத்தில் இடம் பிடித்து விட்டார் சுபா.
காட்பாடி,
அ. சோ. விஸ்வநாதன்.

◆ ஆரம்பத்தில் 'ஜென்டில்மேன்' போல் தோன்றினாலும், பின்னால் மாறுபட்டு மனதைக் கவர்ந்து விட்டது 'மடிமீது தலை வைத்து' தொடர்கதை.
கோவை,
அபி. அருண்லக்ஷ்மி.

◆ கதையில் வந்த quotations தங்கம். என் மனத்தைக் கொள்ளை கொண்டன. கவிதா - ரங்கா பாத்திரப் படைப்புகள் கதைக்கு மெருகூட்டின. மொத்தத்தில் ஒரு சுபமான முடிவுடன் சுகமான 'சுபலாலி' பாட வைத்த கதாசிரியருக்குப் பாராட்டுக்கள்!
திண்டுக்கல் - 1, எஸ். எம். முனவர் சுல்தானா.

◆ நாங்கள் எதிர்பார்த்த முடிவைக் காட்டிலும் ஒரு படி மேலேயே சென்று, அருமையாக முடித்திருந்தார் சுபா. மாருதியின் ஓவியம் கதைக்கு உயிர்நாடியாய்த் திகழ்ந்தது.
தக்கோலம், அ. முஸ்தபா.

◆ 'மடி மீது தலைவைத்து' தொடர்கதை எங்கள் உயிர் மூச்சினில் சேர்ந்து கலந்து விட்டது. வாரத்திற்கு வாரம் பிரமிக்க வைத்தது. இறுதியில், இத் தொடர்கதை முடிந்து விட்டாலும் எங்களது இதயமெனும் சபரியில் கஸ்தூரி ரங்கன் - கவிதா இருவரும் இன்னும் இன்னும் வலம் வந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.
சிவகங்கை, சி. ஸ்ரீகாந்த்.

◆ 'ரங்கா'வின் தேசப்பற்றுக்குத் தலைவணங்குகிறேன்! அத்தகைய பாத்திரத்தைச் சித்திரித்த சுபாவுக்கு - அவர்களுக்கு - எனது வாழ்த்துக்கள்.
மதுரை - 1,
ரோகிணி சபாபதி.



பாலம்

(பாலம் மூலம் இணை யும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பேற்க இயலாது. - ஆர்.)

●● டிரான்ஸிஸ்டர், டேப்ரிகார்டர் அசெம்ளி - ரிப்பேரிங் பழகி வருகிறேன். இதற்குத் தேவையான அடிப்படைக் கருவிகளைக் குறைந்த விலைக்கு எனக்குக் கொடுத்து உதவ விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன். நன்றி.

– கே. சுந்தரம்,
காளியம்மன் கோவில் தெரு,
பேரையூர், 626 703
மதுரை (மாவ.)

●● எம்.பி.ஏ. பிரவேசத்துக்கு என்னைத் தயாரித்துக் கொள்ள ஆலோசனை தேவை. மாதிரி வினாத் தாள்கள் அனுப்பினால் பிரதி எடுத்துக் கொண்டு திருப்பி அனுப்புவேன். மேலும் எந்தப் புத்தகங்கள் படிக்க வேண்டும், எங்கு கிடைக்கும் என்ற விவரங்கள் தெரிவிக்கக் கோருகிறேன்.

– எஸ். கணேசன்,
பிளாட் 2, திருவள்ளுவர் தெரு,
அழகப்பா நகர், மதுரை – 3.

●● ஹிந்து பத்திரிகையில் கர்நாடக இசை விமர்சனங்கள் எழுதி வந்தார் NMN (என்.எம். நாராயணன்). 1991 வரை அவரது விமர்சனங்கள் தேவை. பிரதி எடுத்துக் கொண்டு திருப்பி அனுப்பி விடுவேன்.

– வேங்கடசுப்பிரமணியன்,
10, 6வது குறுக்குத் தெரு,
இந்து காலனி, நங்கநல்லூர்,
சென்னை – 61.

●● எம்.பி.ஏ. பட்டப் படிப்புக்குத் தேவையான AN INTRODUCTION TO BUSINESS MATHEMATICS என்ற புத்தகம் (ஆசிரியர்கள் : வி. சுந்தரம்; எஸ்.டி. ஜெயசீலன்) இருந்தால் உடன் விவரம் எழுதவும். முழு விலை தந்து எடுத்துக் கொள்கிறேன்.

– சித. தங்கம் திருப்பதி.
113, பெரிய கடை வீதி.
கரம்பக்குடி – 622 302.

●● திரைப்படத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள், மற்றும் திரைப்படக் கல்லூரி மாணவர்களுடன் தொடர்பு கொள்ள ஆவல். திரைப்பட டெக்னிக் சம்பந்தமான நூல்கள் - குறிப்புகள் - விவரங்கள் எதிர்பார்க்கிறேன்.

– சுரேந்திரநாத்,
17-660, இந்திரா - நேரு நகர்,
Malkaj Giri 500 047
Hyderabad (AP)

●● 'டாக்டர் எம்.ஜி. ஆர். கலைக் களஞ்சியம்' தொகுத்து வருகிறேன். எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள், பத்திரிகைச் செய்திகள், அவரது எழுத்துக்கள், பேச்சுக்கள், புகைப்படங்கள் போன்றவற்றை அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறேன்.

– மல்லிகா பிரபாகரன்,
31, ஜோதிபுரம் காலனி,
காவேரிப்பட்டினம் – 635 112.
தர்மபுரி (மாவ).

●● பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டுத் தபால் தலைகள் உள்ளன. வேண்டுவோர் தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்.

– ஜி. வினோகுமாரி,
25 B/2 கோகலே ஹால் தெரு,
சிவகங்கை – 623 560.

●● ஸ்ரீமான் ஏ. ஸ்ரீநிவாஸ பட்டாசாரியார் திருத்தி அமைத்த "ஸ்ரீவைஷ்ணவ ஆபஸ்தம்பீய அமாவாஸ்யா தர்ப்பணம்" என்ற நூல் தேவை.

– எஸ். ஸ்ரீசைலா,
5A, குல்மார்க், அணுசக்தி நகர்,
பம்பாய் – 400 094.

●● ஐ.ஐ.டி. அனுமதித் தேர்வுக்கான புத்தகங்கள் என்னிடம் உள்ளன. விற்க விருப்பம்.

– என். ஸ்ரீதர்,
5, அன்னை தெரஸா தெரு,
வ.உ.சி. நகர், பம்மல், சென்னை – 75.

●● சாரண - சாரணிய ஜனாதிபதி விருது பெற 1988ல் ஈரோடிலிருந்து டில்லிக்கு என்னுடன் வந்திருந்த செபாஸ்டியன், ரவி, பாபு, பிரகாஷ் மற்றும் பலருடன் மறு தொடர்பு கொள்ள ஆசைப்படுகிறேன்.

– டி. செந்தில்குமார்,
17, வி.என்.எஸ். கோவில் வீதி,
குண்டடம் – 638 702.

●● வை. கோவிந்தனின் சக்தி, ரகுநாதனின் சாந்தி, இஸ்மத் மாட்சுவின் சமரன், விஜயபாஸ்கரனின் சரஸ்வதி இதழ்களில் நான் எழுதிய கட்டுரைகளும் மொழி பெயர்த்த கதைகளும் இருக்குமானால் அனுப்பி உதவவும்.

– நெல்லை எஸ். வேலாயுதம்,
58, ராம் நகர் 3வது தெரு,
எஸ். எஸ். காலனி, மதுரை – 625 016.

முக்தி அடைந்த காஞ்சி மகரிஷிக்கு
எங்களுடைய பக்திமிகு, பணிவுமிகு
அஞ்சலி.



RPG ENTERPRISES

தி கிராமஃபோன் கம்பெனி
ஆஃப் இந்தியா லிமிடெட்.

HMV

CCC/HMV/TM/2006



வீட்ல விசேஷங்க

காணாமல் போனவர் பற்றிய அறிவிப்பு

பெயர் : கே. பாக்யராஜ்

உயரம் : முன்பு விஸ்வரூபம்; சமீபமாய் வாமனரூபம்.

காணாமல் போன நாள் : 14.1.94.

அடையாளங்கள் : காணாமல் போன அன்று, அந்த ஏழு நாட்களில் அணிந்திருந்த அதே சட்டையும் அம்மா வந்த போது வாங்கி வந்த அதே நிஜாரும் அணிந்திருந்தார். தோளில் குழந்தையோடும் அம்னீஷியாவால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணோடும் ஏதோ விசேஷத்துக்காக, 'பல்லவன்' ஏறி ஊட்டிக்குப் போனவர் என்ன ஆனார் என்று தெரியவில்லை.

சாதாரணமாய் இப்படியெல்லாம் அஜாக்கிரதையாய்க் காணாமல் போகிறவர் இல்லை.

காரணங்கள் : பின்வரும் காரணங்களினால் அவர் காணாமல் போயிருப்பார் என்று யூகிக்கிறோம். (தேடுபவரின் வசதி கருதித் தருகிறோம்.)

1. சம்பவ நாளன்று உடன் சென்ற சகாக்கள் சரியில்லை. தனியே எத்தனை தூரம் வேண்டுமானாலும் போய் வரக் கூடியவர். ஏனோ இம்முறை துணை நாடியிருக்கிறார்.

2. சீக்கிரம் போய்ச் சேர வேண்டிய அவசரத்தில் குறுக்கு வழியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். சரியான வெளிச்சமின்மையாலும் கானக ஜீவராசிகளின் கர்ணகடூர சப்தங்களினாலும் அலைக்கழிக்கப்பட்டு, புதை குழியிலோ அல்லது புதர்ப் பகுதிகளிலோ சிக்கிக் கொண்டிருக்கக்கூடும்.

3. சம்பந்தமில்லாத காதல் விவகாரங்களில் தலையிட்டிருக்கிறார். எனவே, மீள்வதில் சறுக்கி விழுந்திருக்கலாம்.

'விசேஷ'த்தின் முக்கியமான பொறுப்பிலிருக்கும் அவர், முன்யோசனையின்றி, தம் பொறுப்புக்களை முன்னதாக வேறு சிலருக்குப் பிரித்துக் கொடுத்திருப்பதாக, சமீபத்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. காணாமல் போனதற்கும் இதற்கும் முக்கியத் தொடர்பு இருக்கக்கூடுமென்று கருதுகிறோம்.

தேடித் தருவோருக்கு வேரோடு நாலு கரும்பு பரிசாக வழங்கப்படும்.

பி.கு : அன்பு மகனே! உன்னைக் காணாமல் நாங்கள் படும் துயரை வார்த்தையில் வடிக்க முடியாது! நீ காணாமல் போன 14-ஆம் தேதியிலிருந்து உணவும் உறக்கமும் பிடிக்காது தவிக்கிறோம். அப்படியொன்றும் பெரிய தவறுகள் நீ செய்து விடவில்லை. எல்லாம் சகவாசதோஷம். அந்தக் 'கதையளக்கிற' குரூப்பை முதலில் ஒதுக்கு. உன்னால் முடியாததா? மறுபடி வா. மறக்காமல் உன்னோடு சேர்ந்து காணாமல் போயிருக்கும் இளையராஜாவையும் கூட்டி வா.

உன் வரவை ஆவலோடு எதிர்பார்க்கும்,

அப்பாமார், அம்மாமார், அக்காமார், அண்ணன்மார், தம்பிமார், தங்கைமார், பாட்டிமார், தாத்தாமார்.

- ஆர்.பி.ஆர்.

அமரர் கல்கி

தியாக பூமி

சாவித்திரிக்கு மறுபடி பிரக்ஞை வந்த போது, தான் முன்பின் பார்த்திராத இடத்தில் கட்டிலில் கிடப்பது தெரிந்தது. அவளுடைய தலைமாட்டில் நின்று யாரோ இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தார்கள். அவளைப் பற்றித்தான் பேசினார்கள்.

"கடுமையான ஹிஸ்டீரியா கேஸ்; பிழைத்தது புனர்ஜன்மம்" என்று ஒரு பெண் குரல் சொல்லிற்று.

"யார், என்னவென்று ஒரு தகவலும் இல்லையா?"

"ஒன்றும் தெரியலை. போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து யாரோ சாஸ்திரின்னு பேர் சொல்லி விலாசம் விசாரிச்சாளாம். ஹரஸ் பெண்டு யாருன்னு கேட்டதும் கூச்சல் போட்டுட்டு விழுந்துட்டாளாம். உடனே ஆஸ்பத்திரிக்கு போன் பண்ணனும் என்று அந்த இன்ஸ்பெக்டருக்குத் தோணித்தே. அதுவே பெரிய காரியம்."

"இந்த நிலைமையிலே - பிரசவம் வேறே ஆகணும்; கஷ்டமான கேஸா இருக்கும் போலிருக்கு; ரொம்ப ஜாக்கிரதையாய்க் கவனிக்கணும்."

இந்தச் சம்பாஷணையிலிருந்து சாவித்திரிக்குத் தான் ஆஸ்பத்திரியில் இருக்கிறோம் என்பதும், எவ்வாறு அங்கு வந்தோம் என்பதும் ஒருவாறு தெரிந்தன.

இன்னும் அறிவு நன்றாகத் தெரிந்த போது, 'ஆகா! அநாதையாகிய எனக்கு அடைக்கலம் அளிக்கும் இடமும் ஒன்று இருக்கிறதா?' என்று சாவித்திரி எண்ணி எண்ணி உருகினாள்.

அவளுடைய பிறந்த வீட்டிலாவது, புகுந்த வீட்டிலாவது அவளை அவ்வளவு ஆதரவுடன் யாரும் கவனித்தது கிடையாது. 'கடைசியில் பகவான் மனம் இரங்கி நம்மை இந்த இடத்தில் கொண்டு வந்து சேர்த்தாரே!' என்று நினைத்து நினைத்துச் சந்தோஷப்பட்டாள்.

ஆனால் அவளுடைய கஷ்டம் அத்துடன் தீர்ந்து போய் விடவில்லை. நாலு ஐந்து நாளைக்கெல்லாம் அவள் அதுவரையில் அநுபவித்து அறிந்திராத வேதனையும் வலியும் உண்டாயின. நிமிஷத்துக்கு நிமிஷம் வேதனை அதிகமாகி வந்தது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வலி பொறுக்க முடியாமல் போயிற்று. இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம், 'ஐயோ! என்னத்துக்காக இந்தப் பெண் ஜன்மம் எடுத்தோம்?' என்று நோகவும், தன்னைப் படைத்த கடவுளையே சபிக்கவும் ஆரம்பித்தாள். இத்தகைய நிலைமையில், டாக்டர்களும் நர்ஸ்களும் கும்பலாக வந்து அவளைச் சூழ்ந்து கொண்டார்கள். என்னத்தையோ மூக்கினருகில் கொண்டு வந்து பிடித்தார்கள். மூச்சுத் திணறத் தொடங்கியது. 'நாம் படுகிற துன்பத்தைக் கண்டு சகிக்காமல் நம்மைக் கொன்று விடுகிறார்கள் போல் இருக்கிறது. ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. பராசக்தி! என்னை உன் பாதத்தில் சேர்த்துக் கொள்!' என்று வேண்டினாள்.

ஆனால், உண்மையில் அது சாவில்லை என்பது சாவித்திரிக்கு மறுபடியும் நினைவு வந்த போது தெரியவந்தது. தான் சாகாததோடு மட்டுமில்லை, தன்னை இவ்வளவு கொடுமையான கஷ்டங்களுக்கெல்லாம் உள்ளாக்கிய ஜீவன், பக்கத்தில் தொட்டிலில் கிடந்து அழுது கொண்டிருந்தது. 'அழு, அம்மா! அழு! இந்த உலகத்தில் அழுவதற்குத்தான் நான் பிறந்தேன்; அழுவதற்குத்தான் நீயும் பிறந்திருக்கிறாய்! அழு!'

குழந்தையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், மார்போடு சேர்த்து அணைத்துக் கொள்ள வேண்டுமென்றும் சாவித்திரிக்கு அளவிலாத தாபம் பொங்கி



எழுந்தது. அடிக்கடி அதனுடைய முகத்தைப் பார்க்க வேண்டுமென்று ஆசை உண்டாயிற்று. ஆனால் அந்தத் தாபத்தையும் ஆசையையும் அவள் சிரமப்பட்டு அடக்கிக் கொள்ள முயன்றாள். 'நாம் அடைந்த இவ்வளவு கஷ்டங்களுக்கும் காரணம் இந்தக் குழந்தைதானல்லவா?' என்று நினைத்து அதனிடம் கோபங் கொண்டாள். குழந்தையின் முகச்சாயல் அவளுடைய கோபம் வளர்வதற்கு ஒத்தாசை செய்தது! ஏனெனில், அது அவளுக்கு ஸ்ரீதரனை ஞாபகப்படுத்திற்று.

இதற்கு முன்பெல்லாம் ஸ்ரீதரனிடம் அவளுக்குக் கோபம் வந்தாலும், வெறுப்பு உண்டானது கிடையாது. கல்யாணத்தின் போது அவனிடம் அவள் கொண்ட அளவிலாத அன்பைக் கல்கத்தாவில் அவள் பட்ட கஷ்டங்கள் எல்லாம் மாற்றி விடவில்லை. நெடுங்கரைக்கு அவள் தனியாக ரயில் ஏறி வந்த போது கூட அவளுடைய உள்ளத்தில் அவனிடம் அன்பு வைத்திருந்தாள். என்றைக்கோ ஒருநாள் அவனுடைய மனம் மாறும், தன்னுடைய அன்பும் சாபல்யமாகும் என்ற நம்பிக்கை இருந்தது.

ஆனால் இப்போது அவளுடைய மனோநிலை அடியோடு மாறிவிட்டது. தன்னை இவ்வளவு சகிக்க முடியாத கஷ்டங்களுக்கெல்லாம் உள்ளாக்கிவிட்டு அந்தப் பாவி கவலையின்றியிருக்கிறான்! 'அவனும் மனுஷ ஜன்மமா! அப்படிப்பட்ட மனுஷனிடமா நாம் அவ்வளவு அன்பும் பக்தியும் வைத்திருந்தோம்? சீச்சீ! என்ன பேதைமை!'

பதியாம்! பக்தியாம்! புருஷனைத் தெய்வமாகப் பாவிக்க வேண்டுமாம்! - கல்கத்தாவுக்குப் புறப்படும் போது தகப்பனார் செய்த உபதேசம் சாவித்திரிக்கு ஞாபகம் வந்தது. 'நல்ல தகப்பனார்! நல்ல உபதேசம்! இங்கே வந்து பாருங்கள், அப்பா! என்னை நீங்கள் தேடிக் கொடுத்த தெய்வம் என்னை என்ன செய்கிறது வந்து பாருங்கள்!

'ஆனால், நீங்கள் ஏன் வரப் போகிறீர்கள்? நீங்கள் ஏன் பார்க்கப் போகிறீர்கள்? இந்த உபத்திரவம் எல்லாம் வேண்டாம் என்றுதான், கடுதாசும் போடாமல், கதவையும் பூட்டிக் கொண்டு போய் விட்டீர்களே! நான் எக்கேடு கெட்டால் உங்களுக்கென்ன? இந்தக் குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு நான் தெருத் தெருவாய்ப் பிச்சை வாங்கினால்தான் நீங்கள் எங்கே பார்க்கப் போகிறீர்கள்?....'

இவ்வாறு, சாவித்திரி தன்னுடைய மனம் யார் யாரிடம் அன்பு கொண்டிருந்ததோ அவர்கள் எல்லாரையும் வெறுத்து, துவேஷம் கொள்ளும் நிலைமையை அடைந்திருந்தாள்.

அவளுடைய வெறுப்பும் துவேஷமும் நூறு மடங்கு அதிகமாகும்படியான சந்தர்ப்பம் சீக்கிரத்திலேயே நேரிட்டது.

32. சாவித்திரியின் சங்கல்பம்

ஆஸ்பத்திரியில் சாவித்திரிக்கு நன்றாய்ச் சுய ஞாபகம் வந்ததிலிருந்து, அவள் தான் ஏற்கெனவே பட்ட கஷ்டங்களைப் பற்றி எண்ணியதோடு வருங்காலத்தைப் பற்றியும் எண்ணத் தொடங்கினாள். இந்தத் துர்ப்பாக்கியவதியின் தலையில் பகவான் ஒரு குழந்தையை வேறே கட்டி விட்டார். இனிமேல் என்ன செய்வது? எங்கே போவது?

கல்கத்தாவுக்குப் போவது என்ற நினைப்பே அவளுக்கு விஷமாக இருந்தது! குழந்தைப் பிராயத்தில் அவளை ஒரு சமயம் ஒரு தேள் கொட்டி விட்டது. அப்போது அது ரொம்பவும் வலித்தது. இன்று சாவித்திரி கல்கத்தாவில் தான் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றி நினைத்துக் கொண்டால், ஏக காலத்தில் ஆயிரம் தேள் தன் தேகம் முழுவதும் கொட்டி விட்டது போல் அவளுக்கு அத்தனை வேதனை உண்டாயிற்று. போதும், ஏழேழு ஜன்மத்துக்கும் போதும். மறுபடியும் கல்கத்தாவுக்குப் போய் அவர்களுடைய முகத்தில் விழிப்பது என்பது இயலாத காரியம். முடியவே முடியாது!

நெடுங்கரையிலோ வீடு பூட்டிக் கிடக்கிறது. திறந்திருந்தால்தான் என்ன? அங்கே எத்தனை நாளைக்கு இருக்க முடியும்? அப்பா சம்மதித்தாலும் சித்தியும் பாட்டியும் தன்னை வைத்துக் கொண்டிருக்கச் சம்மதிப்பார்களா? ஒவ்வொரு நிமிஷமும் தன்னை ஏசிக் காட்ட மாட்டார்களா? ''போ! போ!'' என்று பிடுங்கி எடுத்து விட மாட்டார்களா? அப்பாவையும் அவர்கள் வதைத்து விடுவார்களே? தன்னால் அப்பாவுக்கு இத்தனை நாளும் நேர்ந்த கஷ்டமெல்லாம் போதாதா?

அப்பாவுக்குக் கஷ்டம்! தன்னால்! - இதை நினைத்துச் சாவித்திரி தன் மனத்திற்குள் சிரித்துக் கொண்டாள். தன்னால் அப்பாவுக்குக் கஷ்டம் என்ற எண்ணம் இந்த நிமிஷம் வரையில் அவள் மனத்தில் இருந்தது. இப்போது அது மாறிற்று. 'என்ன? அப்பாவுக்கு என்னால் கஷ்டமா? அவரால் எனக்குக் கஷ்டம் இல்லையா?' என்று எண்ணினாள். தான் அநுபவித்த இத்தனை துன்பங்களுக்கும் யார் காரணம்? அப்பா தான் இல்லையா? 'என்னைக் கல்யாணம் பண்ணிக் கொடு என்று நான் அழுதேனா? இந்த ஸ்ரீதரனுக்குத்தான் வாழ்க்கைப் படுவேன் என்று இவரிடம் சொன்னேனா? இவரை யார் என்னை இப்படிப்பட்ட புருஷனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்கச் சொன்னது? அறியாத பிராயத்தில் என்னை இப்படிப்பட்ட கதிக்கு ஆளாக்கினாரே? கல்யாணம் செய்ததற்குப் பதில் என்னைப் படிக்க வைத்து இதோ இந்த ஆஸ்பத்திரியில் உள்ள நர்ஸுகளைப் போல் என்னையும் ஒரு நர்ஸாகச் செய்திருக்கப்படாதா?...'

ஆம்; சாவித்திரிக்கு உணர்வு தெளிந்ததிலிருந்து அவள் இந்த நினைவாகவே இருந்தாள். ஆகா! இந்த நர்ஸுகள் எவ்வளவு உற்சாகமாயிருக்கிறார்கள்? எவ்வளவு சுதந்திரமாக இருக்கிறார்கள்? சுயமாகச் சம்பாதித்து ஜீவனம் செய்வதைப் போல் உண்டா? இவர்களுக்குக் கவலை ஏது? பிறருடைய கையை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லையல்லவா? ஒருவரிடம் பேச்சுக் கேட்க வேண்டிய அவசியமும் இல்லையல்லவா? பெண் ஜன்மம் எடுத்தவர்களில் இவர்கள் அல்லவா பாக்கியசாலிகள்?

இப்படிச் சதாகாலமும் சிந்தனை செய்து கொண்டிருந்தாள் சாவித்திரி. சிந்தனை செய்யச் செய்ய அவர்களைப் போல் தானும் சுதந்திர வாழ்க்கை வாழ வேண்டுமென்ற ஆசை அவள் மனத்தில் அபரிமிதமாக வளர்ந்து கொண்டிருந்தது. இனிமேல், தான் பிறந்த வீட்டிலேயோ, புகுந்த வீட்டிலேயோ போய் வயிறு வளர்ப்பதில்லையென்னும் திடசங்கல்பம் அவளுடைய மனத்தில் ஏற்பட்டது. உயிர் வாழ்ந்தால், இந்த நர்ஸுகளைப் போல் சுயஜீவனம் செய்து சுதந்திரமாக வாழ வேண்டும்; இல்லாவிடில் எந்த வகையிலாவது உயிரை விட்டுவிட வேண்டும். பிறர் கையை எதிர்பார்த்து, பிறருக்கு அடிமையாகி வாழும் வாழ்க்கை இனிமேல் வேண்டாம். சாவித்திரி இவ்வாறு சங்கல்பம் செய்து கொள்ளும் சமயத்தில் தொட்டிலில் கிடக்கும் குழந்தை விரலை சூப்பி பார்த்துச் சப்புக் கொட்டும் சப்தம் கேட்கும். 'ஐயோ! இந்தச் சனியன் ஒன்றை ஸ்வாமி நம் தலையில் கட்டி விட்டாரே? நாம் செத்துப் போவதாயிருந்தால் இதை என்ன செய்வது?' என்ற ஏக்கம் உண்டாகும்.

சாவித்திரிக்குக் குழந்தை பிறந்து இருபது நாளாயிற்று. அன்று நர்ஸ் சம்பங்கி சாவித்திரியிடம் வந்து, ''சாவித்திரியம்மா! உங்களுக்கு உடம்பு கம்ப்ளீட்டா சொஸ்த

S3F

சுலிவன் கார்டன் பெனிபிட் பண்டு லிமிடெட்

Fully Computerised A/C Office

(கம்பெனி சட்டத்தின் பதிவு எண் : 18&24962)

பதிவு அலுவலகம் :- 8, கற்பகாம்பாள் நகர், மைலாப்பூர், சென்னை - 600 004 போன் : 4993241/4990953

கிளை அலுவலகம் : 132, ராசப்ப செட்டி தெரு, பார்க் டவுன் (முதல் மாடி), சென்னை - 600 003 போன் : 563055

ரொக்க நடவடிக்கை : காலை 8:30 முதல் மாலை 5:30 வரை
ஞாயிறு காலை 8:30 முதல் பகல் 12:30 வரை
வரவு செலவுகள் அங்கத்தினர்களுடன் மட்டுமே
(வெள்ளிக் கிழமை விடுமுறை)

கடன்	நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ. 300/- வழங்கப்படும். சென்னை மாநகரில் உள்ள கட்டிடங்கள் பேரிலும் வழங்கப்படும்.

1. Prompt and satisfying service
2. Efficient Management
3. Financial strength backed by a prosperous and reputed group
4. Loans secured by gold and immovable assets.

இயக்குநர்கள் :

திரு T. V. ஸ்ரீனிவாசன்

திரு P. K. சந்திரசேகரன்

திரு ப்ரவின் கோவிந்தராவ்

திருமதி P. C. சுந்தரவதனி

திரு K. G. கிருஷ்ணன்

திரு P. K. C. ரமேஷ்

திரு D. தனுஷ்கோடி

திரு P. C. பாஸ்கர்

திரு K. R. நிரஞ்ஜன் குமார்

திரு P. C. சியாம் சுந்தர்

OUR VALUED DEPOSITORS



Mr. D. B. SAXENA
Past President
The Institute of
Company Secretaries
of India



'இன்னிசைப் பேரரசு'
T. V. SANKARANARAYANAN

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும்

மாயிடுத்து. நாளைக்கு உங்களை ஹாஸ்பிடல்லேயிருந்து அனுப்பி விடணுமென்று மேட்ரன் சொல்லி விட்டாங்க. ஊம்பறதுக்கு ரெடியாயிருங்க; யாருக்காவது சொல்லியனுப்ப வேணும்னா, சொல்லியனுப்பிச் சுடுங்க'' என்றாள்.

சாவித்திரிக்கு இடி விழுந்தது போல் இருந்தது. ஐயோ! ஆஸ்பத்திரியை விட்டுப் போக வேண்டுமா? தாயின் அன்பு என்பதைத் தன் வாழ்நாளில் அநுபவித்தறியாதவள் சாவித்திரி. ஆனால், மற்றப் பெண்களிடம் அவர்களுடைய தாய்மார்கள் காட்டும் அன்பையும் ஆதரவையும் பார்த்திருக்கிறாள். அத்தகைய அன்பையும் ஆதரவையும் இந்த ஆஸ்பத்திரியில்தான் சாவித்திரி முதன் முதலில் கண்டாள். அப்படிப்பட்ட இடத்தை விட்டா நாளைக்குப் போக வேண்டும்? எங்கே போவது?

மறுபடியும் அந்தப் பக்கம் நர்ஸ் வந்தபோது, ''நர்ஸ் அம்மா! இங்கே கொஞ்சம் உட்காருங்கள். ஒரு விஷயம் கேட்கிறேன். சொல்லுங்கள்'' என்றாள்.

நர்ஸ் உட்கார்ந்ததும், ''இந்த ஆஸ்பத்திரியிலேயே நானும் உங்களையெல்லாம் போல் நர்ஸா இருக்கேன்னு சொன்னா, மேட்ரன் என்னை எடுத்துக்குவாங்களா?'' என்று கேட்டாள்.

வேறு நர்ஸாயிருந்தால் சிரித்திருப்பாள். ஆனால், சம்பங்கிக்குச் சாவித்திரியிடம் அநுதாபம் உண்டாகியிருந்தபடியால், அவள் சிரிக்கவில்லை; பரிதாபப்பட்டாள்.

''அம்மா, நர்ஸ் ஆகிறது அவ்வளவு சுலபமில்லை. முதலில், இங்கிலீஷ் பத்தாவது வகுப்பு வரையில் படித்திருக்க வேண்டும். அப்புறம் மூணு வருஷம் டிரெயினிங் ஆக வேண்டும். மேலும், உனக்குக் கைக் குழந்தை வேறு இருக்கு; சான்ஸே கிடையாது. இந்த ஆசையை விட்டுடு, அம்மா!'' என்றாள்.

சாவித்திரி இம்மாதிரி பதிலை ஒருவாறு எதிர்பார்த்தாள். ஆகையால் ரொம்ப ஏமாற்றம் அடையவில்லை.

''அது சரி, ஸிஸ்டர்! நீங்க முன்னயே இரண்டொரு தடவை என்னுடைய பந்துக்கள் அட்ரஸ் கேட்டீங்க. நான் திக்கற்றவள் என்று சொன்னேன். என்னைப் போன்றவள் வேலை செய்து ஜீவனம் செய்ய வேணுமென்றால், அதற்கு ஒரு வழியும் இல்லையா? நீங்கள் ஏதாவது எனக்கு ஒத்தாசை செய்யப்படாதா?'' என்றாள்.

''நான் என்ன பண்ணுவேன், சாவித்திரியம்மா! நீ முன்னே சொன்னதிலிருந்து நான் ஐந்தாறு பெரிய மனுஷா வீட்டிலே விசாரிச்சேன், உன்னை ஏதாவது வேலைக்கு வச்சுக்கறாங்களான்னு. கைக் குழந்தைக்காரின்னா வேண்டாங்கறாங்க எல்லாரும். நான் சொல்றதைக் கேளு, அம்மா! இந்த ஆசையெல்லாம் உனக்கு வேண்டாம். கல்யாணம்னு பண்ணிண்டுட்டா, புருஷன் எப்படி இருந்தாலும் அவனைக் கட்டிண்டுதான் மாரடிச்சாகணும். நீ ஒருத்திதான் இப்படிக் கஷ்டப்படறதாக எண்ணிக்காதே! நம் தேசத்திலே உன் மாதிரி எத்தனையோ பேர். யாருக்காவது கடுதாசி எழுதணும், இல்லாமப் போனா தந்தியடிக்கணும்னா சொல்லு, அடிக்கிறேன்'' என்றாள்.

சாவித்திரி தன்னைப் பற்றி ஒரு விவரமும் சொல்லா விட்டாலும், அவள் புருஷனுடன் ஏதோ சண்டை போட்டுக் கொண்டு ஓடி வந்திருக்க வேண்டும் என்று சம்பங்கி ஊகம் செய்திருந்தாள். அதனால்தான் மேற்கண்டவாறு சொன்னாள்.

சாவித்திரி இதற்குப் பதில் சொல்லாமல், முகத்தைக் கைகளினால் மூடிக் கொண்டு விம்மத் தொடங்கவே, நர்ஸ் அங்கிருந்து போய் விட்டாள்.

அன்று சாயங்காலம் நர்ஸ் சம்பங்கி, கையில் ஒரு பிரித்த பத்திரிகையுடன் சாவித்திரியிடம் விரைவாக வந்தாள். ''சாவித்திரி அம்மா! உனக்கு வேலை வேணுமென்று சொன்னாயே? இதோ ஒரு விளம்பரம் இருக்கிறது, கேள்'' என்று சொல்லி வாசிக்கத் தொடங்கினாள் :

''தேவை : பம்பாயிலுள்ள ஓர் உயர் குடும்பத்து எஜமானிக்குத் தோழியாக இருக்க ஒரு தமிழ்நாட்டுப் பெண் தேவை. தக்க சம்பளம் கொடுக்கப்படும்...''

இவ்வளவு வாசித்த நர்ஸ், இங்கே சட்டென்று நிறுத்தி, ''ஐயையோ! இதிலேயும், குழந்தை உள்ளவர்கள் விண்ணப்பம் போட வேண்டாமென்று எழுதியிருக்கே!'' என்றாள். பிறகு, சாவித்திரியைப் பார்த்து, ''உன் அதிர்ஷ்டம் அவ்வளவுதானம்மா! வேண்டாத புருஷனைக் கட்டிண்டு மாரடிக்கணும்னுதான் உன் தலையிலே எழுதியிருக்கு'' என்று சொல்லி விட்டு, அந்தப் பத்திரிகையை அங்கேயே போட்டு விட்டுப் போனாள்.

ஆனால், அதே சமயத்தில் சாவித்திரி பல்லைக் கடித்துக் கொண்டு, 'என்ன கதி நேர்ந்தாலும் வேண்டாத புருஷனுடன் நான் மாரடிக்கப் போவதில்லை' என்று மறுபடியும் சங்கல்பம் செய்து கொண்டாள். சம்



''அடிக்கடி என் போட்டோவையே பார்க்கிறீங்களே, அவ்வளவு அழகா இருக்கேனா?''

''அதுலதான் அமைதியா இருக்கே!''

- திரு. பாம்பே ஜான்



''தலைவருக்கு இருந்தாலும் ரொம்பவும் தெனாவெட்டுதான்...''

''ஏன்...?''

''கட்சி உடைஞ்சிடிச்சேன்னு கேட்டதற்கு 'பரவாயில்லை, 'பெவிக்கால்' போட்டு ஒட்டிடுவோம்'ங்கிறாரு!''

– சீர்காழி ஜே. பலராமன்

பங்கி எறிந்து விட்டுப் போன பத்திரிகையை எடுத்து அந்த விளம்பரத்தைப் பார்த்தாள். அதைத் திருப்பித் திருப்பி நூறு தடவை படித்தாள். 'குழந்தை உள்ளவர்கள் விண்ணப்பம் போட வேண்டியதில்லை' என்ற வாக்கியம் அவளுடைய நெஞ்சில் பழுக்கக் காய்ந்த இரும்புக் கரண்டியினால் எழுதியது போல் பதிந்து புண்ணாக்கிற்று.

மறுநாள் சாவித்திரியை ஆஸ்பத்திரியை விட்டு அனுப்பி விட்டார்கள். இரண்டாவது தடவையும் சாவித்திரி சென்னையின் வீதிகளில் அநாதையாய் அலையும்படி ஆயிற்று. ஆனால் இந்தத் தடவை அவள் தனியாக அலையவில்லை; கையில் குழந்தையுடன் அலைந்தாள். மேலும், இம்முறை சம்பு சாஸ்திரியைத் தேடி அலையவில்லை; ஜீவனத்துக்கு வேலை தேடி அலைந்தாள். அவளுடைய அலைச்சல் இந்த முறை வெகு சீக்கிரமாகவும் முடிவடைந்து விட்டது.

முதலில் பெரிய மனுஷர்கள் வீடுகளைத் தேடிப் போனாள். ஒரு வீட்டில் எஜமானியம்மாள், ''கையிலே குழந்தையை வச்சண்டு, வேலைக்கு வர்றயே? வேலையைப் பார்ப்பயா, குழந்தையைப் பார்ப்பயா? போ! போ'' என்றாள். இன்னும் சில வீடுகளில், அவளுடைய நடத்தையைப் பற்றிச் சந்தேகித்துக் கேள்வி கேட்டார்கள். ''நீ கைம்பெண்ணா, வாழுகிறவளா?'' என்று வேறு சிலர் கேட்டார்கள். ஹோட்டல்களில் வேலை செய்து பிழைக்கலாம் என்று சாவித்திரி முன் எப்போதோ கேள்விப்பட்டிருந்தாள். ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்து, அந்த ஹோட்டல்காரனை, ''வேலை கிடைக்குமா?'' என்று கேட்டாள். அவன் சாவித்திரியைத் தனியாக அழைத்துச் சென்று, ''இந்தக் குழந்தையை எங்கேயாவது தொலைச்சுட்டு வந்துடு. உன்னை நான் ஜில்லுனு வச்சுக்கறேன்'' என்றான். சாவித்திரிக்கு 'நாம் இன்னது செய்கிறோம்' என்றே தெரியவில்லை. அந்த ஹோட்டல்காரனுடைய கன்னத்தில் பளீரென்று ஓர் அறை அறைந்தாள். உடனே அவளைப் பயம் பற்றிக் கொண்டது. ஹோட்டலிலிருந்து வெளிக் கிளம்பி ஓடினாள்.

கையில் குழந்தையுடன் ஒரு ஸ்திரீ நடுரோட்டில் ஓடுவது விசித்திரமல்லவா? சாலையோடு போனவர்கள் அவளை வெறிக்கப் பார்த்தார்கள். அவர்களுடைய முகங்கள் மனிதர்களின் முகங்களாகவே சாவித்திரிக்குத் தோன்றவில்லை. ராட்சதர்கள், பேய்கள், பிசாசுகளின் முகங்களாகத் தோன்றின. ஆகவே இன்னும் விரைவாக ஓடினாள்.

மனத்தில் பொங்கிக் கொண்டிருந்த கோபமும் பயமும் வெறியும் அவளுடைய தேகத்திற்குப் பலத்தைக் கொடுத்து ஓடச் செய்தன. ஆனால், குழந்தை எப்படித் தாங்கும்? அது சிணுங்கி அழத் தொடங்கியது. சாவித்திரி நின்று, குழந்தையின் முகத்தைப் பார்த்து, ''என் கண்ணே! வேண்டாம்'' என்றாள். 'இந்தப் பாவி இன்னும் எத்தனை நேரம் உயிரோடிருக்கப் போகிறேனோ, என்னமோ? அதற்குள் உன்னைக் கஷ்டப்படுத்துவானேன்?' என்று எண்ணினாள்.

அப்போது கொஞ்ச தூரத்தில் யாரோ, ''மண்ணாலான இந்தக் காயம்'' என்று பாடிக் கொண்டு போவது காதில் விழுந்தது.

சாவித்திரி கையிலிருந்த குழந்தையைப் பார்த்து, ''கண்ணே! நீயும் மண்; நானும் மண். இரண்டு பேரும் தண்ணீரில் இறங்கிக் கரைந்து போய் விடுவோம்!'' என்று சொல்லிச் சிரித்தாள். குழந்தைப் பிராயத்தில் தான் கொல்லைக் கிணற்றில் விழுந்த செய்தி ஞாபகத்தில் வந்தது. 'ஐயோ! அப்பா! உங்கள் பெண் இந்த மாதிரியெல்லாம் திண்டாட வேண்டுமென்பதற்காகவா கிணற்றில் விழுந்தவளை எடுத்துக் காப்பாற்றினீர்கள்? அப்போதே நான் செத்துப் போய் எங்கம்மா போன இடத்துக்குப் போயிருக்கக் கூடாதா?'

குழந்தை அப்போது தன் பட்டுப் போன்ற மிருதுவான விரல்களால் தாயின் மார்பைத் தொட்டது. சாவித்திரி குனிந்து குழந்தையை முத்தமிட்டாள். ''என் கண்ணே! உன்னை நான் விட்டு விட்டுப் போய் விடுவேன் என்று பயப்படுகிறாயா? என் அம்மாவும் அப்பாவும் என்னைப் பிறந்த பின் கைவிட்டார்கள்; உன் அப்பா உன்னை, பிறப்பதற்கு முன்பே கைவிட்டார். ஆனால் நான் உன்னைக் கைவிட மாட்டேன். இந்த உலகத்தில் நீ வளர்ந்து பெரியவளானால் என்னைப் போலவேதானே கஷ்டப்படுவாய்? அப்போது என்னைத் தானே நோவாய்? வேண்டாம். இந்த உலக வாழ்க்கை உனக்கு வேண்டாம். வா, இரண்டு பேருமாய்ப் போகலாம்'' என்றாள். பிறகு, நிர்மானுஷ்யமான ஜலப் பிரதேசத்தைத் தேடி நிதானமாக நடந்து சென்றாள்.

சாவித்திரி! நீயும் உன் குழந்தையும் நீண்ட காலம் வாழ்ந்து உலகின் சுகதுக்கங்களை அநுபவிக்க வேண்டுமென்று பிரம்மதேவன் உங்கள் தலையில் எழுதியிருக்கிறானே? நீ அதை மீற நினைப்பதில் என்ன பிரயோஜனம்?

(தொடரும்)

வெளியே பனி; வீட்டுக்குள் வெப்பம்!

பாப்பையா

'எல்லாருமே எழுபது எம்பதுன்னு மார்க்கு எடுத்துற முடியுமா? அப்படி எடுக்குறதுக்கு நான் என்ன இங்கிலீஷ் மீடியத்தில படிச்சனா, இல்லை பெரிய பணக்காரங்க படிக்கிற பள்ளியில படிச்சனா? ஏதோ சாதாரண ஏழைப் பிள்ளைங்க படிக்கிற பள்ளிக் கூடம்! அங்க உபகரணமும் இல்ல; உக்காந்து படிக்கப் பெஞ்சும் இல்லை; ஊமத்தை இலை உபகாரஞ் செய்ய லைன்னா பிளாக் போர்டே இல்ல; அதில படிக்க வந்த நானு, காலேஜ்ல அம்பது அம்பத்தைஞ்சுன்னே பாஸ் பண்ணிட்டேனே அதை நெனச்சுச் சந்தோஷப்படாம, எப்பப் பாத்தாலும் 'நீயெல்லாம் படிச்சுக் கிழிச்சே'ன்னு இந்த அப்பா திட்டிக்கிட்டே இருந்தா அந்த வீட்டுக்குள்ள நிம்மதியா இருக்க முடியுமா?

'இவரு எஸ்.எஸ்.எல்.சி. முடிச்சதும் சர்வீஸ் கமிஷன் எழுதினாராம். உடனே வேலை கிடைச்சிருச்சாம்; எப்பப் பாரு இந்தப் பீத்தல்தான். இவரு காலத்தில சர்வீஸ் கமிஷன் பரீட்சை இருந்துச்சி; எழுதினாரு. இப்பக் கமிஷன் சர்வீஸ்தானே இருக்கு; இதுக்கு நானா காரணம்?

'இல்லை; நான் என்ன எம்ப்ளாய்மெண்ட்ல எழுதி வக்காம இருக்கனா? இந்து பேப்பர் விளம்பரத்தைப் பாத்து எழுதிப் போடாம இருக்கனா? அப்பிளிகேசனுக்குக் காக; சர்ட்டிபிகேட்டு, டெஸ்டிமோனியல்னு, கந்தலு கதக்கல்னானு அத்தனைக்குங் காக; கடைசியில தபால் ஆபீஸ் வேற; இதுல போலி இண்டர்வியூக்கள்! என்னை என்ன செய்யச் சொல்றீங்க? உங்க கிட்ட இதுக்கு மேல காசு கேக்க மட்டும் இல்ல; எந்த இடத்துக்கும் போய் நிக்கவே வெக்கப்பட்டுக்கிட்டுத்தான நான் வீட்டுக்குள்ளய அடைஞ்சு கிடக்கேன்' சே; என்னடா படிப்பு இது! படிக்கச் சொல்லிக் கொடுத்தவங்க, படிச்ச பிறகு எங்க வேலை கெடைக்குமின்னு சொல்லித் தராம போயிட்டாங்களே' - உறக்கம் வராமல் கிடக்கும் இந்த இளைஞரின் மனதில் ஓராயிரம் எண்ண ஓட்டங்கள்.



'என்னம்மா; உன் செல்வ மகன் பள்ளி கொண்டாச்சா; சாப்பிடத் தூங்க; சரியான சத்திரமாப் போச்சு இந்த வீடு. நமக்குப் பின்ன இரண்டு தங்கச்சிங்க இருக்குகளே; அப்பா ஒரு மனுஷன் உழைச்சு, என்னைக்குக் காரியம் ஆகிறதுன்னு கொஞ்சமாவது நெனப்பு இருந்தா இப்படி இருப்பானா? எந்த நேரமும் அடை காக்குற கோழி மாதிரி வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடந்தா எப்படி வேலை கெடைக்கும்? நாலு இடத்துக்குப் போகணும்; நாலு மக்க மனுஷரைப் பாக்கணும்; அப்பல்ல ஏதாவது வேலை கெடைக்கும். இதெல்லாம் உருப்படுற கேசாவா இருக்கு; உபத்ரவம்; இப்படி ஒரு பிள்ளையைப் பெத்ததுக்குப் பெறாமயே இருந்திருக்கலாம்;' - அப்பாவிற்கு உறக்கம் வரவில்லை.

'விடிஞ்சா அடைஞ்சா நித்தம் இந்தப் புலம்பல்தான்; இன்னைக்குன்னு இல்லாம போகுமா? அவனுந்தான் என்ன செய்வான்? ஆடி ஓடி அங்கே இங்கேன்னுதான் போய்ப் பாக்குறான்; காரியம் ஆகணுமே; மாட்டேங்குதே; எங்க போனாலும் என் ராசி என் பிள்ளை கூடவே போகுதே! இப்பத்தான் எல்லாமே காசு, சிபாரிசின்னு ஆகிப் போச்சே; இது இவருக்குத் தெரியாமலா இருக்கு! இம்புட்டுப் பேச்சுப் பேசுறாரே இவரு சிபாரிசில எங்கயாவது ஒரு வேலை

வாங்கிக் கொடுக்கலாமில்ல; அப்படியும் முயற்சி செய்யாமையா இருந்தாரு? எங்கெங்கேயோ போனாரு; எவனெவனையோ நம்புனாரு; 'அவன் என் மேல ரொம்ப அபிமானமானவன்; அடுத்த மாசம் வேலை போட்டுத் தருவான் பாரு'ன்னு இந்த அப்பிராணி மனுஷன் எத்தனை தடவை எங்கிட்டவே பீத்தி ஏமாந்து போய் இருக்காரு! பையன், அந்த வேலை விஷயம் என்னப்பா ஆச்சின்னு கேட்டப்பவெல்லாம் 'எல்லாம் சீக்கிரம் ஆகும்டா'னு சொல்லிட்டு, அவனைப் பார்க்கவே வெக்கப்பட்டிருக்காரே!

'இந்தப் பயமேல இந்த மனுஷன் அந்தக் காலத்தில என்னமாப் பிரியமா இருந்தாரு! வீதிக் கடையின்னாலும் விதத்துக்கு ஒரு சட்டைதான்; டவுசர்தான்! வீட்டுக்கு ஒருத்தர் வந்துட்டாப் போச்சு; அவுங்க கிட்ட இவன் பிரதாபத்தை இவர் மாதிரி யார் அளக்க முடியும். இவன் எச்சை துப்புனாலும் சரி; இசகுபிசகாப் பேசுனாலும் சரி; 'ஜூயோ, என் பிள்ளை எம்புட்டு அறிவாளியா இருக்கு'ன்னு வாய்க்கு வாய் பேசிச் சிரிச்ச மனுஷன்தான். இப்பவும் பிரியமில்லாமயா இப்படிப் பேசுறாரு; வயசாயிருச்சு; இவனை வைச்சுக் கரை ஏறலாமின்ற நம்பிக்கை இடிஞ்சுக்கிட்டே போகுது; பொம்பளைப் பிள்ளைக கவலை பூதமா வந்து மனசுல உக்காந்துக்கிடுச்சி; இத்தனையையும் தாங்கிக்கிடுற சக்தி உடம்புக்கும் இல்லாம போச்சி; மனசு கொதிக்குது; இந்தக் கொதிப்பைத் தாங்கிக்கிடக் கூடியவங்க கிட்டதான காட்ட முடியும்; அதான் இந்தப் பயலை அடிக்கடி கரிச்சுக் கொட்டுறாரு; இதுல யாரைத்தான் குத்தம் சொல்றது?

'எவக்குந்தான் கோபம் வருது? நான் யார்கிட்ட காட்ட முடியும்? நான் ஏன் பிறந்தேன்னு என் மேலயே கோபப்பட்டு அடுப்படியில உக்காந்து அழுது தணிச்சிக்கிடுறேன். என்னால அழ முடியும்; அவர் ஆம்பளை; அழவும் முடியாம ஆத்திரப்படுறாரு; அந்த உரிமை கூட அவருக்கு இல்லையா? இத இந்தப் பிள்ளைங்க விளங்கிக்கிடவா போகுதுக?

'சின்னஞ் சிறுசுக; இந்த வயசுல இப்படித்தான் இருக்குங்க; நாமளும் இந்த வயசுல இப்படித்தான இருந்தோம்ங்கிற எண்ணம் நமக்கு வரலையே; பெரியவங்க அவுங்களுக்கு இருக்கிற நெருக்கடியில, இப்படித்தான் இருப்பாங்க, நாம சகிச்சுத்தான் போகணும்ங்கிற நெனப்பு இந்தப் பிள்ளைகளுக்கு மட்டும் எப்படி வரும்? இளமையை அறிஞ்ச நமக்கே நெனப்பு இல்லைன்னா முதுமையை அறியாத இதுகளுக்கு எப்படி அது வரும்?' - அம்மாவும் பொய்த் தூக்கம் போட்டுக் கொண்டிருக்கிறாள்.



'இப்பைக் கிப்பத்தான அப்பா இப்படி ஆகிட்டாரு; வயசாயிட்டா எல்லாருமே இப்படித்தானோ? பாவம் அண்ணன்! அவனுந்தான் என்ன செய்வான்? இந்தக் காலத்தில வேலை கெடைக்குறது குதிரைக் கொம்புன்னு நமக்குத் தெரியறது அப்பாவுக்கு மட்டும் எப்படித் தெரியாம இருக்கும்? அவனுக்கு வேலை கெடைக்கலைன்னா அதுக்கு நாங்க என்ன செய்யிறது? ஒன்னும் பேச முடியாது, சிரிக்க முடியாது; எது செஞ்சாலும் குத்தம். பக்கத்து வீட்டுலே பாட்டுப் போட்டா அதுக்கு நாங்களா பழி? அதைக் கேட்டு நாங்க பாழாகுறோமாம்! நல்லவேளை அம்மா ஒருத்தியத்தான் விட்டு வச்சிருக்கார்; இல்லாட்டி அந்த எந்திரத்தையும் கொட்டியே கோளாறாக்கியிருப்பார்; இன்னும் எத்தனை காலத்துக்கு இந்த அவஸ்தையோ?' - மூத்த பெண் விழி மூடாமல் காத்திருக்கிறாள்.

வீட்டுக்குள் வெப்பம்; வெளியே பனி!

- சாலமன் பாப்பையா

3

நாளை வதுவை
மணமென்று நாளிட்டு
பாளை கமுகு
பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன்
கோவிந்தன் என்பான் ஓர்
காளை புகுதக்
கனாக்கண்டேன்
தோழிநான்

- நாச்சியார் திருமொழி



வண்ணத்துப்பூச்சி வேட்டை

மூன்று பேரும் சம்மதித்து விட்டார்கள். அப்பாவும் அம்மாவும் என்னை இண்டர்வ்யூ போல் உட்கார வைத்துக் கேட்டார்கள்.

''ரேகா, யாரைக் கட்டிக் கொள்ள இஷ்டம் உனக்கு?''

''அப்பா நான் மேலே படிக்கிறேனே'' என்று கெஞ்சினேன்.

அம்மா, ''பேசக்கூடாது. இப்போது என்ன படிக்க உத்தேசம் சொல்லு...?'' என்றாள்.

''ஏதாவது...''

''கம்மா கல்யாணத்தைத் தள்ளிப் போடுவதற்காகச் சொல்கிறாய். உனக்குப் படிப்பில் நாட்டமில்லை. உன்னை பி.எஸ்ஸி., பாஸ் பண்ண வைத்ததே பெரும்பாடாகி விட்டது. ரேகா உனக்கு நல்லதுக்குத்தான் சொல்கிறோம். இந்த மூன்று பேருமே வேண்டாம் என்றாலும் மேற்கொண்டு தேடலாம். மூன்று பேரில் யாராவது பிடித்திருந்தால் சொல்லு. அர்ஜுன் நல்ல பாங்க் உத்தியோகத்தில் இருக்கிறார். அடுத்த மாப்பிள்ளை அமெரிக்காவில் சிறப்பாக, குமார்...''

''குமார் ஆண்டிபட்டி'' என்று சிரித்தேன்.

அம்மா விரோதமாகப் பார்த்து, ''எதற்குத்தான் சிரிக்கிறது என்று விவஸ்தை இல்லையா? சரி, கிருஷ்ண ப்ரேமி பற்றி என்ன நினைக்கிறே?''

அந்தக் கால சுயம்வர ராஜகுமாரிகள் எப்படி குழம்பியிருப்பார்கள் என்பது எனக்கு அப்போது புரிந்தது. அங்க தேசத்து ராஜகுமாரன் மீசை சரியில்லை; வங்க தேசத்து இளவரசன் முகம் சரியில்லை; மகதத்துக்காரன் அருகம்புல் ஜூஸ் சாப்பிடுகிறான் என்றால் என்ன பண்ணுவாள்? பாவம் அந்த ராஜகுமாரி.''

''அப்பா, மூன்று பேரில் உங்களுக்கு யாரைப் பிடித்திருக்கிறது, சொல்லுங்கள்'' என்றேன்.

''ரேகா இது உன் கல்யாணம்.''

''கல்யாணத்தை மறந்து விடுங்கள். யாரை உங்களுக்குப் பிடிக்கிறது?'' என்றேன்.

''எனக்கு அந்த அமெரிக்கா மாப்பிள்ளையைப் பிடித்திருக்கிறது!'' என்றாள் அம்மா.

''அப்பா உங்களுக்கு?''



"உண்மை சொன்னால் அர்ஜுன் பரவாயில்லை. அவனுக்கு வாழ்க்கையில் குறிக்கோள் இருக்கிறது. விசாரித்துப்பார்த்தேன். நல்ல ஃபாமிலி."

"என்ன குறிக்கோள்?"

"முப்பத்தைந்து வயசுக்குள் முப்பத்தைந்து லட்சம் சம்பாதிக்கப் போகிறானாம்."

"அதை உன்னிடமும் சொல்லி விட்டாரா?" என்றேன்.

"மேலும் நான் ரிட்டையர் ஆனதும் சென்னையில் செட்டில் ஆக வேண்டும். நீ சென்னையில் கல்யாணம் செய்து கொண்டால் எனக்குச் சௌகரியம். அப்பப்போ உன்னை வந்து பார்க்கலாம். புத்தகம் பரிமாறிக் கொள்ளலாம்."

"ஆமாம் புத்தகம்!" என்றாள் அம்மா. "எப்ப பார் புத்தகம்! ஜெயந்தி, உனக்கு யாரைப் பிடித்திருக்கிறது?"

"மூணு பேரையும் பிடிக்கலை."

"அப்பா, ஆமிர்கான் ஜாதகம் கிடைக்காதா?" என்றாள் என் தங்கை.

அப்பா அவளை அலாக்காகத் தூக்கிப் பார்த்து, "இடுப்பு பிடித்துக் கொண்டு விட்டது. இந்தக் குட்டி கனமாய்டுத்து" என்றார்.

"வயசு என்ன?" என்றாள் அம்மா. "இவ வயசில எனக்குப் பிள்ளை பார்க்க ஆரம்பித்தாகி விட்டது" என்று புளுகிவாள். ஜெயந்திக்கு, குழந்தைத்தனம் முடிய, பருவத்தின் ஆரம்ப அடையாளங்கள் தெரிந்தாலும் இன்னும் ராத்திரி எப்போதாவது விரல் சப்புகிறாள்.

அவள் பழக்கத்தை நிறுத்த எத்தனையோ முயற்சிகள் செய்து விட்டோம். கட்டை விரல் கொஞ்சம் சூம்பியே இருக்கும். அம்மா அவளுக்கு ஆறு வயசில் வேப்பெண்ணெய் தடவிப் பார்த்தாள். கைக்கு மல் துணியில் உறை தைத்துப் போட்டுப் பார்த்தாள். ம்ஹூம். அவள் பழக்கத்தை விடவில்லை. அப்புறம் தானாகவே நிறுத்தி விடுவாள் என்று யாரும் கண்டு கொள்வதில்லை.

இப்போது படுக்கை விளக்கணைத்ததும் போட்டுக் கொள்வாள் சிலநாள், அதும் தூக்கம் வரும் வரை. சூம்சூம் என்று லேசாக அருகில் சத்தம் கேட்கும்.

சட்டென்று விளக்குப் போட்டால் கண்டுபிடிக்க முடியும். ஜெயந்தி எங்களுக்கெல்லாம் எஜமானி. அவள் சொன்னால் எல்லாம் வீட்டில் நடக்கும். அவள்தான் டீவியில் சானலை நிர்மானிப்பாள். சோப் வாங்குவது, பேஸ்ட் வாங்குவது எல்லாம் அவள்தான். சின்ன எஜமானி போல் அவளை நடத்துவதில் உள்ள பாசாங்குகளை நாங்கள் எல்லோரும் மனமுவந்து ரசித்தோம். போன் வந்தால் அவள்தான் எடுத்து "மே ஐ நோ ஹூ இஸ் ஸ்பீக்கிங்?" என்பாள். ஹோம் ஒர்க் அதிகம் என்றால் தனக்குள்ளே அழுது கொள்வாள்.

சுஜாதா

அர்ஜுன் போன் பண்ணிக் கொண்டே இருந்தார். ஒருமுறை என்னையே போனில்

கூப்பிட்டு "ஹாய் ரேகா, என்ன இன்னும் தீர்மானிக்கவில்லையா? நான் ஞாயிறு அன்று வருகிறேனே. அதற்குள் ஆம் அல்லது ஆம் என்று சொல்ல விடு" என்று சிரித்தார்.

எனக்கு இந்த நாட்களில் குழப்பமாக இருந்தது. கஷ்மாவெல்லாம் கல்யாணத்தைப் பற்றித் தெளிவாக இருந்தாள். "இந்த ஏப்ரலில் குட்டுவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்" - அவ்வளவே!

என் கிளாஸில் எல்லாருக்கும் இந்த சம்மரில் கல்யாணம் அடுத்து அடுத்து வந்தது.

பாரத தேசத்தில் பெண்களுக்குக் கல்யாணத்தில் அதிகம் விருப்பு, வெறுப்பு, செலக்ஷன், ரிஜெக்ஷன் இவற்றுக்கு இடம் இல்லை என்பதை உணர்ந்தேன். அப்பா மற்றொரு பையன் என்னைப் பார்க்க வர ஏற்பாடு செய்து, பல திசைகளில் போன் போட்டுக் கொண்டிருந்தார். என்றைக்காவது யாரையாவது கல்யாணம் செய்து கொள்ளத்தான் வேண்டும் என்கிற அடிப்படையை அசைக்க முடியாது. அப்பா, அம்மா, ஜெயந்தியைப் பிரிய வேண்டும் என்று தோன்றும் போதெல்லாம் தலையணையில் கண்ணீர் வடியும் எனக்கு.

அர்ஜுன் மறுபடி என்னைப் பார்க்க வந்த போது, எனக்கு ஒரு அருமையான புத்தகமும் அம்மாவுக்கு டெரிசில்க்கில் புடைவையும் அப்பாவுக்கு ரீடிங் கிளாஸும் ஜெயந்திக்கு ஆஸ்டெரிக்ஸ் ரின்டின் டின் காமிக்ஸும் வாங்கி வந்து, எங்கள் குடும்பத்தையே ஒரே வீச்சில் வீழ்த்தி விட்டார். அந்தப் புத்தகம்தான் என்னை வீழ்த்தியது!

"எப்படித் தெரியும் எனக்கு ப்ராட்பரி பிடிக்கும் என்று?"

"அன்று வந்த போது உன் அலமாரியில் பார்த்தேன்."

ப்ராட்பரியின் அத்தனை சிறுகதைகளும் இரண்டு பாகங்களில் அழகான தோல் நிற அட்டை போட்டு, தங்க எழுத்துக்கள் எழுதிய லைப்ரரி எடிஷன். இருக்கும் ஒரு அறுநூறு ரூபாயாவது.

"உங்களுக்கு எப்படித் தாங்க்ஸ் சொல்வது! ரொம்ப விலையிருக்குமே!" என்றேன்.

"தாங்க்ஸாவது? நான் உங்கள் குடும்பத்தில் நுழையப் போகிறேனே."


"அம்மா, உங்களுக்கு மஸ்டர்ட் கலர் பிடிக்கும் என்று என் அம்மாவிடம் சொன்னீர்கள்."

"அப்படியா! எப்போது?" என்று பூரித்துப் போன அம்மாவுக்கு எல்லா கலரும் பிடிக்கும். "இப்ப எல்லாம் அதான் ஃபேஷன். பட்டு போலவே இருக்கு பாருங்கோ."

அப்பா ரீடிங் கிளாஸை போட்டுப் பார்த்து, "இவ்வளவு பவர்சென்று கூட கண் தெரியுமா?" என்று வியந்தார். பின் சம்மதம் சொல்லவில்லையென்றால், குற்ற உணர்ச்சியில் ஃபேமிலியே தூக்குப் போட்டுக் கொள்ளும் ஸ்திதி வந்து விடும் போல இருந்தது.

மறுநாள் அப்பா போனில் சொல்லி விட்டார். "அர்ஜுன்! வெல்கம் டு அர் ஃபாமிலி."

அதன்பின் சம்பவங்கள் விரைந்தன. அம்மாவுடன் கரோல்பாக் போய், காஞ்சிபுரம் பட்டுப் புடைவைகள் எடுத்தோம். அர்ஜுன் எனக்காக வெல்வெட் பெட்டியில் வைர மோதிரம் வாங்கிக் கொடுத்தார். நான் கடிதார் அணிவதை நிறுத்தி விட்டு, தினப்படி ஸாரி கட்டிக் கொண்டேன். ஜெயந்திக்குப் பட்டுப் பாவாடை. வெள்ளிப் பாத்திரங்களை கஃபார் மார்க்கெட்டில் பாலீஷ் பண்ணக் கொடுத்து, என் நகைகள் லாக்கரிலிருந்து எடுத்து, அழைப்பிதழுக்கு ப்ரூஃப் பார்த்து, நவ்வாலா கல்லியில் இருந்த ஒரே தமிழ் பிரஸ்ஸில் அச்சடித்து, அப்பா தன் சகோதர சகோதரிகளுக்கெல்லாம் மஞ்சள் தடவி கார்டு எழுதிப் போட்டு, என்னை அர்ஜுன் இரண்டு மூன்று தடவை சினிமாவுக்கு அனுமதி கேட்டு அழைத்துச் சென்றார். பட்டும் படாமலும் உட்கார்ந்தாலும் தகாத இடங்களில் தொட முயற்சிக்கவும் இல்லை. நான் அனுமதிக்கவும் இல்லை. சினிமாவைக் கிண்டல் பண்ணிக் கொண்டு, அவருடன் பாப்கார்ன் சாப்பிட்டது தமாஷாக இருந்தது. நிருலாவில் ஐஸ்க்ரீம், ஸோனா ரூபாவில் மசால் தோசை சாப்பிட்டதும் தமாஷாகத்தான் இருந்தது. அவருடன் பேசப் பேச எனக்கு அர்ஜுனைப் பற்றிய அபிப்பிராயம் கொஞ்சம் கொஞ்சமாகத் திருந்தி, அவரிடத்தில் பற்று வந்தது. இவரிடம் நிறைய விஷயஞானம் இருப்பதைக் கவனித்தேன். கொரிய பொருளாதாரம், டங்கல் ட்ராப்ட், ஜெனட்டிக் இன்ஜினியரிங் என்று பெரிய விஷயங்களையெல்லாம் எனக்கு எளிதாக விளக்க முயற்சி செய்தார். நான் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேனே தவிர, அவரைக் கவனிக்கவில்லை. கிட்டத்தில் பார்த்த போது,



மருமகள் : அத்தை செய்யற கொடுமையைக் கேட்டீங்களா மாமா!

மாமனார் : கூறுகெட்ட கழுதை... என்னம்மா சொன்னா உன்னை? கூப்பிடு அவளை நாலு சாத்து சாத்தறேன்!

மருமகள் : ஒண்ணும் சொல்லலை! நீங்க யார் பக்கம்னு டெஸ்ட் பண்ணிப் பார்த்தேன், அவ்வளவுதான்!

- பி. ஜி. பி. இசக்கி

ஆரோக்கியமான குழந்தைத் தைலம் நடவினாற்போல முகம். வாரம் ஒருமுறை ஷேவ் செய்தால் போதும் போல இருந்தது. உள்ளுக்குள் எப்படி இருப்பார் என்று யோசிக்க வைத்தது. சட்டைக்குள் தெரிந்த லேசான தங்கச் சங்கிலி கூட கிறக்கம் தந்தது. அதை விடுவித்து விரலால் திரட வேண்டும் போல இருந்தது. என் ஹார்மோன்கள் அந்த வாரம் ஓவர்டைம் வாங்கிக் கொண்டு இருந்தன. ஒரே ஒரு தடவைதான், ப்ளாஸாவில் கூட்டமில்லாமல் இருக்க, என்னைக் கலைத்து விட்டார்.

நான் அவரிடம் சத்யம் வாங்கிக் கொண்டேன். எனக்கு அது பிடித்தமாக இருந்தாலும் எச்சரிக்கை ஓரத்தில் ஒலித்துக் கொண்டே இருக்க, ''அர்ஜுன் எனக்கு சத்தியம் பண்ணிக் கொடுங்க'' என்று கையைக் காட்டினேன்.

''என்ன சத்யம் ரேகா?''

''நிச்சயம் என்னைக் கல்யாணம் பண்ணிப்பீங்கதானே?''

''என்னது வைத்தியமாட்டாம் பேசறே?''

''ருசி கண்டுட்டு விட்ற மாட்டீங்களே...''

''சத்ருகன் சின்ஹா படம் நிறைய பார்த்திருக்கியா என்ன? மேலும் இப்ப என்ன ஆய்டுத்து உன்னைத் தொட்டதில? யாரும் யாரையும் தொட்டுக் கர்ப்பமாக்க முடியாது, தெரியுதில்லை.''

''அதுக்கில்லை. நான் இதுவரை... இந்த மாமதிரி யாரும் என்னை...''

''எனக்கும் ரேகா.''

''பொய் பொய்'' என்று அவரை மார்பில் குத்தினேன்.

''நிஜம்மா, சாமி சாட்சியா இதுவரைக்கும் பெண்கள் பற்றியே நினைக்கலை.''

''பின்ன எதைப் பத்தி?''

''சொன்னேனே, முப்பத்தைந்து லட்சம் முப்பத்தைந்து வயசில.''

''இப்ப எத்தனை லட்சம் பண்ணியிருக்கீங்க?''

''லட்சமா? இப்பத்தான் ஹுபின் ஐந்நூறு ஷேருக்கு அப்ளை பண்ணியிருக்கேன். ஐ ஹாவ் எ லாங் வே டு கோ.'' நடக்கும் போது எதிரே வந்த டாக்ஸியின் எண்ணைக் கூட்டச் சொன்னார். பதினெட்டு வந்தது. ''ஒன்னையும் எட்டையும் கூட்டு.''

''ஒன்பது. ஏன்?''

''என் லக்கி நம்பர்!'' என்றார்.

''உங்களுக்கு இதெல்லாம் நம்பிக்கை உண்டா?''

''ஒன்பது ஒரு ஸ்பெஷல் நம்பர். அதைப் பத்தி அப்புறம் சொல்றேன். ஒன்பது, ஆறு, மூணு.. உனக்கு என்ன நம்பர் பிடிக்கும்?''

''எனக்கு எல்லா நம்பரும் ஒன்னுதான்!'' என்றேன்.

(தொடரும்)



ஏனிந்தப் புலம்பல்?

டங்கல்... டங்கல்... டங்கல்
நாடெங்கும் புலம்பல்.
'பேடன்ட்' உரிமை கோர
இங்கே
எத்தனையோ இருக்கும்போது,
ஏனிந்தப் புலம்பல்?

கவரைத் தள்ளிக்
காரியம் முடிக்கும்
குறுக்கு வழிக்குக்
கைகாட்டியது நாம்தானே?

அறிவை மயக்கி
உணர்வை உசுப்பும்
ஆரவார அரசியலுக்கு
அஸ்திவாரம் நாம்தானே?
இலவசம் கொடுத்தே
குடிகளை எல்லாம்
தன்வசப் படுத்தும்
அரசியல் சாணக்கியத்தை
அரங்கேற்றியதும் நாம்தானே?


தீக்குளிக்கும் தியாகம்...
தின்னும் விரதப் போராட்டம்...
காலில் விழும் கலாசாரம்...
....
இப்படி பேடன்ட்
சொந்தம் கொண்டாட
எத்தனையோ இருக்கும்போது,
ஏனிந்தப் புலம்பல்?

– நெல்லை குரலோன்

"பழைய வடிவங்களின் அழகும், வேலைப்பாடும் மிளிரும் ஆபரணங்களை இன்று நாட்டியக் கலைஞர்கள்தாம் அதிகமாக அணி கிறார்கள். ராக்கோடியும், ஜடை நாகமும் ஒட்டியாணமும் இவர்களுக்குத் தேவைப் படுகின்றன. இதோ பாருங் கள், இந்த ஜடை நாகம் முழுத் தங்கத் தால் செய்யப்பட வேண்டும் என்றால் லட்ச ரூபாய் வரை ஆகும். ஆனால்


* பல்வேறு டிசைன்களில்...





இதன் விலை பதினோராயிரம் ரூபாய்தான். (ஸ்ரீநிதி ரங்கராஜன் இதை வாங்கியிருக்கிறார்.) அதே போல, பதினைந்தாயிரம், இருப தாயிரம் ரூபாய் விலை ஆகும் முழுத் தங்க ஆபரணம், வெள்ளியால் உருவாக்கி, தங்கப் பூச்சுடன் செய்யும் போது ஆயிரத்து ஐநூறு, இரண்டா யிரம் ரூபாய்க்குள்தான் ஆகிறது!'' என்கிறார் சக்ரா ஜுவல்லரி அதிபர் கல்கி ராஜு.

இவை கோயிலில் கடவுள் திரு வுருவங்களுக்குச் சாத்தப்படும் நகை களாக மட்டுமே முன்பு இருந்ததால் இதை 'டெம்பிள் ஜுவல்லரி என்றே




மரபு வழியில் நவீன நகைகள்!

குறிப்பிடுகிறார்கள். ஆனால் இன்றைக்குக் காலம் மாறிப் போய் விட்டது. நேற்றைய பழைமை, இன்றைய ஃபாஷனாக உருமாறிக் கொண்டிருக்கிறது. உடைகளில் மாத்திரமல்ல; நகைகளிலும் நவீன மாடல்கள் வசீகரம் செய்கின்றன. ''நகைகள் என்றால், அவை முழுக்க முழுக்க அசல் தங்கத் தில்தான் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் மனோ நிலை, இன்றைய பெண்களிடம் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டு வருகிறது!'' என் கிறார் கமல் மோதி. தில்லி யைச் சேர்ந்த இவர், 'ஆர்ட் காரட்' என்ற பெயரில் தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளி நகைகள் நவீன பாணியில் தயாரித்து விற்பனை செய் பவர்.

''பெரும்பாலான பெண் கள், நகைகளை வெறும் அலங்காரப் பொருள்களாக மட்டுமே கருதுவதில்லை. அதையொரு குடும்பச்

● ... நவீன நகைகள்



சொத்தாகவும் சேமிப்பாகவும் தான் கருதுகிறார்கள். இந்த நிலையில் 'ரீ-சேல்' மதிப்பில்லாத, முலாம் பூசப்பட்ட வெள்ளி நகைகளை எந்த அளவுக்கு விரும்பி வாங்குகிறார்கள்?''


''கடந்த ஐந்தாறு வருடங்களாக ஆண்டுதோறும் சென்னைக்கு வந்து, எனது நவீன பாணி நகைகளைக் கண்காட்சிக்கு வைத்து, விற்பனையும் செய்து வருகிறேன். ஒவ்வோர் ஆண்டும் எனது நவீன பாணி நகைகளுக்கு, வரவேற்பு அதிகமாகிக் கொண்டுதான் வருகிறது!'' என்று அடித்துச் சொல்லுகிறார் கமல் மோதி.

''இன்றைய நவீனப் பெண்கள் உலகம் தெரிந்தவர்கள். முதலீடும் சேமிப்பும் நகைகள் மூலமாகத்தான் செய்யப்பட வேண்டும் என்கிற அவசியமில்லை என்பதை உணர ஆரம்பித்து விட்டார்கள். எனவே, உடைகளைப் போலவே நகைகளும் தங்களுக்குப் பொருத்தமாக இருக்கின்றனவா, அழகாக இருக்கின்றனவா, கலையம்சத்தோடு இருக்கின்றனவா என்று தேட ஆரம்பித்து விட்டார்கள். அவர்களின் தேடலைத்தான் எனது 'ஆர்ட் காரட்' பூர்த்தி செய்து கொண்டிருக்கிறது!'' என்கிறார் அவர்.

* கல்கி ராஜு



* கமல் மோதி



''இருந்தாலும் நமது பெண்களுக்கு அசல் தங்கத்தை அணிகிற போது ஏற்படுகிற திருப்தி, இவற்றை அணிவதால் ஏற்படுமா?''

''நான்தான் சொல்கிறேனே... தங்கமாக இருந்தால் என்ன, முலாம் பூசப்பட்டதாக இருந்தால் என்ன... அவை தனக்கு அழகாக இருக்குமா என்பதுதான் இன்றைய நாகரிகப் பெண்ணின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. அதைத்தான் நான் பூர்த்தி செய்கிறேன்!'' என்கிறார் கமல் மோதி.

இவரது கண்காட்சியில் சரித்திர காலத்து நகை மாடல்கள் கூட புது மெருகு பெற்று நவீன பாணிகளாகக் காட்சியளிக்கின்றன. ருத்திராட்சங்கள் சேர்க்கப்பட்ட பல்வேறு டிசைன்கள் கொண்ட கழுத்து மாலைகளும் காதணிகளும் இருக்கின்றன.

''ருத்திராட்சம் என்பது ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயமாயிற்றே! இதைக் கூடப் பெண்கள் வாங்குகிறார்களா, என்ன?'' என்று நாம் ஆச்சரியத்துடன் கேட்ட போது, ''தென்னிந்தியாவில் இவற்றுக்கு இன்னும் அதிக வரவேற்பு இல்லையென்றாலும், வட இந்தியாவில் நல்ல வரவேற்பு இருக்கிறது!'' என்கிறார்கள் விற்பனையாளர்கள்.


இருப்பினும், ருத்திராட்சத்தை இப்படி கழுத்தணிகளில் கோத்து ஒரு ஃபாஷனாக அணியலாமா?

''அணிவது தவறு!'' என்கிறார் பிரம்மஸ்ரீ டி.எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள். ''மந்திர உபதேசம் ஆனவர்கள் மட்டும்தான் அப்படி அணிந்து கொள்ளலாம் - அதுவும் குருவின் அனுமதியோடு. சுமங்கலிகள் அணியக் கூடாது. இது எதில் சொல்லியிருக்கிறது - ஆதாரம் இருக்கிறதா என்றெல்லாம் தெரியாது. ஆயினும் காலங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் ஜபமாலையாகப் பயன்படுத்தலாம்; அதில் தவறில்லை!'' என்கிறார் அவர்.

- பிரின்ஸ், சந்தியா, எஸ்.வி.என்

மாடல் : செல்வி ஆர்த்தி

வண்ணப்படமும் படங்களும் : கோபிநாத்



"இப்படி இந்தப் படகு மறைவிலேயே எத்தனை நாளைக்குக்க நாம சந்திக்கிறது?"

"கவலைப்படாதே... இது ஓட்டைப் படகு தான். எப்பவும் இங்கேயேதான் இருக்கும்!"

- வி. சி. கிருஷ்ணரத்தினம்



"இந்த எழுத்தாளர் தபால் கார்டுலேயே குட்டிக் கதை எழுதி அனுப்பி இருக்கிறார், சார்!"

"இதில் என்ன ஆச்சரியம் இருக்கு?"

"நிராகரிக்கப்பட்டால் திரும்பி அனுப்ப ரிப்ளை கார்டு வச்சிருக்கிறாரே!"

- பார்வதவர்த்தினி

"மகனே!"

"என்னம்மா?"

"நம் குடும்பத்துக்கு விளக்கேத்த..."

"ஆஹா! ஆஹா! சொல்லும்மா! சொல்லும்மா! என்னம்மா?"

"ஒரு குத்து விளக்கு வேணும்டா!"

- சவி





"தலைவர் கையில் பைனாகுலர் வெச்சுக்கிட்டுப் பேச வராரே, ஏன்?"

"நம்ம நாட்டின் தொலைநோக்குத் திட்டங்களைப் பற்றி அலசப் போறாராம்!"


- வி. சி. கிருஷ்ணரத்தினம்

"அதோ காரிலே காத்து வாங்கிட்டு உட்கார்ந்திருக்காரே, அவரு பெரிய பணக்காரர்!"

"காரிலேயே வாக்கிங் போவாரா?"

"ஊஹூம், அவருக்குப் பதிலா வாக்கிங் போக ரெண்டு பேரை வேலைக்கு வச்சிருக்காரு!"

- பார்வதவர்த்தினி



முகம் தெரியாத முகம்

ஆறு மாதத்திற்கு ஒருமுறை எங்கள் கிளையில் டிபார்ட்மெண்ட் மாற்றம் இருக்கும். இந்த முறை நான் லீவ்-ரிஸர்வ் - அதாவது யார், யார் லீவில் போயிருந்தாலும் அவர்கள் வேலையைச் செய்வது. தண்ட டிபார்ட்மெண்ட். ஒரு நாள் நிம்மதியாக வேலை பார்த்தோம் என்பது முடியாது.

பாஸ்கர் வருவானா, மாட்டானா என்ற குழப்பத்தில் என்னை அவனுடைய கரண்ட் - அக்கவுண்ட் செக்ஷனில் உட்காரச் சொன்னார்கள். பாஸ்-புக் பதிவு பண்ணி, ஒன்றிரண்டு செக்குகளை பாஸ் பண்ணி, க்ரெடிட் ஸ்லிப்புகளை போஸ்ட் பண்ண மணி பதினொன்று ஆகிவிட்டது. பதினொன்று பத்துக்கு அவனுக்குண்டான புயல் வேகத்துடன் பாஸ்கர் நுழைந்தான்.

''எந்திருங்க மேடம்'' என்றான்.

''போர்'' - சலித்துக் கொண்டே எழுந்தேன்.

''வேற யாரும் லீவில்லியா?''

''பார்த்துச் சொல்லுங்களேன். ஏன் லேட்?'' என்றேன்.

''மானேஜர் கூட என்னைக் கேட்க மாட்டார்.''

''நான் கேட்கிறேன். ஏன் லேட்?''

''என் ஃப்ரெண்ட் ஒருத்தன் செத்துப் போய்ட்டான்.''

''எப்போ?''

''நேத்து.''

''எப்படி?''

''ஆக்ஸிடெண்ட்.''

''எங்கே?''

''மருடஞ்சாவடி தாண்டி காகாபாளயம்கிட்ட ஒரு கர்வ் ஒண்ணு இருக்கும். என் ஃப்ரெண்ட் பேர் பிரசாத். பரோபகாரின்னு சொல்லுவாங்களே அந்தப் பெயர் இவனுக்கு முற்றிலும் பொருந்தும். அந்த முகம் பாருங்க எப்பவும் சிரிச்சுக்கிட்டு... எரிச்சல், பொறுமையின்மை எதுவும் இருக்காது. பார்த்தாலே சிநேகம் பண்ணிக்கணும்னு ஆசை வரும். வயசானவங்க, கிழவி, குமரி, எல்கேஜி பையன், ப்ளஸ் டூ பையன்னு சகல வயசிலும் நூத்துக்கணக்கானவங்க லீவல் ப்ரசாத்தா என் ஃப்ரண்டாச்சேன்னு சொல்லுவாங்க, ராஜேஸ்வரி.''

சத்தியப்பிரியன்

''அது என்ன லீவல்?''

''மரவனேரியில் லீவல் டைப்-ரைட்டிங் இன்ஸ்டிடியூட் ஒண்ணு நடத்திட்டு வர்றான். அவங்க அப்பாவோட... எதுல நிறுத்தினேன்?''

''காகாபாளையம்.''

''யெஸ் யெஸ். ஒரு டெக்ஸ் டைல்ஸ் பிஸினஸ் மேனும், இவனும் சரக்கு வாங்க ஈரோடு போய்ட்டு ஜீப்பில் ரிடன் வந்திருக்காங்க.''

''ப்ரசாத் எதுக்கு டெக்ஸ்டைல்ஸ் பிஸினஸ் மேனோட?''

''சொன்னேனே. யாருக்காவது உதவின்னா இவன் அங்கே பிரசன்னமாயிடுவான். மணத்தக்காளி வத்தல் வாங்கித் தருவதிலிருந்து, பூவாக்காரனுக்கு திப்பி மாவு லோடு அனுப்புவது வரையில் எல்லாத்துக்கும் ப்ரசாத்தான். ஏடிஸி பஸ் ஒண்ணு முன்னாடி போயிட்டிருந்திருக்கு. மருடஞ்சாவடியிலிருந்தே அதை ஓவர்டேக் பண்ண முடியலை. காகாபாளையம் பக்கத்தில் வெறியோட ஓவர்டேக் பண்றப்போ மழையில் பாதி ரோட்டை அடைச்சிட்டு புளிய மரம் ஒண்ணு.''

''மை காட்!''

''எட்டு குட்டிகரணம் போட்டதாம் மேடம் ஜீப். சிரிச்சுட்டே இருக்கும் முகம்லேலே. மேல்



தாடை, கீழ்த்தாடை ரெண்டும் நொறுங்கிப் போய் விகாரமா போயிடுச்சு. வலது தொடை எலும்பு நொறுங்கி கோரமா செத்துப் போய்ட்டான்.''

சொல்லி விட்டு பாஸ்கர் மேஜையில் முகம் கவிழ்த்தான்.

''ஈஸி ஈஸி பாஸ்கர்.''

''ஜெம் ஆஃப் எ பெர்ஸன்.''

''கல்யாணம் ஆயிடுச்சா?''

''இல்லை. இருபத்தியெட்டு வயசுதான் ராஜேஸ்வரி. என்னை விட ஒரு வயசு பெரியவன்.''

''ஒரே பையனா?''

''மூணு தங்கைகள். ரெண்டு பேருக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தான்.''


செக்ஷன் ஆஃபீஸர் லேசாகத் தொண்டையைச் செருமினார். பாதியில் தொங்கும் பழைய குப்பைகளைக் கிளறப் போய் விட்டேன்.

மாலையில் அகிலாண்டம் மாமியிடமிருந்து ஃபோன் வரும் என்று காத்திருந்தேன்.

எனக்கு முதல் அப்பாயின்ட்மெண்ட் - அதாவது நான் பி.எஸ்ஸி., முடித்து விட்டு, சொந்த ஊரான கடலூரில் எல்லா வேலைக்கும் எழுதிப் போட்டு, நியூ சினிமாவிலும், ரமேஷிலும் மணிரத்னம் படம் பார்த்து முடியவில்லை - இந்த வங்கியில் சேலம் கிளையில் வேலை ஆனது. அப்பா தேடிப் பிடித்து உறவுக்காரர்களைப் பிடித்ததுதான் அகிலாண்டம் மாமி. அப்பாவின் மூத்த சகோதரரின் மச்சினன் மாமா பெண் என்பதில் குழப்பம்தான் மிஞ்சும். அகிலாண்டம் மாமி அரிமா சங்க மகளிர் அமைப்பின் வடக்குப் பிரிவின் தலைவி. ராசாராம் நகரில் பங்களா. கணவன் ராஜகோபால் கிரிமினல் லாயர். மாமியின் ஏற்பாடில்தான் எனக்கு செர்ரி ரோட்டில் விமன்ஸ் ஹாஸ்டலில் இடம் கிடைத்தது.

மாமி வரலக்ஷ்மி விரதம் சரடு கட்டிக்க வா என்றிருந்தாள். சரடு முக்கியமில்லை.

வெல்லப் பூரண கொழுக்கட்டை, உளுந்து வடை, அப்பம் காரணம். ஹாஸ்டல் சாப்பாடு ஒழித்துக் கட்டியது லஜ்ஜையை. ஆபீஸில் ஒவ்வொரு விசேஷத்திற்கு ஒவ்வொரு ஊழியர் கொண்டு வருவதை கூச்சமில்லாமல் வாங்கிச் சாப்பிடுவேன். கோகுலாஷ்டமி என்றால் பாஸ்கர் வீட்டு சீடை முறுக்கு; பிள்ளையார் நோன்பு - சதுர்த்தி இல்லை வேறு வகை நகரத்தார் டைப் - என்றால் முத்துராமன் வீட்டு பால் கொழுக்கட்டை; கிறிஸ்துமஸ் என்றால் ஷர்லி கொண்டு வரும் கேக். மாமியிடமிருந்து ஃபோன் வராமல் போகவே நானே ஃபோன் பண்ணி





"இன்ஸல்ட் பண்றதுக்கும் ஒரு எல்லை இருக்குல்ல..."

"இன்னிக்கு உன் மாமியார் அப்படி என்னடீ பண்ணிட்டா?"

"பத்திரிகைக்கு நான் ஜோக் எழுதும்போது ஒப்பாரி வைக்க அழறாடீ!"

- பி. ஜி. பி. இசக்கி

னேன்.

"யாரு ராஜேஸ்வரியா?"

"ஆமாம் மாமி."

"ஐ'ம் வெரி ஸாரி டு டிஸப்பாயின்ட் யூ டியர்."

"ஏன் மாமி?"

"ரொம்ப தெரிஞ்ச பையன் தவறிப் போய்ட்டான். கம்ப்ளீட்டா மூட்-அவுட் ஆகிப் போயிருக்கோம்."

"என்ன வயசு?"

"சாகற வயசில்லை. இருபத்தெட்டோ, இருபத்தொம்பதோ."

"பேரு ப்ரசாத்தா?"

"தெரியுமா உனக்கு? சேப்பா உசரமா இருப்பான்."

"சாகறதுக்கு முன்னால் தெரியாது."

"உபகாரின்னா அப்படி ஒரு உபகாரி. கவர்ன்மென்ட் டிபார்ட்மென்டில் அவனுக்குத் தெரியாதவா யாரும் இருக்க முடியாது. தாசில்தார் ஆஃபீஸிலிருந்து கோ-ஆபரேடிவ் சொஸைட்டி வரையிலும். சரின்னு ஒரு காரியத்தை ஏத்துண்டுட்டா முடிச்சிட்டுத்தான் நிப்பான். ஒரு பைசா வாங்கிக்க மாட்டான். பைசா வாங்கிண்டுட்டா நாளைப் பின்ன வீட்டுக்கு வந்து ஒரு வா காப்பி சாப்பிட்டுட்டு போன்னு சொல்ல மாட்டேனே மாமிம்பான். சங்கீத ஞானம் உண்டு. வீணை வாசிப்பான். இன்னிக்குப் பூரா கேட்டுண்டு இருக்கலாம். எதுல குறை? சுத்த ஆத்மா. அதுதான் பகவான் இழுத்துண்டு போயிடுத்து போலிருக்கு"- சொல்லும் பொழுது குரல் தழைந்தது. நான் ஃபோனை வைத்து விட்டேன்.

எனக்கு அந்த ப்ரசாத்தைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. அல்லது அவன் உருவப் படத்தையாவது. இது என்ன விபரீத நினைப்பு?

இரண்டு நாட்களில் அலுவலக வேலை அதிகமானது. எனவே எனக்கு நேரம் சரியாக இருந்தது.

சனிக்கிழமையும் ஊருக்குப் போகவில்லை. ரூம் மேட் தாரிணி சனிப் பிரதோஷம், ஈஸ்வரன் கோவிலுக்கு வருகிறாயா என்றாள். ஹாஸ்டல் பெண்கள் பிரதோஷம் போகலாமா என்று பொன்மலரில் யாராவது எழுதிக் கேட்டிருக்கிறார்களா எனத் தெரியவில்லை. கிளம்பி விட்டேன். கூட்டம் பார்ப்பது என்பதே தனி குஷி.

மிக அமைப்பாக பிரதோஷ காலத்தை அனுசரிப்பவர்கள் சுகவனேஸ்வரர் கோவில்காரர்கள்தான். நிடகாத்திர நந்தி. வெள்ளிக் கவசம். நிஜமாகவே நாக்கை நீட்டுவது போன்ற பிரமை. கோபுர ஆரத்தி எடுத்த போது கிட்டத்தட்ட எல்லாருமே ஆவேசப்பட்டார்கள். என் பக்கத்தில் இருந்த அம்மாள் மட்டும், "அப்படி ஒரு குருத்தைக் கொண்டு போனதுக்கு என்னைக் கொண்டு போயிருக்கக் கூடாதா? மகாதேவா!" என்றாள் அடிஷனலாக. நான் தவியாக அழைத்து குருத்தின் பெயர் கேட்க "ப்ரசாத்" என்றாள். எனக்குத் திகிலானது.

சுப்ரமணிய ஸ்வாமி சந்நிதி மண்டபத்தில் உட்கார்ந்தோம். அந்த அம்மாள் பாதி பேசுவதும், பாதி புடைவைத் தலைப்பால் கண்ணைத் துடைத்துக் கொள்வதுமாக புலம்பித் தீர்த்தாள்.

"தனியான இயக்கம் சாராம, கோஷ்டி கூட்டி சுயநலம் சம்பாதிக்காம 'அதுக்காக வேலை வெட்டி எதுவுமில்லாம, இப்பத்த பசங்க ரோடு ரோடா தியேட்டர் தியேட்டரா திரியறானுங்களே அது போல் இல்லாம, சொந்தமா அப்பாவோட டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டை விரிவு பண்ணி... எத்தனை பேருக்கு எவ்வளவு விதமான உபகாரம். ரேஷன் கார்டுக்கு நானும் எங்க வீட்டுக்காரரும் நாய் படாதபாடுபட்டோம். இவனைக் கெஞ்சி, அவனைக் கெஞ்சி... இங்க வர, அங்க வான்னு இழுத்தடிச்சு நொந்து போயிருந்த சமயம்... யாரு என்னன்னு தெரியாமலேயே அவன்தான் சுளுவா வாங்கிக் குடுத்தான்!"

இந்த லிஸ்ட் நீண்டது. காய்கறிக்காரி, பூக்காரி, லாண்டரி கடைக்காரன், பஸ்ஸில், தியேட்டரில், ரயில்வே ஸ்டேஷனில் இங்கெல்லாம் முகம் தெரியாதவர்கள் ப்ரசாத்தைப் பற்றி பேசுவதைக் கேட்கும் சந்தர்ப்பம் எனக்கு பத்து நாட்களில் ஏற்பட்டது. நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய், பண்பிலே தெய்வமாய் என்ற ரீதியில் தான் வர்ணனை!

இரண்டு வாரம் கழித்து ஹாஸ்டலில் காலை வேளையில் அழைப்பு வந்தது. யாரோ என்னைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறார்கள். பெண்கள் ஹாஸ்டலில் இது ஒரு ரோதனை. வெளி மைதான ஆலமரத்

தின் கீழ் போடப்பட்ட மேடையில் வந்த ஆண் உறவினர்களைப் பார்த்துப் பேசி அனுப்பி விட வேண்டும். நான் புடைவையை மாற்றிக் கொண்டு போனால்... அப்பா.

''வாங்கோப்பா!'' சந்தோஷத்தில் கூவினேன்.

அப்பா முதலில் ஒரு பையைக் கொடுத்தார். அம்மாவின் வாத்சல்யம் உள்ளே திரட்டுப் பாலாக, மைசூர்ப் பாகாக இருக்கும்.

''எப்படிம்மா இருக்கே?'' என்றார் வாஞ்சையுடன்.

அப்பா இங்கே வந்தால் திருச்செங்கோட்டில் அவருடைய மாமா வீட்டில் தங்கி விட்டுத்தான் வருவார்.

''அம்மா எப்படி இருக்கா? தினேஷுக்கு மார்க் வந்துடுத்தா? விஜய் நன்னா படிக்கறானா?'' தினேஷும், விஜய்யும் என் உடன்பிறப்புக்கள்.

அப்பா பதில் சொன்னார்.

''வெயிட் பண்றயா? குளிச்சிட்டு வந்துடறேன். சந்திராவில் டிபன் சாப்பிடலாம்'' என்றேன்.

சரி என்றார்.

பாத்ரூம் வரிசை எனக்காக மாறி நின்றது. பாட்டுப் பாடாமல் ஐந்து நிமிடத்தில் குளித்து, மத்யான பொட்டலத்தை வாங்கி ஹாண்ட்பேகில் திணித்துக் கொண்டு வாசலுக்கு ஓடினேன்.

அப்பா மேடையில் உட்கார்ந்து பழைய பேப்பரை புரட்டிக் கொண்டிருந்தார். அதே அப்பா, நரை மட்டும் கூடிப் போயிருக்கிறது.

''வர்றதா லெட்டர் போடலியே?'' என்றேன்.

''அவசரம். அதான் வந்தேன்.''

''எதுக்கு?''

''உன் கல்யாண விஷயமா.''

''நான்தான் தினேஷ் காலேஜ் படிப்பு முடிக்கட்டும்னு சொல்றேனேப்பா.''

''இப்பவே உனக்கு வயசு இருபத்தி மூணு ஆறது ராஜி! நான் ரிடையர் ஆறதுக்குள்ளே உனக்குக் கல்யாணம் பண்ண வேண்டாமா? ஒரு மாசத்துக்கு முன்னாடியே திருச்செங்கோடு மாமா தெரிஞ்சவா கொடுத்தான்னு ஜாதகம் ஒண்ணு அனுப்பிக் கொடுத்திருந்தார். பையனும் சரி, பையனோட வீட்லயும் எல்லாரும் தங்கமான மனுஷாளாம்.''

''என்ன வேலையில் இருக்காராம்?''

''வேலை கிடையாது. ஆனா இந்த ஊரிலேயே பெரிசா டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட் வெச்சு நடத்தறானாம். டுடோரியல் சென்டர் ஒண்ணும் இருக்காம். மாச வரும்படியே ஐயாயிரம் வர்றதாம். பையன் குணம் பத்தரை மாத்துத் தங்கமாம்.''

''பையன் பேரு என்னப்பா?'' கேட்கும் பொழுதே எனக்கு நடுங்கியது.

''ப்ரசாத்'' என்றார் அப்பா.

அருள்வாக்கு



மதம் என்பது என்ன? ஆத்மாவுக்கு வந்திருக்கிற வியாதி தீருவதற்கு வைத்தியம் செய்வதுதான் மதம். ஒரு நோயாளிக்கு இன்ன வியாதி வந்திருக்கிறது, அது இன்ன மருந்தைத் தந்தால் சொஸ்தமாகும் என்பது வைத்தியனுக்குத்தான் தெரியும். தங்களுக்கென்று ஒரு பொருளையும் தேடிக் கொள்ளாமல் பரமத்தியாகத்துடன் லோக க்ஷேமத்தையே நினைத்த ரிஷிகள், தர்ம சாஸ்திரக்காரர்கள் அப்படித் தந்திருக்கிற மருந்துதான் நமது சநாதனதர்மம். மற்ற தேசங்களில் வேறு வைத்தியர்கள் வேறு மதங்களை மருந்தாகத் தந்திருக்கிறார்கள். நம் உடம்புக்கு மருந்து தருகிற டாக்டரிடம் அந்த டாக்டர் அப்படி ட்ரீட்மென்ட் செய்கிறார், நீங்கள் இப்படிச் செய்கிறீர்களே!' என்றால் அவர் கேட்டுக் கொண்டிருப்பாரா? வைத்திய சாஸ்திரத்தில் பல தினுசுகள் உண்டு. ஒன்றில் கடும்பத்தியம் இருக்கும்; ஒன்று லகுவாக இருக்கும். ஒன்றில் மருந்து கசக்கும்; இன்னொன்றில் தித்திக்கும். இதையெல்லாம் ஒன்றாக்க வேண்டும் என்று சொல்லாமல் அவரவரும் எந்த வைத்திய முறையை மேற்கொள்கிறார்களோ அதையே விடாமல் பின்பற்றினால், எந்த முறையிலும் சொஸ்தம் அடையலாம்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

சீதையின் நிலையைக் கொஞ்சம் சிந்தித்து நம் மனக்கண் முன் வரச் செய்து கொண்டு இந்தப் புண்ணிய கதையைப் படிக்கவும் வேண்டும். என்னைப் போன்றவன் எழுதி விளக்கும்படியான விஷயமல்ல. ஒரு சாதாரண அனாதைப் பெண் முரட்டுக் காமுகன் ஒருவனுடைய வசம் துரதிர்ஷ்டவசத்தால் சிக்கிப் போனாளானால் படும் துயரத்தைச் சொல்லி முடியாது. ராமசந்திரனைப் போன்ற ஒரு ராஜகுமாரனைப் புருஷனாய்ப் பெற்ற சீதையின் நிலைமையைச் சொல்லித் தீருமா? நம்முடைய உள்ளத்தைச் சுத்தமாக்கி ஆண்டவனைத் தியானித்துப் படித்தால்தான் முனிவர் எழுதியிருக்கும் உபமானங்களின் பொருள் விளங்கும். அவற்றை நான் இந்தப் பேசும் தமிழில் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை; பயனுமிராது.

ஆயினும் முனிவர் சொல்லியிருப்பதைக் கொஞ்சம் எடுத்து உரைக்கிறேன். வால்மீகி முனிவருடைய உவமை நடையை இங்கே காணலாம்.

யாதொரு ஆபரணமுமின்றி மண்ணும் தூசியுமே ஆபரணமாக அணிந்து விளங்கிய சீதையினிடம் ராவணன் வந்தான். அவளை உள்ளத்துச் சம்மதத்தோடு, அடையலாம் என்கிற ஆசையை ராவணன் விட்டு விடவில்லை. வெட்டி விழுந்து கிடக்கும் அழகிய மரம்போல் காணப்பட்டாள் சீதை. அவளுடைய முகப் பொலிவு, சேறு படிந்த தாமரை போல் விளங்கியும் விளங்காமலும் இருந்தது. ராவணன் வந்தான் என்பதை உணர்ந்ததும், அந்தக் கணம் சீதையின் உள்ளம் இருந்த இடம் விட்டு ராமனிடம் சென்று விட்டது. மிக வேகமாகச் செல்லும் குதிரைகள் பூட்டிய ரதம் போல் அவளுடைய சித்தம் ராமனிடம் அவளை இழுத்துச் சென்று விட்டது. மந்திரத்தால் கட்டப்பட்ட நாகப் பாம்பைப் போல் அலைந்தாள். நல்ல கீர்த்தி ஒரு பொய்யான அபவாதத்தில் சிக்கி அலைவதுபோல் இருந்தது அவள் நிலை. வேதம் நன்றாக ஓதியவன் மந்திரத்தை மறந்து விட்டாற் போலும், அழிந்து போன புகழைப் போலும், நிர்வாகம் செய்ய வேண்டிய பதவியிலிருப்பவனுடைய ஆணையை யாரும் மதிக்காமற் போன நிலையைப் போலவும், ஊர் நாலா பக்கமும் தீப்பிடித்து எரியும் நிலை போலவும், வீரர்களை இழந்த சேனையைப் போலவும், ஜலம் வற்றிய நதியைப் போலவும், அசுத்தப்படுத்தப் பட்ட ஓம குண்டத்தைப் போலவும், யானையால் அழிக்கப்பட்ட அழகிய தாமரைக் குளம் போலவும், பிடுங்கி எறியப்பட்ட புஷ்பக் கொடியைப் போலவும், காட்டில் கூட்டத்தைக் காத்த ஆண் யானையினின்று வேறுபடுத்திப் பிடித்துக் கட்டி விடப்பட்ட பெண் யானையைப் போலவும், உபவாசத்தாலும் துக்கத்தாலும் பயத்தாலும் வாடி வதங்கி நடுங்கிக் கொண்டிருந்தாள் ஜானகி. தன்னைக் காப்பவர்கள் பக்கத்தில் இல்லையே, இன்னும் வந்து சேரவில்லையே என்று மனத்தில் எண்ணி எண்ணி, வாடிய முகமும் மெலிந்து போன தேகமுமாக தெய்வத்தைத் தியானித்துக் கொண்டிருந்தாள்.

இந்த நிலையிலிருந்தவளை வந்து அணுகிப் பேச ஆரம்பித்தான் ராவணன். மரத்தின் மேலே மறைந்து உட்கார்ந்து ஹனுமான் பார்த்துக் கொண்டிருந்தான்.

67. ராவணன் பிரார்த்தனையும் சீதையின் பதிலும்

தருமம், புருஷனுடைய நினைவு இவை இரண்டையும் பற்றிக் கொண்டு துக்கப் பெருங் கடலில் மிதந்து கொண்டு உயிரை வைத்திருந்த சீதையைப் பார்த்து ராவணன் சொன்னான் :

''அழகியே! ஏன் கூச்சப்பட்டு

சக்கரவர்த்தித் திருமகன்


மணியம்

தேகத்தை மறைத்துக் கொள்கிறாய்! உன் மேல் எனக்கு உண்டாகியிருக்கும் அன்பை நீ அறியாயோ? உன் அன்பை நான் பிச்சை கேட்கிறேன். நீ பயப்பட வேண்டியதில்லை. என்னிடத்தில் உனக்கு உள்ளூரப் பிரியம் உண்டாகும் வரையில் உன்னை நான் தொட மாட்டேன். நீ பயப்பட வேண்டாம். என் விருப்பத்துக்குச் சமமாக உனக்கும் என்பேரில் விருப்பம் உண்டாக வேண்டும் என்பது என்னுடைய ஆசை. உண்மையான அன்போடு நீ என்னை ஒப்புக் கொள்ள வேண்டும். வீணாகத் துக்கத்துக்கு ஏன் உன் உடலை இரையாக்கி வருகிறாய்? அழகியே, உனக்குச் சமமான சௌந்தரிய ஸ்திரீ உலகத்தில் இல்லை. நீ இப்படி ஆபரணமின்றி நல்ல வஸ்திரமின்றித் தரையில் படுப்பதும் தலைமயிரை வாரிப் பின்னாமல் விட்டு உபவாசம் இருப்பதும் வேண்டாம். பெண் ரத்தினமே! இப்படி உன் அழகையும் வயதையும் வீணாக்காதே. என்னிடம் வந்து சேர்ந்து விட்டாய். இனி நீ கஷ்டப்படலாகாது. சகல போகங்களையும் அனுபவிக்கலாம். பூரண சந்திரனைப் போன்ற உன் முகத்தைப் பார்த்தால் என் கண்கள் வேறு திக்கில் செலுத்த முடியவில்லை. உன் உடலில் எங்க அங்கத்தைப் பார்த்தாலும் என் திருஷ்டி அங்கேயே பற்றி நிற்கிறது. இந்த அழகைப் பெற்ற நீ இப்படி துக்கப்படுவது தகாது. என்னைப் புருஷனாக அடைந்து சகல போகங்களையும் அடைந்து அனுபவித்து மகிழ்ச்சி அடைவாய். பயப்படாதே! யோசிக்காதே! நீயே பட்டமகிஷியாக இருப்பாய். என் அந்தப்புரம் முழுதும் உனக்கு அடங்கி நீ ஆள்வாய். என் செல்வம், ராஜ்யம் அனைத்தும் பெற்றுக் கொண்டு அனுபவிப்பாய். இந்த லங்கையும் நானும் உன் சொத்தாவோம். இந்த பூமண்டலம் முழுதும் உனதாகும். என் பலம், வீரம், தைரியம் இவற்றை தேவாசுரர்கள் அறிவார்கள். அவர்கள் என்னால் அடிபட்டுத் தோற்றுத் தலைவணங்கி நிற்கிறார்கள்.

''உன் அழகுக்குத் தகுந்த ஆபரணங்களும் வஸ்திரங்களும் கொண்டு உன்னை அந்தப்புர ஸ்திரீகள் அலங்கரிப்பார்கள். அலங்கரிக்கப்பட்ட உன்னைப் பார்த்து நான் மகிழ்வேன். உன் இஷ்டப்படி நீ தான தருமம் செய்யலாம். அனைவர் பேரிலும் அதிகாரம் செலுத்துவாய். என் பிரஜைகளும் பந்துக்களும் உன்னை அண்டி சந்தோஷமாக இருப்பார்கள். காட்டில் அலைந்து திரியும் ராமனை ஏன் நினைத்துக் கொண்டிருக்கிறாய்? ஊரை விட்டு, பதவியை விட்டு மரவுரி தரித்து அலையும் ஒருவனையா நீ விரும்புவது? நம்புவது? அவனால் என்ன செய்ய முடியும்? ராஜ்ய லக்ஷ்மியும் ஜய லக்ஷ்மியும் அவனை விட்டு விலகினது உனக்குத் தெரியுமே. அவன் இப்போது பிழைத்திருப்பதே சந்தேகம். உன்னை ராமன் இனி கண்ணால் பார்க்கவுங் கூட முடியாது. கிட்ட நெருங்க முடியாது.

'கருடன் சர்ப்பத்தைப் பிடிப்பது போல் நீ என் உள்ளத்தை அபகரித்து விட்டாய். நான் தப்ப முடியாது அலைகிறேன். ஆபரணமும் நல்ல வஸ்திரமுமின்றி நீ இப்போது இருக்கும் நிலையிலுங்கூட உன்னைப் பார்த்த பிறகு, சுந்தரியே! என் மனைவிகளுடன் கலந்திருக்கவே எனக்குப் பிடிக்க வில்லை. நான் என்ன செய்வேன்? அந்தப்புரத்தில் கணக்கில்லாத அழகிகள் இருக்கிறார்கள். உன்னைப் பார்த்த பின் அவர்கள் எனக்கு வேண்டியிருக்கவில்லை. அவர்களுக்கெல்லாம் நீயே அரசியாக இருந்து அவர்களுடைய சேவையைப் பெற்றுச் சுகமாக இருப்பாய். எந்தவிதத்தில் ராமன் எனக்குச் சமம் ஆவான்? தவத்திலும் பலத்திலும் புகழிலும் செல்வத்திலும் எல்லாவற்றிலும் நான் அவனுக்கு மேம்பட்டவன் என்பது உனக்குத் தெரியவில்லையா? பயத்தை அகற்றுவாய். உலகம் முழுதும் நாம் இருவரும் சுகமாகத் திரிவோம். சகல ஐசுவரியமும் என்னுடன் அனுபவிப்பாய். ஆனந்தமாய்க் காலம் கழிப்பாய். சுந்தரியே! மனம் இரங்கு! கடற்கரை வனங்களில் சந்தோஷமாக விளையாடுவோம். ஒப்புக் கொள்.''

இவ்வாறு ராவணன் தன் அடங்கா ஆசையை வெளியிட்டுச் சீதையை இறைஞ்சினான்.

ராவணன் பேசி நிறுத்தினதும் ஒரு துரும்பைக் கிள்ளித் தனக்கும் அவனுக்கும் இடையில் வைத்து, களங்கமற்ற நகை நகைத்து மெதுவாகப் பேச ஆரம்பித்தாள்.

''என்னைப் பற்றிய எண்ணத்தை உடனே விலக்குவாய். என்னை நீ விரும்புவது தகாத காரியம். உன் மனைவிகளை விரும்பி அவர்கள்பால் மனத்தைச் செலுத்து. நீ சொல்லுவதை என்னால் ஒரு நாளும் செய்ய முடியாது. நான் பிறந்த குலத்தையும் நான் புகுந்த


ஜப்பான் மொழி தட்டெழுத்து இயந்திரத்தில் மொத்தம் 2862 எழுத்துக்கள் உள்ளன! – தகவல் : வே. பார்த்தசாரதி.

குலத்தையும் தெரிந்து கொள்வாய். இத்தகைய யோசனை என்னிடம் செல்லுமா? தகாத எண்ணத்தை வைத்து வளர்த்துக் கொண்டு துயரப்படாதே.''

இப்படி அவனைப் பார்த்துச் சொல்லி விட்டு, வேறு திசை முகத்தைத் திருப்பி மேலும் பேசலானாள் :

''வேறொருவன் மனைவியாகிய நான் உனக்கு மனைவியாக முடியாது. தருமத்தைப் புறக்கணிக்காதே. அயோக்கிய மார்க்கத்தில் செல்லாதே. நல்லவர்கள் போகும் வழியில் செல்வாய். நான் சொல்வதைக் கேள். உன் மனைவிகளை நீ எவ்வாறு காத்து வருகிறாய், யோசித்துப் பார். அப்படியேயல்லவா மற்றவர் களும் தங்கள் மனைவிகளைக் காக்கப் பார்ப்பார்கள்? மற்றவர்களும் உன்னைப் போலவே என்பதை நினைவில் வை. பிறத்தியாருடைய ஸ்திரீகளை விரும்பாதே. உன் மனைவிகளுடன் சுகம் பெற்று திருப்தியடை. இது உனக்கு நன்மையாகும். உனக்கு உரிமையான ஸ்திரீகளுடன் திருப்தியடையாமல் மற்றவர்கள் பேரில் மனதைச் செலுத்தினாயானால் அவமானமும் துக்கமும் அடைவாய், நிச்சயம்.

''உனக்கு நல்ல புத்தி சொல்லுகிறவர்கள் யாரும் இல்லையா? ஏன் இவ்வாறு கெட்ட காரியங்களில் புகுந்து நீயும் கெட்டுப் போகிறாய், உன் ஜனங்களுக்கும் நாசம் தருவித்துக் கொடுக்கிறாய்? அரசன் தன் மனதைக் கட்டுப்படுத்தி நிறுத்திக் கொள்ளாமற் போனால் அவனுடைய நாடும் நகரமும் செல்வமும் எல்லாம் அழிந்து போகும். இந்த லங்கையும் அதனுடைய பெருஞ் செல்வமும் உன் ஒருவனுடைய குற்றத்தால் முற்றிலும் நாசமாகப் போகிறது, அறிவாய். உன்னுடைய பொறுப்பைத் தெரிந்து கொண்டு உன் துஷ்ட எண்ணத்தை விட்டு விட்டு, உன்னுடைய நாட்டையும் ஜனங்களையும் ராஜதானியையும் காப்பாற்றுவாய். இல்லையேல் நீ அழிவாய். உன்னால் வருத்தப்பட்டவர்கள் 'கொடியவன் போனானே' என்று சந்தோஷமடைவார்கள். எனக்கு நீ சொல்லும் ஐசுவரியங்களும் போகங்களும் ஒன்றும் வேண்டியதில்லை. அவற்றை வைத்து எனக்கு நீ ஆசை காட்ட வேண்டாம். பயனில்லை. ராகவனை மணந்த நான் அவனை விட்டு விலக மாட்டேன். அவன் கையைப் பிடித்த நான் வேறு ஒருவன் கையைத் தீண்ட மாட்டேன், முடியாது. சக்கரவர்த்தித் திருமகனுக்கு



''மண்ணெண்ணெய் தட்டுப்பாடாக இருக்கிற காலத்தில், என்ன செய்யலாம்? டீசலைப் பயன்படுத்தலாம். ஸ்டவ்வில் டீசலை ஊற்றும் பொழுது, அத்துடன் சிறிது உப்புக்கற்களைப் போட்டால், ஸ்டவ் எரியும் பொழுது, பாத்திரங்களில் கரி பிடிக்காது!''

- ஆர். சம்பத்குமாரன்.

நான் உரியவள். வேதம் படித்து விரதம் தீர்த்த பிரம்மசாரிக்கு வேதம் எப்படி உரிமையோ அவ்விதம் நான் ராமனுக்கு உரியவள். என்னை வேறொருவன் கண் எடுத்துப் பார்த்தல் தகாது.

''உனக்கு நான் நல்லுபதேசம் சொல்லுகிறேன், கேள். ராமனிடம் மன்னிப்புக் கேட்டு அவன் கோபத்தினின்று தப்பித்துக் கொள். வீணாக உன் நாசத்தைத் தேடிக் கொள்ளாதே. ராமன் நிச்சயமாக மன்னிப்பான். சரணமடைந்தவர்களைக் கைவிட மாட்டான். அவனுடைய மன்னிப்பைச் சம்பாதித்துக் கொள். அதற்கு வழி தேடு, உன்னுடைய நாசத்துக்கு வழி தேட வேண்டாம். அதோ ராமனுடைய வில்லின் ஓசை கேட்கிறது. அதனின்று தப்ப மாட்டாய். யமன் பக்கத்தில் நிற்கிறான், உன்னைத் தூக்கிப் போக வந்து விட்டான். தெரிந்து கொள். ராம லக்ஷ்மணர்களுடைய பெயர் எழுதிய பாணங்கள் சீக்கிரமே வந்து இந்த லங்கையை எரித்து அழிக்கப் போகின்றன. ஜனஸ்தானத்தில் இருந்த ராக்ஷசர்களை அடையாளத்துக்கு ஒருவன் இல்லாமல் என் வீர ராமன் ஒழித்து விட்டதைக் கண்டு பயந்து நீ திருடனைப் போல் வந்து ராம லக்ஷ்மணர்கள் ஆசிரமத்தில் இல்லாத காலம் பார்த்துப் புகுந்து என்னைக் கொண்டு வந்தாயல்லவா? நீ அவர்கள் எதிரில் ஒருகணம் நிற்க முடியுமா? புலியிருக்குமிடம் சிறு நாய் போக முடியுமா? அந்த வாசனையைக் கண்டே அஞ்சித் தூர விலகும். ஈரத் தரையிலிருந்து நீரைச் சூரியன் உறிஞ்சி விடுவது போல் உன் உயிரை ராமனும் லக்ஷ்மணனும் உறிஞ்சி விடப் போகிறார்கள். ஓடி மலையில் ஒளிந்து கொள்வாயா, அல்லது கடலில் மறைந்து கொண்டு தப்பித்துக் கொள்ளப் பார்ப்பாயா? அதுவும் முடியாது. அழிய வேண்டிய முகூர்த்தத்தில் மரம் இடி விழுந்து அழிவது போல் நீ அவர்களால் கொல்லப்படுவாய். தப்ப மாட்டாய்'' இவ்வாறு சீதை கடினமான மொழிகளோடு முடித்தாள்.

(தொடரும்)

மூடப்பட்ட வழிகள்

திருவாரூர் பாபு

வரதராஜன் சைக்கிளை வீட்டு வாசலில் நிறுத்திப் பூட்டி விட்டுப் படியேறும் போது, அனிச்சையாய்த் திரும்பி, எதிரே பூட்டிக் கிடந்த முன்னாள் ஹோட்டல் வாசலில் நின்ற அவனைப் பார்த்தார்.

அவரிடம் படித்த மாணவன் மாதிரி இருந்தான். இவர் பார்ப்பது உணர்ந்து, அவசரமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டு நகர்ந்ததற்கு என்ன காரணம் என்று புரியவில்லை அவருக்கு.

வாத்தியார் உத்யோகத்தில் இது ஒரு கஷ்டம். யாரைப் பார்த்தாலும் தன்னிடம் படித்தவன் மாதிரி இருக்கும். அதில் சில அனுகூலங்களும் உண்டு. மனவேதனையும் உண்டு.

எப்போதாவது கூட்டம் பிதுங்கும் பேருந்தில் பயணிக்கின்ற போது கொஞ்சம் உட்கார்ந்தால் தேவலாம் என்று கால்கள் கெஞ்ச... பார்வையைச் சுழற்றி, எங்காவது இடுக்கு காலியாக இருக்கிறதா என்று பார்க்கும் போது, ஒரு சீட் காலியாகும்.

''ஸார்... இப்படி வந்து உட்காருங்க...''

அவசரமாய்ச் சென்று அமர்ந்ததும், ''என்னை ஞாபகம் இருக்கா ஸார்... கோவிந்து... எட்டாவது ஒன்பதாவது ஒங்ககிட்டதான் ஸார் படிச்சேன்...''

அவன் முகத்தை உற்றுப் பார்த்து அடையாளம் பிடிபடாமல், ''அப்படியா...? சந்தோஷம்ப்பா... என்ன பண்ணிக்கிட்டு இருக்க இப்ப...?''

''செகரெட்டேரியட்ல இருக்கேன் ஸார்...''

''ரொம்ப சந்தோஷம்ப்பா...'' என்பார் மனம் குளிர.

ஓர் ஆசிரியருக்குத் தாம் வாங்கும் சம்பளத்தை விட, அதிக சந்தோஷம் அளிக்கும் விஷயம் இது. தம்மிடம் பயின்றவன், தவறு செய்த போது தம்மால் கண்டிக்கப்பட்டு நன்நிலைப் படுத்தப்பட்டவன் இப்போது பெரிய மனிதனாக, சமுதாயத்தில் மதிக்கப்படுகின்ற ஒருவனாக உலா வருவது, மனசுக்கு நிறைவளிக்கும் விஷயம்.

''ஸார்... நான் எம்.பி.பி.எஸ். முடிச்சிட்டேன். இந்த வருஷம்தான் ஸார் பாஸ் பண்ணினேன். எல்லாம் நீங்க கொடுத்த கோச்சிங் ஸார். சாயங்காலம் ஸ்கூல் விட்டோன்ன, ஸ்கூல்லயே வச்சி நீங்க இலவசமாப் பாடம் எடுக்காட்டி இந்தப் படிப்பு ஏது ஸார்...''

சென்ற வாரம் ஒருநாள் மாணிக்கவாசகம் எங்கிற அந்த முன்னாள் மாணவன் வீடு தேடி வந்து காலில் விழுந்த போது, கண்களில் நீர் கோத்தது.

போதித்தவனுக்குச் செய்கின்ற மரியாதை இது.

மதிக்காதவர்களும் உண்டு.

பக்கத்துத் தெரு. இவரிடம்தான் பத்தாவது வரை படித்தான். உத்யோகம் மனைவி, மக்கள் என்றாகி.. போன வாரம் மனைவியோடு பேருந்தில் உட்கார்ந்திருந்தவன் இவரைப் பார்த்ததும் அவசரமாய் முகத்தை திருப்பிக் கொண்டான். பேருந்தில் உட்கார நிறைய இடமிருந்தது. ஏன் முகத்தைத் திருப்பிக் கொண்டான் என்றுதான் தெரியவில்லை.

அதற்காக வரதராஜன் வருந்திய தில்லை. முளைக்கின்ற கரும்பெல்லாம் இனிக்கின்றதா என்ன...?

ஆனால் வரதராஜனுக்கு இவன் தமது மாணவன் என்ற நினைவு அடுக்குகள் மூளையை உசுப்ப, அவன் நிற்கின்ற இடம் கருதி அவன் மேல் சந்தேகமாக இருந்தது.

காரணம், அவர் வீட்டுக்கு எதிரே பூட்டிக் கிடந்த ஹோட்டலுக்குப் பின்னே உள்ள கருவேல செடிகளுக்கு மத்தியில் கள்ளச் சாராய விற்பனை நடக்கிறது என்பதை, அவர் மனைவி நேற்றுச் சொன்ன போதுதான் அவருக்கே தெரிந்தது.

''புதுசு புதுசா... யார் யாரோ சைக்கிளை ஹோட்டல் வாசல்ல நிறுத்திட்டுப்

பின்பக்கம் போறாங்க. முந்தா நாள் ராத்திரி ஏதேச்சையா வெளிய வந்தப்ப கருவ காட்டுக்குள்ள காண்டா விளக்கு எரிஞ்ச மாதிரி இருந்துச்சிங்க... நேத்திதான் நம்ம முனியம்மா சொன்னா... சாராயம் விக்கிறானுவளாம்...''

வரதராஜன் அதிர்ந்து போனார்.

அடுத்த நாளே அவருக்கு அவனைத் தெரிந்து போயிற்று.

ஸ்கூலுக்குப் புறப்பட்டு சைக்கிளைக் கீழே இறக்கின போது, பெடல் படியில் அடிபட்டு... ஏறி மிதித்த போதுதான் செயின் அவிழ்ந்து விட்டது புரிந்தது.

என்ன செய்யலாம் என்று யோசித்து நின்ற போது, எதிரே நின்று கொண்டிருந்த அவன் வேகமாய் ஓடி வந்தான்.

''என்ன ஸார்...?''

''செயின் அவுந்துட்டுது போல இருக்கு...'' என்றவர் அவனை உற்றுப் பார்த்தார்.

முகம் பிடிபட்டது. நம்மிடம் படித்தவன்தான்.

''சித்த இருங்க ஸார்...'' என்றவன் சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி, லாகவமாக செயின் கார்டை கழற்றிக் கீழே கிடந்த ஒரு சின்னக் குச்சியை எடுத்துச் சில விநாடிகளில் செயினை மாட்டினான்.

''மாட்டிட்டேன் ஸார்'' என்றவனை உற்றுப் பார்க்க, அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''ஒம் பேரு என்னப்பா...?''

''செல்வமணி ஸார்.''

''எங்கிட்ட படிச்சியில்ல...?''

தலையாட்டினான்.



''நானும் ஒன்வப் பத்து நாளா கவனிச்சிக்கிட்டுருக்கேன். இங்கேயே நின்னுக்கிட்டு இருக்க... ஏம்ப்பா...?''

அவன் தயங்கிச் சொன்னான்.

''சாராயம் விக்கிறேன் ஸார்...''


வரதராஜன் அதிர்ச்சியாய் அவனைப் பார்த்தார்.

''ஏம்ப்பா... ஏன் ஒனக்கு இந்த வேலை...?'' என்றார் ராத்திரி அவனை வீட்டுக்கு அழைத்து.

''வேற வழி தெரியலை ஸார்...''

''கௌரவமான பொழைப்பே கிடைக்கலியா?''

''கிடைக்கலை ஸார்... கிடைச்ச ஒன்னு ரெண்டு வேலையிலயும் வருமானம் பத்தலை ஸார். அப்பா இல்ல. ரெண்டு தம்பி, ஒரு தங்கச்சி, அம்மா. எல்லாருக்கும் ரெண்டு வேளை சோறாச்சும் போடணும் ஸார்...''



டி. வி. பார்த்து முடித்தவுடன் நீங்கள் உட்கார்ந்து இருக்கும் அறையின் ஜன்னல்களை உடனடியாகத் திறந்து விடுங்கள் என்கிறார் மேற்கு ஜெர்மனியின் விஞ்ஞானி பிரிட்ஸ் வாரன் ஹாலிட். இதன் மூலம் தொலைக்காட்சி ஒளிக்கதிர்களிலிருந்து வெளியாகும் அனலை ஓரளவு குறைத்து விடலாம் என்கிறார் அவர். இந்த அனல் உடலுக்கு நல்லதல்லவாம்.

– 'சிந்தனைக்கு விருந்தாகும் மணியான செய்திகள்' நூலிலிருந்து : ஆர். பார்த்திபன்

''இதுல மட்டும் நல்ல வருமானம் கிடைக்குதா...?''

''கிடைக்குது ஸார்...''

''ஆபத்தாச்சேப்பா... போலீஸ்கிட்ட மாட்டினா உள்ள தள்ளிடுவாங்களே...''

சிரித்தான்.

''அதெல்லாம் தள்ள மாட்டாங்க ஸார்.. சட்டம் - ஒழுங்கு போலீஸுக்கு மாசம் ஆயிரம் ரூவா.. மதுவிலக்குப் போலீஸுக்கு ரெண்டாயிரம் ரூவா மாமூல் கொடுத்துட்டுத்தான் ஸார் விக்கிறேன்...''

அதிர்ச்சியாய் அவனைப் பார்த்தார்.

''என்ன ஸார் அப்படி பார்க்கறீங்க...? இது தவிர அப்பப்ப போலீஸ்காரங்க வந்து போனா பத்து இருவது... சாராயம்... அதுவுமில்லாம மாசம் ரெண்டு தடவை கேஸ் வேணுங்கிறதுக்காக கோர்ட்ல அபராதமும் கட்டச் சொல்வாங்க ஸார்...''

''இத நீ விருப்பியா செய்யறியா...?''

''சத்தியமா இல்லை ஸார்... வேற வழி இல்லாமதான் செய்யறேன். பி.ஏ. முடிச்சிட்டு வேலை தேடினேன். கிடைக்கலை. ஏதாச்சும் தொழில் தொடங்கலாம்னு ஏறி இறங்காத பேங்க் இல்லே. ஒரு பேங்கிலயும் என்னை நம்பலை. ஜாமீன் கேட்டாங்க. யார் ஜாமீன் போடுவா? வேற வழி ஸார். குடும்பம் என்னை நம்பி...''

வரதராஜன் அவனைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பிறகு கேட்டார்.

''நான் ஒனக்குக் கடன் வாங்கித் தர்றேன். இந்தத் தொழிலை விட்டுட்டு கௌரவமா வேற தொழில் செய்யறியா?''

''நிச்சயமா ஸார்...'' என்றான் மகிழ்ச்சியாய்.

''என்ன தொழில் தெரியும் ஒனக்கு...?''

''சைக்கிள் ரிப்பேர் பண்ணத் தெரியும் ஸார்...''

''சரி.. நாளைக்கு வா பேங்க்குக்கு போவோம்...''

அடுத்த நாள் பேங்க்குக்கு அழைத்துச் சென்று, மானேஜரிடம் பேசினார். தயங்கிய மானேஜரிடம் தாம் ஜாமீன் போடுவதாகச் சொன்னதும் அவர் சம்மதித்தார்.

உடன் பத்தாயிரத்துக்கு லோன் சாங்ஷன் செய்யப்பட்டது. ஐந்து சைக்கிள் வாங்கி, அதே தெருவில் இடம்பிடித்து, 'சைக்கிள் ரிப்பேர் சரிசெய்யப்படும்' என்று எழுதப்பட்ட போர்டுக்குப் பொட்டு வைத்து, மாலை போட்டு, வரதராஜன் சூடம் கொளுத்தி பூஜை செய்த நான்காம் நாள்.

அந்த போலீஸ் வேன் சைக்கிள் கம்பெனி ஓரமாய் வந்து நின்றது. அதிலிருந்து தபதபவென இறங்கிய நான்கு போலீஸ்காரர்கள் சைக்கிள் கம்பெனிக்குள் நுழைந்தார்கள். பங்க்சர் ஒட்டிக் கொண்டிருந்த செல்வமணியை இழுத்துச் சென்று வேனில் ஏற்றியதைச் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த வரதராஜன் அதிர்ச்சியாய்ப் பார்த்தார்.

''ஸார்... என்ன காரணத்துக்காக அவனைப் புடிச்சி வச்சிருக்கீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா...?'' என்றார் போலீஸ் நிலையத்தில்.

''தெரிஞ்சி என்ன பண்ணப் போறே...?'' என்று நிமிர்ந்தவரை உற்றுப் பார்த்த வரதராஜன் மலர்ச்சியடைந்தார். அட! இவன் என் முன்னாள் மாணவன் ரகு அல்லவா...?

வரதராஜன் முகம் மலர்ந்து, ''நீ ரகு தான்... என்கிட்ட படிச்சியே...'' என்றார்.

அவர் முகம் பட்டென்று மாறியது.

''யார்யா ஒங்கிட்ட படிச்சா... பேச்சை மாத்தாதே... என்ன வேணும் ஒனக்கு...?'' என்றார் கடுமையாய்.

அவர் சற்று திகைத்துச் சொன்னார், ''என்ன காரணத்துக்காக செல்வமணியைப்

புடிச்சி வச்சிருக்கீங்கன்னு தெரிஞ்சுக்க லாமா...?''

''என்ன காரணத்துக்காகவா... சைக்கிள் கம்பெனி வச்சிக்கிட்டுச் சாராயம் வித்தா எங்களுக்குத் தெரியாதா... கண்டுபுடிக்க மாட்டமா..?''

''யார் சாராயம் வித்தா... சாராயம் வித்துக்கிட்டு இருந்தவன் கௌரவமா பொழைச்சிக்கிட்டு இருக்கான்... அபாண்டமா பேச வேணாம்...''

''அதிகப்படியா பேசாத. என்ன வேணும் ஒனக்கு...''

''அவனை வெளிய விடணும்...''

''முடியாது... அரெஸ்ட் பண்ணியிருக்கோம். ஜாமீன் வாங்கிட்டு வா...''

வரதராஜன் அவரை முறைத்துப் பார்த்து விட்டுப் பக்கத்தில் கிடந்த காலி நாற்காலியைப் பார்த்துக் கொண்டே ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தார். வக்கீலைப் பார்த்து, அடுத்த ஒரு மணி நேரத்தில் செல்வமணியை வெளியே கொண்டு வந்தார்.

நான்கு நாட்களாகச் சைக்கிள் கம்பெனி திறக்கப்படவில்லை. ஜாமீனில் வெளியே வந்தவன் நன்றி சொல்லி விட்டுப் போனதுதான். அதன்பின் அவனைப் பார்க்க முடியவில்லை. வங்கிக் கடன் நினைவுக்கு வந்து அவர் மனதை அரித்தது.

தவிப்பாய்க் காத்திருந்தவர், மாலையில் அவனைப் பார்த்து மலர்ந்தார்.

''ஏம்ப்பா... எங்க போயிட்ட? ஏன் கடை தொறக்கலை...?''

சிவந்த கண்களுடன் வீங்கிய கன்னத்துடன் நின்றிருந்தவனை அதிர்ச்சியாய்ப் பார்த்தார்.

''என்னப்பா...?''

அவன் தொண்டை கட்டிக் கொள்ள பேசினான்.

''சைக்கிள் கம்பெனியை என்னால நடத்த முடியாது ஸார்...''

''ஏம்ப்பா...?''

''அடிக்கிறாங்க ஸார்... மிரட்டறாங்க. சாராயம் விக்கலேன்னா என் குடும்பத்தை நிம்மதியா இருக்க விட மாட்டாங்களாம்... நேத்து என்னை வெளியே விட்ட பிறகு, வீட்டுக்கு வந்து, என் அம்மாவை மிரட்டியிருக்காங்க. காலையில கூட வீட்டுக்கு வந்து மிரட்டினாங்க ஸார்... என்னைக் கொலை கேஸ்ல மாட்ட வச்சிடுவாங்களாம்...''

''என்னப்பா இது... அநியாயமா இருக்கு...?''

''அவுங்கள பத்தி ஒங்களுக்குத் தெரியாது ஸார். நிம்மதியா இருக்க வுட மாட்டாங்க ஸார். தயவு செஞ்சி என் விஷயத்துல இனிமே நீங்க தலையிடாதீங்க ஸார். ஒங்களுக்குத் தொந்தரவு கொடுப்பாங்க.''

''பேங்க்ல கடன் வாங்கியிருக்கோமே...''

''அத நான் அடைச்சிர்றேன் ஸார்.''

வரதராஜன் அமைதியாய் நின்றார். நெஞ்சு கனத்தது. இது என்ன அநியாயம்?

''என் மாணவன் ஒருத்தன் சாராயம் விக்கிறதை என்னால் தாங்கிக்க முடியலைப்பா...''

''பொய் சொல்லக் கூடாது. திருடக் கூடாதுன்னுதான் ஸார் சொல்லிக் கொடுத்தீங்க. சாராயம் விக்கக் கூடாதுன்னு சொல்லிக் கொடுக்கலையே ஸார்..''

''என்ன பண்ணப் போறே...?''

''சாராயம்தான் விக்கப் போறேன். என்னை மன்னிச்சிடுங்க ஸார். அம்மா அழுவுது ஸார். தம்பிங்க போலீஸைப் பார்த்துப் பயப்படறாங்க. எனக்கு வேற வழி இல்ல ஸார்.''

சைக்கிள் கம்பெனி சாவியை அவரிடம் கொடுத்து விட்டுப் படி இறங்கியவன், மீண்டும் படி ஏறி வந்தான்.

''இனிமே நான் ஒங்க வீட்டுக்கு எதிரே சாராயம் விக்க மாட்டேன் ஸார். வேற எடத்துக்குப் போறேன். பத்து நாளா நான் அங்கே சாராயம் விக்காததால அந்த எடத்துல வேற ஒருத்தனை விக்கச் சொல்லிட்டாங்க. என்னை காந்தி நகர்ல விக்கச் சொல்லியிருக்காங்க...'' என்றவன் அவர் காலில் விழுந்தான்.

எழுந்து அவரைப் பார்த்து நீர் தேங்கிய கண்களுடன் வணங்கி விட்டு நகர...

வரதராஜன் கனத்துப் போன இதயத்தோடு வாசலுக்கு வந்தார். கடந்து சென்ற 'மொபைல்' வேனிலிருந்த ஒரு போலீஸ்காரர் சாலையில் சென்ற செல்வமணியைப் பார்த்து, சிநேகமாய்க் கை ஆட்டி விட்டுப் போனார்.



கும்பகோணத்திற்கு மேற்கே 10 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது ஸ்ரீ சாக்ஷிநாத சுவாமி கோவில். இந்தக் கோவிலின் விசேஷமான அம்சம் இங்கு அமைந்துள்ள விநாயகர் விக்கிரகம்தான். கடல் சிப்பிகளாலும், கடல் நுரையாலும் செய்யப்பட்டுள்ளது. விநாயக சதுர்த்தி அன்று இரவு பூராவும் தேன் மட்டுமே அபிஷேகம் செய்யப்படுகிறது. அப்போது பிள்ளையாரின் உருவம் சிவப்பு நிற முத்துக்களால் அபிஷேகம் செய்யப்படுவது போலத் தோற்றம் தந்து பக்தர்களைப் பரவசத்தில் ஆழ்த்துகிறது. அவ்வளவு தேன் அபிஷேகம் செய்யும் தேனைத் தேடி ஓர் எறும்புகூட வருவதில்லை.

– எஸ். ஆலன்



நாகர்கோயில் - கன்னியாகுமரி :

கலகலப்பான கல்கி வாசகர் வட்டம்!

* வாசகர் வட்டத்தில் ஒரு பகுதியினர்

நாகர்கோயில் - கன்னியாகுமரி கல்கி வாசகர் வட்டம் கூடிய நிகழ்ச்சியின் கதாநாயகராக விளங்கியவர் யார் தெரியுமா...? 90 பேரை மரணத்தின் வாயிலிலிருந்து மீட்டுத் தந்த நேசமணி போக்குவரத்துக் கழக ஓட்டுனர் ராஜகோபால்தான்! நாகர்கோயில் - கன்னியாகுமரி சிறப்பிதழில் அவரது வீரச் செயலைப் பற்றிய விவரங்களைப் படித்த ஷார்ஜா வாசகர் இரெ. சாமிநாதன், நெகிழ்ந்து போய் வாழ்த்துக் கடிதம் எழுதியதுடன் ஐந்நூறு ரூபாய்க்கு ஒரு டிராப்ஃட் எடுத்து, ராஜகோபால் பெயருக்கு அனுப்பியிருந்தார்.

வாசகர் வட்டத்துக்கு வந்திருந்த மிகச் சிறிய குழந்தையான விநோத், அந்த டிராஃப்டை ராஜகோபாலிடம் கொடுக்க, மற்ற வாசகர்கள் கை தட்டி மகிழ்ந்தார்கள். கல்கி சார்பில் ஒரு நினைவுப் பரிசும் ராஜகோபாலுக்கு வழங்கப்பட்டது. ராஜகோபாலின் மனைவியும் குழந்தைகள் விக்னேஷ் ராஜ், அனுஷ்யாவும் கூட்டத்துக்கு வந்திருந்தது எல்லோருக்கும் மேலும் உற்சாகத்தைத் தந்தது.

லயன் ஏ.பி.எஸ். ரவீந்திரன், ராஜகோபாலின் அனுபவத்தை அவரே சொல்லக் கேட்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். கட்டுப்பாடின்றி ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸின் பின் வழியே இறங்கி, முன் வழியே ஏறி, அதை நிறுத்தியதுடன், வலிப்பு வந்ததால் துடித்துக் கொண்டிருந்த டிரைவரையும் மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றதை ராஜகோபால் வர்ணிக்க, மீண்டும் கை தட்டல்! கூட்டத்தின் முடிவில் திருமதி ராஜகோபால் தமது கணவருக்கு மாலை அணிவித்ததைக் கண்ட வாசகர்கள் மூன்றாம் முறையாக அக்குடும்பத்தைப் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

தங்கள் ஊர் வட்டாரத்தில் இப்படி ஒரு வீரச் செயல் நடந்ததைக் கல்கி மூலமாகத்தான் அறிந்து கொண்டதாகச் சில வாசகர்கள் தெரிவித்தார்கள்.

கூடவே, நாகர்கோயில் நகரிலிருந்து ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்லும் சாலையை மாவட்ட எஸ்.பி. டோக்ரா (இப்போது பதவி உயர்வில் சென்னைக்கு மாற்றலாகி விட்டார்), கல்கி ஆசிரியர் குழுவுக்கு அளித்த பேட்டியின்படியே ஒரு வழிப் பாதையாக்கிப் போக்குவரத்து நெரிசலைக் குறைத்து விட்டதைச் சொல்லிப் பலரும் பாராட்டினர்.

ஏதோ சந்தித்தோம், பிரிந்தோம்



● ரூபைரூபாய் முறையைக் கைநாட்டல்

"உன்னால் முடியாது" என்றான் மற்றொருவன்.

"ஏன்?"

"நான் அதை விற்பதாக இல்லையே!"

- தா. சிந்து குமார்.

என்றில்லாமல் கூட்டத்தில் கலகலப்பை ஏற்படுத்த எளிய போட்டிகள் நடத்தினோம். ஜோக் எழுதும் போட்டியில் பரிசுக்குரியவரைத் தேர்ந்தெடுக்க வோட்டெடுப்பு முறையைக் கையாண்டோம். இந்தப் போட்டியில் வயது வித்தியாசமின்றி அனைத்து வாசகர்களும் கலந்து கொண்டு, எல்லோரையும் சிரிக்கச் செய்தனர்.

மகன் : அப்பா! ரயில் எப்போ கிளம்பும்?

தந்தை : 'சிக்னல்' போட்ட பிறகு.

மகன் : சிக்னல் மட்டும் போட்டால்தான் போகுமா? கோல்கேட், பினாகா, குளோஸ் அப் போட்டால் போகாதா?

- கே. முருகன்.

(வெள்ளப் பெருக்குப் பகுதியில்)

ஒருவர் : என்ன மழை பெய்து என்னத்துக்கு..... வெள்ளம் வந்தும் என் வீடு இடிஞ்சு விழ மாட்டேங்குதே.

மற்றவர் : ஏன்வே அப்படிச் சொல்லுதீர்? எவனாவது வீடு இடிஞ்சு விழணும்னு நினைப்பானா?

முதலாமவர் : அப்பத்தான் வீட்டைக் காலி பண்ணுவான் வாடகைக்கு இருக்கறவன்....

- நாஞ்சில் அமுதன்.

(இரண்டு அலட்டல் பேர்வழிகள் பேசிக் கொண்டிருந்தார்கள்.)

"உலக வங்கியை விலைக்கு வாங்கலாம் என்று இருக்கிறேன்" என்றான் ஒருவன்.

நாகர்கோயில் - கன்னியாகுமரி சிறப்பிதழில் வெளியான செய்திகளின் அடிப்படையில் ஓர் எளிமையான குவிஸ் நடத்தினோம். இதில் அதிகபட்சம் மதிப்பெண்கள்



● குழந்தை பிஸ்கோத் கொடுக்க தஞ்சை வாசகர் சாமிநாதன் அனுப்பிய அன்பளிப்பைப் பெறுகிறார் ராஜகோபால்

பெற்று பரிசைத் தட்டிக் கொண்டவர் ராஜகுமார். இந்த மாணவ - வாசகர் படித்த டி.வி.டி. பள்ளியில்தான் கல்கி வாசகர் வட்டம் கூடியது. அதே பள்ளியில் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரியும் நாஞ்சில் அமுதனுக்குத் தமது மாணவர் பரிசு வாங்கியது குறித்து ஒரு பக்கம் பெருமிதம்; மறுபக்கம் தமது கதைகளையும் கவிதைகளையும் வெளியிட்டு ஊக்குவித்த கல்கி இதழின் வாசகர் வட்டத்தில் கலந்து கொள்ள முடிந்தது குறித்து ஏக மகிழ்ச்சி. மிக உற்சாகமாகப் பேசிய அந்த எழுத்தாள வாசகர், அமரர் கல்கியின் பொன்னியின் செல்வனையும், பார்த்திபன் கனவையும் இளமையில் படித்த அனுபவங்களை விவரமாகச் சொன்னார். திருச்சிக்கு முதன் முதலாகச் சென்ற போது காவிரி நதியின் அகண்ட அழகைக் கண்டு பிரமித்ததையும் அந்தச் சமயத்தில் அவர் நெஞ்சில் அமரர் கல்கியின்

வர்ணனை வரிகள் வந்து மோதியதையும் அவர் கூறியதே ஒரு சுவையான கதையைக் கேட்பது போல் அமைந்திருந்தது. 'பட்டாளத்துக்குப் புட்டு அவித்தவர் கல்கி' என்ற விமர்சகர் ஒருவரின் வாக்கியத்தை மேற்கோள் காட்டி, அமரர் கல்கியின் ஜனரஞ்சகப் பாணியை உணர்த்தினார். தேர்ந்த கவிஞர் எனினும் நாம் நடத்திய பொங்கல் கவிதைப் போட்டியில் பங்கேற்காமல், புதியவர்களுக்கு வழிவிட்டு நின்ற இவரது பண்பு எல்லோருக்கும் நிறைவைத் தந்தது.



✱ நாஞ்சில் அமுதன்



✱ பிரஜா

ஏ.பி.எஸ். ரவீந்திரன் பேசியபோது, "மூன்று ரூபாய் கொடுத்து வாங்கும் கல்கியை மீண்டும் அதே விலைக்கு விற்கும் அளவுக்கு அதில் விஷய மதிப்பு இருக்கிறது. இருந்தாலும் காலத்தின் போக்கை ஒட்டி சினிமா செய்திகளைக் கூடுதலாகத் தர வேண்டும்" - என்று கருத்துத் தெரிவித்தார். ராஜகுமார், சினிமா செய்திகள் அதிகரிக்க வேண்டாம் என்று கூற, நவீனார் என்ற வாசகர் வித்தியாசமான சினிமா செய்திகளைப் புகுத்த வேண்டும் என்று சொல்ல... ஒரு சிறிய, சூடான விவாதம் நடந்தது.

"நிருபர்கள், நகரச் சிறப்பிதழுக்கென செய்தி சேகரிக்க வரும்போது முன் கூட்டியே தபால் மூலம் தெரிவித்தால் நன்றாக இருக்கும்" என்று சொன்னார் ராதா கிருஷ்ணன். இவர் நிறைகுறைகளைக் கூர்மையாக ஆராய்ந்து விமர்சித்த போது கல்கியை வாசகர்கள் எவ்வளவு கவனமாகப் படிக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

இந்தக் கூட்டத்தை 'கணேச சரணம்' என்று கல்கியின் காவல் தெய்வத்தைப் போற்றிப் பாடி, துவக்கி வைத்தார் வாசக அன்பர் தர்மராஜன்.

நாம் கல்கி வாசகர்களுக்கென அமைத்த போட்டிகளுள் பொங்கல் கவிதைப் போட்டியும் ஒன்று. அதில் பிரஜா எழுதிய கவிதையை மாணவ வாசகர் ராஜகுமாரன் படித்த போது கைதட்டல் அரங்கை நிறைத்தது! பிரஜாவின் கவிதையையே பரிசுக்குரியதாக வாசகர்கள் தேர்ந்தெடுத்தனர். வாசகர் வட்டத்தின் ஏகமனதான பாராட்டைப் பெற்ற அந்தக் கவிதை இதோ :

என் பாட்டி,
அம்மாவிடம் சொன்னாள்
இது அரிசிப் பானை
இது உளுந்துப் பானை.
அம்மா
என்னிடம் சொன்னாள்
இது அரிசி இருந்த பானை
இது உளுந்து இருந்த பானை.
நான் என் மகளிடம் -
இது அரிசிப்பானை இருந்த இடம்
இது உளுந்துப்பானை இருந்த இடம்

பொங்கலோ.... பொங்கல்
பொங்கலோ... பொங்கல்.

கூட்டம் முடிந்த பிறகு பிரஜாவின் குடும்பத்தினரைச் சந்திக்க நேர்ந்தது. அவர்கள் "பிரஜாவிடம் இந்தத் திறமை இருப்பது எங்களுக்கே தெரியாது...." என்று சொன்ன போது இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருந்தது. புதுத் திறமைகள் வெளிப்பட கல்கி வாசகர் வட்டம் உதவியிருக்கிறதல்லவா!

– சீதா ரவி

படங்கள் : கோபிநாத்

(போட்டிகளில் பரிசு பெற்றவர்களைப் பார்க்க வேண்டுமா? 58 – ம் பக்கம் வாருங்கள்...)




அந்தமான் தீவுகளில் வாழும் பழங்குடியினர், முதல் மனைவியை இழந்து விட்டால் இரண்டாம் திருமணத்தைக் கடு காட்டில் நடத்துகின்றனர். காரணம், முதல் மனைவியின் ஆவி இத் திருமணத்தின் போது தம்பதியருக்குக் கிடைப்பதாக நம்புவதே!

– 'சிந்தனைவிருந்து 1000' நூலிலிருந்து

– பா. அர்ச்சுதன்.

நாலு தலச் சிறப்புடன் ஒரு நீர்வண்ணன்!

ஓம் என்று சொல்லுவோம்!



✱ உற்சவர் : நீர்வண்ணப் பெருமாள்

வரம் என்பது இறைவனைக் கேட்டுப் பெறுவதாகும். ஆனால் கேட்காமலே கொடுக்கும் தெய்வம் ஒன்றிருக்கிறது - திருநீர்மலையில்!

'நின்றும், இருந்தும், கிடந்தும் நடந்தும்' சேவை சாதிக்கும் இந்தப் பெருமானை -

"பேசும் அளவன்றிது
வம்மின் நமர்
பிறர் கேட்பதன் முன்,
பணிவார்வினைகள்
நாசமது செய்திடும்"

- என்று பாடியிருக்கிறார் திருமங்கையாழ்வார். அதாவது இந்த திவ்யதேசத்தின் மகிமையை வார்த்தைகளில் பேசி விளங்க வைக்க முடியாது. தம்மைப் பணிவார்களின் வினைகளைக் கேட்காமலேயே தீர்க்கும் தெய்வம் இந்தப் பெருமான் என்று பாடியிருக்கிறார் அவர்.

வினைகள் தீர்ந்து விட்டால் பிறகென்ன கபீட்சம்தானே!

குன்றின் மேலேறி, சுற்றிலும் தெரியும் நீர் நிரம்பிய ஏரிகளையும், வயல்களையும் உயரத்திலிருந்து காணும் போது, இந்தப் பெருமானை நீர்வண்ணன் என்று திருமங்கை மன்னன் அழைத்த காரணம் புரிகிறது. சென்னையின் புறநகர்ப் பகுதியான பல்லாவரத்திலிருந்து சுமார் மூன்று கி.மீ. தூரத் திலுள்ள இந்தத் தலத் துக்கு திருமங்கையாழ்வார் வந்த போது, மலையைச் சுற்றி அகழி போலத் தண்ணீர் வெள்ளமாக இருந்ததாம். ஆறுமாத காலம் காத்திருந்து வெள்ளம் வடிந்ததும் விரைந்து மலை ஏறி, கிடந்தானையும், இருந்தானையும், நடந்தானையும் தரிசித்துப் பரவசமாகப் பாடியிருக்கிறார். 'நின்றான்' என்று தொடங்கியிருப்பதால் முதலில் மலையடிவாரத்தில் நின்ற கோலமாகத் தரிசனம் தரும் நீர் வண்ணப் பெருமானைத்தான் தரிசித்திருக்க வேண்டும் என்று கருதலாம். இந்தப் பாசுரத்தில், ஆழ்வார், தாம் பெருமானை நின்ற கோலத்தில் தரிசித்த திருநறையூரையும் இருந்த கோலத்தில் காட்சி தந்த திருவாலியையும் சயன கோலத்தில் கண்ட திருக்குடந்தையையும் உலகளந்த பெருமானாகக் காலைத் தூக்கி நடந்தவனாகப் பிரமிக்கச் செய்த திருக்கோவலூரையும் சொல்லுகிற பாங்கிலே, இந்த நான்கு மூர்த்திகளின், நான்கு தலங்களின் சிறப்பையும் கொண்ட மலை இந்த நீர்மலை என்று சொல்லாமல் சொல்லி விளங்க வைக்கின்றார்.

இன்றைக்கு இந்தத் திருத்தலத்துக்கு வரும் பக்தர்களுக்கு உள்ள ஒரே இடையூறு, வழியில் உள்ள தோல் பதனிடும் தொழி

✱ திருநீர்மலையின் தோற்றம்





லங்களும் அதன் கழிவு நீர் எழுப்பும் துர் நாற்றமும்தான். சாலையும் வெகு மோச மாக உள்ளது. இவற்றைச் சீர் செய்து பக்தர் களுக்கு உதவுகிற உள்ளத்தை நமது அரசு பெற அந்தப் பரந்தாமன்தான் உதவ வேண் டும். 'ஒருவேளை சோதனைகளுக்குப் பிறகு கிடைக்கும் ஆண்டவன் தரிசனம்தான் மக்க ளுக்கு நல்லது என்று அரசு கருணை கொண்டுதான் கண்டு கொள்ளாமல் இருக் கிறதோ என்னவோ' என்று எண்ணியவாறே துவஜஸ்தம்பத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டு கோயிலுக்குள் செல்கி றோம். திருக்கோவில் திருப்பணிக்காகக் கரு வறைகள் பழுது பார்க்கப் படுவதால் வண்ண ஓவியங்களில் தெய்வசக்தியை ஆவாஹனம் செய்து பூஜைகள் செய்கிறார் கள். உற்சவமூர்த்திகளைக் கண்டு மகிழும் பாக்கியமே போதும் என்று திருப்தியடை கிறோம்.



✱ மேலிருந்து ஓர் அழகிய தோற்றம்

அலங்கார ப்ரியரான மகாவிஷ்ணுவும், தாயாரும் அகல ஜரிகை போட்ட ஆடை களுடன் ராஜ தரிசனம். இவர் ஸ்ரீரங்கநாத ராகவே வழிபடப்படுகிறார். ஸ்ரீரங்கநாத ஸ்வாமி தேவஸ்தானம் என்றே வழங்கு கிறார்கள். ரங்கநாயகித் தாயாரின் 'அலர் மீது மங்கை' வடிவம் பார்க்கப் பார்க்கப் பர வசப்படுத்துகிறது. சயனக் கோலத்தைத் தரிசிக்க முடியாவிட்டாலும் வெளிப் பிரா காரத்தில் உள்ள ஓவியங்களில் பல வித மான சயனத் திருக்கோலங்களைக் கண்டு மகிழலாம். ஆதிசேடன் மீது சயனித்திருக்கும் பெருமாளை யும், தலசயனப் பெருமாளையும், ஸ்ரீதேவியும் பூதேவியும் திருபாதத் தாமரை களின் அருகே அமர்ந்திருக்கும் கோலத்தில் போக சயனரையும் ஓவியங்களாகத் தரிசிக்கி றோம்.

இருந்தவர் சாந்த நரசிம்மர். இரண்டு கரங்களும் மேல் பார்த்த அபயஹஸ்தங் களாகவே தெரிகின்றன. 'நரசிம்மராயிற்றே என்று என்னைக் கண்டு பயப்படாதே. அருகில் வந்து சேவித்துக் கொள்' என் கிறாரோ! உலகளந்த பெருமாளின் நடந்த

கமலமனராஜன்

கோலம். அவர் சாதாரணமாகவா நடந்தார்? அடேயப்பா அவர் ஒரு அடி எடுத்து வைத்ததும் பிரும்ம லோகத்துக்கே அவர் திருவடி எட்டி விட்டதே. இந்த மூர்த்திகளுடைய உற்சவ விக்ரகங்களுக்கு அர்ச்சனை செய்து தீபாராதனை நடக்கிறது.

அர்ச்சகர், மிக அழகாகப் பெருமாளின் பெருமைகளை எடுத்துச் சொல்லிக் கொண்டே வெகு நேரம் தீபாராதனை செய்கிறார். "தோயம் என்றால் நீர். அதனால் இந்த மலைக்கு தோயாத்ரி என்றும் தோதாத்ரி என்றும் பெயர். ஸ்ரீரங்கநாதன் உற்சவர்! தாயார்! இருந்த கோலத்தில் சாந்த நரசிம்மர். உற்சவர்! திரிவிக்ரமர். இவர்தான் நடந்தவர்." என்று சொல்லி பாசுரத்தையும் கணீரென்று சொல்கிறார். வால்மீகி முனிவர் ஸேவித்த ஸ்தலம் என்றும் தொண்டைமான் சக்கரவர்த்திக்கும், ப்ருகு முனிவர் மார்க்கண்டேயருக்கும் தரிசனம் தந்தவர் என்றும் விளக்குகிறார் அர்ச்சகர்.

அகம் நிறைய, மனம் குளிர நெடுநேரம் ஸேவித்துவிட்டுத் திரும்பும் போது, நடுவில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலை வலம் வந்து எட்டிப் பார்க்கிறோம். திரை போட்டிருக்கிறது. துணியாலான திரை என்ன செய்யும்? அகத்தில் போடப்பட்டிருக்கும் மாயை என்னும் திரையை நீக்கி உய்யச் செய்யும்படி அஞ்சனா நந்தனைப் பிரார்த்தித்துக் கொண்டு, இறங்கி வந்து நீர்வண்ணப் பெருமாளைத் தரிசிக்க விரைகிறோம்.

நின்றவனை, நீர்வண்ணப் பெருமாளை, அணிமாமலர் மங்கை மணாளனை, சூடிக் கொடுத்த சுடர்க்கொடி படர்ந்த பசுங் கொம்பை, சூழ் கடலெல்லாம் ஆனவனை, அழகனை, பிறவிக்குப் பயன் தருவானை நாமும் தரிசிக்கின்றோம்.

உற்சவ மூர்த்திகளாக ஸ்ரீராமபிரானும் சீதா பிராட்டியாரும். இளையவருடன் ஸேவை சாதிக்கிறார்கள். கோதை நாச்சியாரோ நீர் வண்ணச் சேலையை வைஷ்ணவ மடிசாராகவே உடுத்திக் கொண்டு உச்சியில் மகுடம் போல் முடித்த கொண்டையோடு கம்பீரமாகக் காட்சி தருகிறாள்.

ஸேவித்த பிறகு திருத்துழாய் மணக்கும் நீரை வாங்கிக் கொள்கிறோம். சடாரியை நம் முடியில் வைத்துப் பெருமாளின் திருவடிகளைச் சூட்டும் போது, நெஞ்சு விம்மித மடைந்து நம் கண்ணில் நம்மையறியாமல் ஆனந்தக் கண்ணீர் பெருகுகிறது.

படங்கள் : கோபிநாத்.

ஒருவனை, இரண்டு பேர் காதலித்தால், யாராவது ஒருத்தர் இன்டர்வெல் நேரத்தில் மண்டையைப் போட்டே தீர வேண்டுமென்பது சிந்துவெளி காலத்து சினிமா பழக்கம். இதில் அதற்காக மாய்ந்து மாய்ந்து போட்டியிடுபவர்கள் நதியாவும் மீனாவும். ஏறக்குறைய, 'டாஸ்' போட்டு முடிவு செய்கிற அளவுக்கு வந்துவிடுகிறார்கள்.

உதயகுமார் படமாம். டைட்டில் போடும் ஸீனில் ஆரம்பித்து ஏன் இத்தனை செயற்கைத்தனம்! பிரபுவின் அரிச்சந்திர கேரக்டரை மக்கள் மனத்தில் பதியன் போடுவதன் பொருட்டே வழக்கமான ஓரிரு மரத்தடி பஞ்சாயத்து ஸீன்கள். அரிச்சந்திரனாக இருந்தால் மட்டும் போதுமா? வள்ளல் தன்மையும் வேண்டாமா? பிரசவத்திற்கு சாரட் வண்டி கொடுக்கிறார் பிரபு. ஏழை + ஊமைக் குழந்தைக்கு பாக்கெட்டிலிருந்து பணம் கொடுத்துப் பட்டணத்துக்கு அனுப்புகிறார், மருத்துவத்திற்கு.


ஊருக்கு மட்டும் உபகாரமாயிருந்தால் போதுமா? ஒன்றுக்கு இரண்டு கதாநாயகிகள். பாட்டுப் பாடி மகிழ்விக்க வேண்டிய மகத்தான கடமை! இஞ்ச்கக்கு இரண்டு பாட்டு! (இரண்டு பாடல்களில் இமயம் தொட்டிருக்கிறார் இளையராஜா.)

ஜமீன் காலத்துக் கதை என்பதாகக் கட்டிக்காட்ட, பொள்ளாச்சி பக்க மாளிகைகளையும், வயல், வரப்பு வெளிகளையும் வெண் குதிரைகளையும், மஞ்சு விரட்டு போன்ற வீர விளையாட்டுக்களையும் ஆங்காங்கே செருகியிருக்கிறார்கள். (இடையிடையே காஸ்டெலா கிளாஸிக்!) அவ்வப்போது புறாவிடு தூது வேறு.

பிரபுவுக்கு இது நூறாவது டெஸ்ட் மாட்ச். ஆனால் அந்தப் பொறுப்போடு யாரும் செயல்பட்டிருப்பதாகத் தெரியவில்லையே!

- ஆர். பி. ஆர்.

ராஜகுமாரன்



அழமணி

ஒரு பஸ் பயணத்தில்...

தூத்துக்குடி பேருந்து நிலையத்தில் வைத்து பஸ் ஏறியபோதெல்லாம் செங்கல்வராயன் கிழவர் சுதாரிப்பாகத்தான் இருந்தார். பஸ்ஸுக்குள் அமர்ந்ததும்தான் ஆளைக் கிறக்க ஆரம்பித்தது காற்று. தீப் பிடித்து எரிந்த அக்னி வெயிலில், ஓடும் பேருந்தின் எதிர்ப்பக்கமிருந்து சீறிய வெக்கைக் காற்றில் தன்னிலை மறந்து போனார். வாழ்ந்து அனுபவித்த அலுப்பை உடம்பில் தாங்கிய சோர்வு. ஆவி பறக்க மகள் ராஜேஸ்தங்கம் எவர்சில்வர் தட்டில் அள்ளி வைத்த சோற்றுக்குச் கடச்கட கறிக் குழம்பு போட்டிருந்தாள். போதும் போதும் என்று மறுத்தாலும் மகளும் பேரப் பிள்ளைகளும் சாப்பிடு சாப்பிடு என்று கட்டாயப்படுத்தி ஊட்டி விட்டிருந்த சோற்றுக் கவளத்திலும் சற்று கிறங்கிப் போய்த்தான் இருந்தார். ஒரு வாரமாய் வந்து மகளிடம் தங்கி விட்டு, இப்போது மகளிடம் போய்க் கொண்டிருந்தார்.

பிதுங்கி வழிந்தது கூட்டம் பஸ்ஸுக்குள். இன்று கல்யாண நாளோ என்னவோ என்று மனசுக்குள் அங்கலாய்த்துக் கொண்டார் கிழவர். நல்லவேளை, உட்கார இடம் கிடைத்திருந்தது. பஸ்ஸின் பின் சீட்டின் கடைசியில் - ஏறும் வழியின் அருகாமையில் - உட்கார்ந்திருந்தார். கசங்கிய முழுக் கைச் சட்டையும் கந்தலான வேட்டியும் உடுத்திருந்தார். மகள் வீட்டில் உள்ளங்கை நிறைய தேங்காய் எண்ணெய் வாங்கித் தேய்த்திருந்ததில் அவரின் நெற்றிப் பரப்பிலும் செவி விளிம்புகளிலும் பிசுபிசுத்து வடிந்து கொண்டிருந்தது.

இடது கையை, ஏறும் வழியில் விட்டிருந்த கம்பி வரை நீட்டி இறுகப் பிடித்திருந்தார். அதிக நேரம் விழித்துக் கொள்ளாதபடி இமைகள் சுருங்கின. அடித்துப் போட்ட அசதி மாதிரி தேகம் வாட்டியது. உறுதியாய் உட்கார முடியாமல் தூக்கக் கலக்கத்தில் முன்னே முன்னே தலை கவிழ்ந்து... நல்லவேளை கம்பியை இறுகப் பற்றியிருந்தார். படிக்கட்டில் ஜனங்கள் நின்றிருந்தது ஒருவகையில் அவருக்குத் தெம்பாகவும் இருந்தது. தூக்கக் கலக்கத்தில் கிறங்கி விழுந்தாலும் கீழே விழாதபடி பிடித்துக் கொள்வார்கள் என்ற தெம்பு!

வாகைக் குளத்தில் பஸ் 'பிரேக்' போட்டு நின்ற உதறலில் சட்டென்று விழித்துக் கொண்டு பார்த்தார் கிழவர். சரம் சரமாய் ஜனங்கள் இறங்கி விட்டிருந்தார்கள். ஆயினும் பஸ்ஸின் நடுவில் சிதறலாய் ஒன்றிரண்டுகள் நின்று கொண்டிருந்ததும் தெரிந்தது. வாகைக்குளம் நிறுத்தத்தில் நின்று ஏறியவர்களில் ஒரு போலீஸ்காரரும் ஏறியது, பிறகுதான் தெரிந்தது கிழவருக்கு. ஏறும் வழிக்கு மேலே - கிழவருக்கு அருகே நின்று கொண்டு, கழுகுக் கண்களால் ஜனங்களை மேய்ந்து கொண்டிருந்தார் அவர். நல்ல தாட்டியமான தேகம் அவருக்கு. தொப்பையைத் தூக்கிக் கொண்டு சமாளிக்க முடியாமல் திணறுவதாகப் பட்டது கிழவருக்கு. சுடலைமாடன் சாமியைப் போல அகன்று விரிந்த மீசையும், கன்னென்று வெயிலடித்தது போல சில இடங்களில் பளிச்சென்று நரைத்திருந்த தலையும் அவரின் நடுத்தரத்துக்கு மீறிய வயதைக் காட்டின.

வாகைக்குளத்தைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தது வாகனம். அவ்வப்போது தூக்கத்தில் தொலைந்து... திடீர் திடீர் என்று பதறிக் கொண்டு விழித்து... அவ்வப்போது சுதாரித்து, போகிற இடத்தைக் கணித்துக் கொண்டார் கிழவர். இப்படி தூங்கித் தூங்கி விழுவது நல்லதில்லை என்று உறுத்தியது அவருக்குள். ஏடாகூடமாக எதுவும் ஆகிப் போனால் இந்த அத்துவானக் காட்டில் அவரின் உடலைக் கொண்டு போய் உரியவரிடம் ஒப்படைப்பது எவ்வளவு சிரமமென்று தோன்றியது. வலுக்கட்டாயமாகக் கண்களை வெறித்து நிறுத்தினார். மூளை கிறங்கும் போது, கண்களை எப்படி நிலை நிறுத்தி விட முடியும்?



''என்னவே... வீட்டுல சொல்லிட்டு வந்திட்டியா? ஒக்காந்துக்கிட்டே தூங்கிறியே. கீழே விழுந்து ஒரேயடியாப் போயிட்டன்னா எவன் பதில் சொல்லுவான்?''

குரல் கேட்டு தீர்க்கமாய் வெறித்துப் பார்த்தார் கிழவர். தாட்டியமான போலீஸ்காரர் அவரை நெருங்கி நின்றிருந்தது தெரிந்தது. கண்களில் கனைகனைப்பும் உதடுகளில் பரிகாசமுமாகத் தெரிந்தார் அவர்.

கலவரமடைந்து போனார் கிழவர். அவமானப்பட்டுப் போனதாக உணர்வு குன்றியது. பக்கவாட்டில் திரும்பிப் பார்க்கக் கூட அவரை வெட்கம் பிடுங்கித் தின்றது. எல்லா முகங்களும் அவரையே வேடிக்கை பார்ப்பது போலத் தோன்றியது. இருக்கைகளில் அமர்ந்திருந்த எத்தனையோ மனிதர்கள் தூங்கித் தூங்கி வழிந்து கொண்டிருந்தாலும் அவரை மட்டுமே எல்லோரும் வேடிக்கைப் பொருளாய் நினைத்துப் பரிகசிப்பதில் விகற்பம் புரிந்தது.

''டிக்கட்... டிக்கட்... டிக்கட்''

நடத்துனரும் இப்போது அருகில் வந்திருந்தார். போலீஸ்காரரைக் கண்டதும் பாசாங்காய் ஒரு புன்னகையை விசிறிக் கொண்டார்.

''என்ன சார்... என்ன விசயம்?''

''வயசான காலத்துல இந்தக் கிழவருக்கு உங்க வாகனத்துல வந்து மண்டையப் போடணும்னு ஆசையோ என்னவோ... ஓரத்துல உக்காந்து ஒறங்கி ஒறங்கி விழுதாரு...'' நடத்துனரிடமிருந்த பார்வையைத் திருப்பி, கிழவர் மேல் பாய்ச்சினார் போலீஸ்காரர். ''இந்த வண்டியைக் கவருமெண்டு விட்ட கட்டபொம்மன்னு நெனச்சியா, இல்ல எமன் அனுப்பின எருமைக் கடான்னு நெனச்சியா?''

சிமெண்டுத் தளத்தில் சரளைக் கற்களை உருட்டி விட்டது போல எல்லோரும் கடகடவெனச் சிரித்தனர். இதயத்தில் ஈட்டியைப் பாய்ச்சியது போல மனசுக்குள் வலித்தது அவருக்கு. மேலும் குன்றிப் போனார்.

மிகவும் நெருங்கி விட்டிருந்தார் போலீஸ்காரர்.

''எந்திரிவே... நீ உக்காந்து கிழிச்சது போதும்... உருப்படியாய் நீ ஊரு போயிச் சேரு... எந்திரி.''

கிழவர் தயங்கினார். வார்த்தைகளில் யாசகம் இழைந்தது.

''இல்லீங்க அய்யா.. இனி தூங்க மாட்டேன்.. முழிச்சிக்கிட்டே இருக்கபிங்க... வுழுந்திர மாட்டன்.''

''போதும் போதும்... எந்திரிச்சி நில்லுவே... அப்பத்தான் உனக்கு உறக்கம் வராது. உன் உசுருக்கும் ஆபத்து வராது.. சீக்கிரம் எந்திரிவே.''

தூக்கி நிறுத்தாத குறையாகப் போலீஸ்காரர் அவர் அருகில் வந்து விரட்டினார். எல்லோரும் போலீஸ்காரரின் கோரிக்கைக்கே ஆதரவு தருவதாகப்பட்டது. வேறு வழியில்லை. திக்குமுக்காடி, குழைவாய் எழுந்து நின்றார் கிழவர். தளர்வாய்க் கை எழும்பி, மேலே கைப்பிடியைப் பிடித்துக் கொண்டது. கால்களில் உரமில்லை. நிற்க முடியாமல் ஒரு குடிகாரனைப் போல தள்ளாடினார்.

வருத்தத்துடன் பின்னே திரும்பிப் பார்வையிட்டார் கிழவர். தான் இருந்திருந்த இருக்கையில் ஜமீன்தாராய் உடலைக் கிடத்திக் கொண்டு கிடந்திருந்தார் போலீஸ்காரர். பக்கத்திலிருந்தவர்களிடம் பல்லிளித்த வம்பளப்புகள். துள்ளித் துள்ளி முயலைப் போல ஓடும் பஸ்ஸின் தாளத்திற்கேற்ப குலுங்கிக் குலுங்கி ஆடியது போலீஸ்காரரின் தொந்தி. இருக்கையில் கெட்டியாய் உட்கார்ந்து கொண்டிருக்க முடியாமல் சரிந்து... மீண்டும் உடலைத் தூக்கி செம்மையாய் அமர்ந்து... மீண்டும் சரிந்து...

அப்போதுதான் அந்த அதிர்ச்சியான சம்பவம் நிகழ்ந்தது. யாரும் எதிர்பார்க்கவில்லை. வல்லநாடு தாண்டிப் போய்க் கொண்டிருந்த போது, பாலத்தின் எதிர் முனையில் வந்து கொண்டிருந்த லாரிக்குப் பாதை விட 'சடக்'கென்று பஸ் பிரேக் போட்டு நின்றதும் பின் இருக்கையிலிருந்து தடபுடவென்று ஓர் உருவம் படியில் உருண்டு சாலையில் விழுந்தது. பொத்தானை அழுத்தியது போல எல்லோரும் கணப்பொழுதில் பொறி கலங்கிப் போனார்கள்.

அந்தப் பாலத்தின் மேல் ஒரு பொழுதில் ஒரு வாகனம்தான் செல்ல முடியும். அகலம் குறைவு. அதனால் எதிர்ப்புற விளிம்பைத் தாண்டி உள்ளுக்குள் நுழைந்து விட்ட வாகனத்துக்கு மறுகரையில் வரும் வாகனம் வழிவிட்டு ஒதுங்கி நின்றாக வேண்டும். அதற்காகத்தான் நின்றது பஸ்.

பஸ்ஸை விட்டு எல்லோரும் கீழே இறங்கியிருந்தார்கள். ஒவ்வொருவர் முகத்திலும் அதிர்ச்சிப் பரவல். பதறிப் போய் ஓடி வந்து பார்வையிட்டார்கள். அந்தப் போலீஸ்காரர்தான் அப்படி அடித்துப் புரண்டு விழுந்திருந்தார். எல்லோரும் கைத்தாங்கல் தந்து அவரைத் தூக்கி நிறுத்தினார்கள். அரண்டு போய்த் தெரிந்தார் அவர். சக்கரத்துக்கு அடியில் சிக்கியிருந்தால் தனக்கு என்ன ஆகியிருக்கும் என்ற பீதியும் பயங்கரமும் அவர் முகத்தில் விரவி நின்றன. தேகப் பதற்றத்தில் முகமெல்லாம் வியர்த்து விறுவிறுத்து பேதலித்துப் போயிருந்தார்.

சற்றைக்கெல்லாம் எதிரே வந்திருந்த லாரி அவர்களைக் கடந்து போனது, கடூரமாய் இரைந்து கொண்டு.

''சரி... சரி... ஏறுங்க... புறப்படலாம்.''

நடத்துனர் குரல் கொடுக்க, எல்லோரும் பஸ்ஸு¬க்குள் ஏறி இடம்பிடித்துக் கொண்டனர்.

பழையபடி கிழவர் அதே இடத்தில் நின்று கொண்டார். போலீஸ்காரர் பின் 'சீட்'டில் உட்காரத் தயங்கிக் கொண்டு நின்றிருந்தார்.

''உட்காருங்க பெரியவரே, அந்த இடத்தில.'' பின் இருக்கையைக் காட்டினார் போலீஸ்காரர்.

''இல்லீங்க அய்யா. நீங்களே உக்காந்துக்குங்க... அசந்திராதிய...''

கரிசனையுடன் சொல்லி விட்டு, மேலே கிடந்த கைப்பிடியில் கை நுழைத்துக் கொண்டார் கிழவர்.



ஜோக் போட்டியில் அதிக வோட்டுக்கள் பெற்று வெற்றி பெற்ற தா. சிந்து குமார் (வலது), குவிஸ் போட்டியில் பரிசு தட்டிச் சென்ற ராஜ குமாருக்குக் கல்வி சார்பில் பேனா செட் பரிசு வழங்குகிறார்.

மொய்லிக்கு நெருக்கடி?

- சில பின்னணித் தகவல்கள்

சட்டமன்றம் கூடியவுடன் காங்கிரஸ் அதிருப்தி எம்.எல்.ஏக்கள் எல்லாம் சேர்ந்து கொண்டு மொய்லிக்கு எதிராகக் கூச்சல் போட்டு, தர்ணா செய்து, உட்கட்சி சண்டை பற்றிப் பேச ஆரம்பித்தனர். மொய்லி எழுந்து சமாதானப்படுத்தப் பார்த்தார். முடியவில்லை. இதற்கிடையில் மொய்லியின் ஆதரவு எம்.எல்.ஏவான நாராயண் என்பவர் எழுந்து, ''இதற்கெல்லாம் காரணம் எஸ்.எம். கிருஷ்ணாதான். கிருஷ்ணாவுக்கு மானம், ரோஷம் இருந்தால் ராஜினாமா செய்துவிட்டுப் போக வேண்டியதுதானே'' - என்று கூச்சல் போட்டார்.

இதற்காகவே காத்திருந்தவர் போல எழுந்தார் கிருஷ்ணா. உடனடியாக வெளியேறி, தம்முடையதும் மற்றும் ஏழு மந்திரிகளுடையதுமான எட்டுப்பேரின் ராஜினாமாக் கடிதங்களை கவர்னரைச் சந்தித்துக் கொடுத்தார். ''பிரதமர் நரசிம்மராவின் கரத்தை வலுப்படுத்தத்தான்(?) ராஜினாமா செய்தோம்'' என்ற அரிய விளக்கமொன்றையும் தந்தார்.

இந்த மந்திரிகளையும் சரி, இவர்களுக்குத் துணைபோகும் முப்பது முப்பத்தைந்து எம்.எல்.ஏக்களையும் சரி, கழித்துக்கட்டிவிட்டு நிம்மதியாகத் தாம் அலுவலை கவனிக்கலாம் என்றுதான் நினைத்தார் மொய்லி. ''கட்சியிலிருந்து நாற்பத்தைந்து பேர் போனாலும் பரவாயில்லை... எனக்குப் போதுமான மெஜாரிடி இருக்கிறது. கட்சிக்குள் கட்டுப்பாடுதான் முக்கியம்'' என்று நிருபர்களிடம் அறிவித்தார் மொய்லி. தமக்கு எதிராகச் செயல்பட்ட அத்தனை பேர் மீதும் முறைப்படியான நடவடிக்கை எடுப்பதிலும் முனைந்தார்.

இந்த விஷயத்தில் தாம் சுதந்திரமாகச் செயல்பட முடியும் என்று மொய்லி நினைத்ததுதான் தப்பாகிவிட்டது. கடைசி நிமிடத்தில் மேலிடம் மீண்டும் தலையிட்டது. மொய்லியை அவசரமாய் போனில் கூப்பிட்டு ராஜினாமாக்களை ஏற்க வேண்டாம் என்று கவர்னரிடம் சொல்லுங்கள் என்று சொல்லப்பட்டது. இந்தச் செயல் நிச்சயம் தமக்கு மதிப்புக் குறைவாகவும் எதிர்ப்பாளர்களுக்கு மேலிடம் தரும் ஊக்கமாகவும்தான் இருக்க முடியும் என்று நினைத்தார் மொய்லி. ஆனால் அவருக்கு வேறு வழி இருக்கவில்லை.

இதற்கிடையில், அதிருப்தியாளர்களைப் பங்காரப்பா பின்னணியிலிருந்து இயக்குகிறார் என்று ஏதோ ஆத்திரத்தில் மொய்லி அறிவித்தது பற்றி, மிகவும் சந்தோஷப்பட்ட ஒரே நபர் பங்காரப்பாதான். ஏனெனில், மாவட்ட அளவில் சாதாரண காங்கிரஸ் செயலாளர்களையும் ஊழியர்களையும் கூடத் திரட்ட முடியாமல் கடையை மட்டும் திறந்து வைத்துக் காத்திருப்பவருக்கு ஆதரவாகத் 'துணை முதல்வர் - மற்றும் ஏழு மந்திரிகள் - முப்பத்தைந்து எம்.எல்.ஏக்கள்' - என்று சொன்னால் யார்தான் சந்தோஷப்படமாட்டார்கள்? கறுகறுப்பாகக் களத்தில் இறங்கினார். ''இவ்வளவிற்கும் காரணம் நரசிம்மராவ்தான். அவர் பதவி விலக வேண்டும். கிளாசிக் கம்ப்யூட்டர் வாங்கின வகையில் என் மீது சி.பி.ஐ. விசாரணை இருக்கிறது. சூட்கேஸ் வாங்கின நரசிம்மராவ் மீது ஏன் விசாரணை இல்லை? என் மீது குற்றம் சுமத்தப் பார்க்கிறார் மொய்லி. நான் புடமாகக் குளித்து எழுந்த எருமைமாடு. என் மீது எந்த தூசு தும்பும் ஒட்டாது'' - என்றார்.

மொய்லி ஆதரவாளர்கள் சும்மா இருக்கலாகாது என்பதற்காக - மொய்லியை

* மிஸ்டர் வேதாளத்துடன் ஒரு போராட்டம்!



மாற்றினால் கூண்டோடு ராஜினாமா என்று தீர்மானம் நிறைவேற்றி, டெல்லிக்கு அனுப்ப முடிவு செய்தார்கள். ஆனால், 'நிலைமை நமக்குச் சாதகமாகத்தான் இருக்கிறது. மேலிடத்தைச் சங்கடத்தில் ஆழ்த்தும் எந்த நடவடிக்கையிலும் இறங்க வேண்டாம்' என்று மொய்லி கேட்டுக் கொண்டதற்கிணங்க பேசாமலாகி விட்டனர்.


மேலிடப் பார்வையாளராக ஜெகன்னாத் மிஸ்ராவை அனுப்புவதாக டெல்லியிலிருந்து தகவல் வந்தவுடனேயே குதூகலமடைந்து விட்டது அதிருப்தி கோஷ்டி. 'நிச்சயம் மொய்லியை மாற்றப் போகிறார்கள்' என்பது போல் ஒரு செய்தி பரவவே, எதிர்க்கட்சி எம்.எல்.ஏக்கள் அனைவரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தேஷ்பாண்டே தலைமையிலும் பி.ஜே.பி. கட்சித் தலைவர் எடியூரப்பா தலைமையிலும் விதான சௌதா முன்பு தர்ணா செய்தனர். 'நான்கு வருடங்களில் நான்காவது முதல்வர் வேண்டாம். கர்நாடகத்தை இழிவு செய்யாதீர்கள். சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு ஜனாதிபதி ஆட்சியைப் பிரகடனப்படுத்துங்கள்' என்று கோரிக்கை விடுத்தனர்.

மேலிடப் பார்வையாளராக வந்த ஜெகன்னாத் மிஸ்ரா, ''நான் முதல்வரை மாற்றுவதற்காக வரவில்லை'' என்று கூறி அதிருப்தியாளர்கள் முகம் தொங்கச் செய்து விட்டார்.

பிரச்னையைச் சமாளிக்க நரசிம்மராவ் செய்யவிருக்கும் மந்திரிசபை மாற்றத்தின் போது எஸ்.எம். கிருஷ்ணாவுக்கு டெல்லி மந்திரிசபையில் இடமளிப்பது என்று (அல்லது வேறு ஏதாவதொரு பதவி) முடிவு செய்யப்பட்டதாகவும்... ஆனால் மாநிலத்திலுள்ள தனியார் கல்லூரி நிர்வாகிகள் மற்றும் சாராய மன்னர்களின் லாபிகள் மொய்லி முதல்வராகத் தொடர்வதை விரும்பாமல் எஸ்.எம். கிருஷ்ணா, ராஜசேகரமூர்த்தி மூலம் தொந்தரவு தருகிறார்கள் என்றும் ஒரு வதந்தி.

ஆரம்பத்திலிருந்தே அதிருப்தியாளர்களை ஊக்குவிக்காமல் இருந்திருந்தால் இப்படிப்பட்ட பிரச்னைகளுக்கெல்லாம் இடமேயில்லை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அப்படி காங்கிரஸ் உயர் மட்டத் தலைமை நடந்து கொள்ளாததால் தற்போது மிஸ்ரா பெங்களூர் வந்ததும் கீழே இறங்கி வந்த அதிருப்தி வேதாளம், அவர் புதுதில்லி திரும்பியதும் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டு விட்டது! மொய்லிக்கு நெருக்கடி நீடிக்கிறது.

– அமுதவன்.



வெவ்வேறு தொழில் புரிபவர்கள் எழுத்தாளர்களானால் எப்படி இருக்கும்? இதோ ஒரு கற்பனை!

வானிலை அறிவிப்பாளர் :

வங்காள விரிகுடாக் கடலில் 600 கிலோ மீட்டர் தூரத்தில் புயல் மையம் கொண்டு, அது தென்கிழக்கே மெல்ல நகர்ந்து, மேலும் தீவிரமடைந்து தென் மேற்கு நோக்கி நகரும் 'சுப வேளையில்' சுரேஷ் கமலியைப் பெண் பார்க்கச் சென்றான். பெண் பார்க்கும் படலம் முடிந்ததும், அடுத்த 48 மணி நேரத்திற்குள்

சம்பவம்! அதுவரை மொட்டாக அரும்பியிருந்த கமலத்தின் இதயத் தாமரை மெல்ல மடலவிழ்ந்து, இதழ் இதழாக மலர்ந்து நறுமணம் பரப்பிய அந்தச் சம்பவம்!

ரயில்வே ஊழியர் :

காலை மணி எட்டரை. தூரத்தில் 'எக்ஸ்பிரஸ்' வருவது தெரிந்தது. ரயில்வே

யாரும் எழுதலாம்; யாவரும் படிக்கலாம்!

பெண் பிடித்திருப்பதாகவோ, இல்லை பிடிக்கவில்லை என்றோ முடிவு எடுத்து, முடிந்தால் தெரிவிக்கப்படும். தெரிவிக்காமலும் இருக்கலாம் என்று கூறினான். புயல் காரணமாக சிவப்புக் கொடி ஏற்றிய துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சிய கப்பல் போல் பெண்ணின் தந்தை கணபதி சர்மா ஸ்தம்பித்துப் போனார்!

ஓட்டல் முதலாளி :

''என்ன பாமா? இன்றைய ஸ்பெஷல் என்ன?'' என்று கேட்டான் உப்பிலி. குலோப் ஜாமூன் அதரங்களில் புன்முறுவல் தவழ, ''உங்களுக்குப் பிடித்த அவல் கேசரியும் வெங்காய பஜ்ஜியும்'' என்றாள் பாமா. 'டிபனை' எடுத்துக் கொள்ளுங்கள். 'டிகிரி காப்பி' கொண்டு வருகிறேன் என்று திரும்பிய பாமாவின் வெள்ளை அப்பம் போல் உப்பிய கன்னத்தில் செல்லமாகத் தட்டினான் உப்பிலி. பாமாவின் முகம் 'ரோஸ் மில்க்' போல் சிவந்தது.

பூக்கடைக்காரர் :

மல்லிகைப் பந்தல் அழகிய கிராமம். 'செண்பகநாதர் கோவிலை ஒட்டி தாமரைக் குளம். தாமரைக் குளத்தை ஒட்டி கோவில் குருக்கள் புஷ்பவனத்தின் வீடு. சேற்றில் மலர்ந்த செந்தாமரை போல் விளங்குவாள், குருக்களின் பெண் கமலம். தாழம்பூ நிறம். தாமரை போன்ற முகம். முல்லையைப் பழிக்கும் பற்கள். ரோஜாக் கன்னங்கள். பெயர் மட்டுமா கமலம்? அவள் கண்களே கமலப் பூ!... அந்தச் சம் பவம்! தாமரைக் குளத்தருகே முல்லைவன நாதனைச் சந்தித்த

கேட் சாத்தியாகிவிட்டது. சிக்னல் விழுந்து விட்டது. திண்ணையில் உட்கார்ந்திருந்த



காமாட்சிப் பாட்டியிடம், 'பாட்டி, உடம்பு பரவாயில்லையா?' என்று குசலம் விசாரித்தான் பிரகதா. 'டிக்கெட் வாங்கிண்டு ரயிலில் ஏறியாச்சு! இன்னும் 'ஸ்டேஷன்' வரவில்லை. வந்தால் இறங்க வேண்டியது தான்! 'யமன்' இந்தக் கட்டையை இறக்கி அழச்சிண்டு போகக் காத்திருக்கான்!' சொல்லும் போதே பாட்டியின் கண்களில் 'கரி' விழுந்தது போல் நீர் மல்கியது.

கற்பனை : ''டையார்''



* கிடைத்திருந்தால்...



* வேந்தருக்குப் பெண்பால்?

முதல்வரின் துணிச்சலைப் பாராட்டலாமா?

● ஏ. வேங்கடேசன், திருச்சி.

? ஞானபீட விருதை விடக் கலைஞர் பட்டமே சிறந்தது என்று கருணாநிதி கூறுகிறாரே?

! கிடைத்து விட்டிருந்தால் இப்படிப் பேசியிருக்க மாட்டார். இரண்டுக்குமே உரிய மதிப்பு அளித்திருப்பார்.

● ப. இராம்முருகன், சிவகங்கை.

? புரட்சித் தலைவி இல்லை என்றால் தமிழே அழிந்து போகுமோ என்று கவலைப்படும் நிலை உள்ளதாக இந்திரகுமாரி கூறுகிறாரே?

! அது எப்படியோ; அவர் சத்துணவுக் கூடங்களில் செய்திருக்கும் கட்டாய வசூல் பார்த்தால் சத்துணவில் சத்தெல்லாம் அழிந்து போகும் என்பது நிச்சயம்.

● ஜெயா சீனிவாசன், கும்பகோணம்.

? ஷபனா ஆஸ்மி மன்னிப்பு கேட்கும் அளவுக்கா தவறு செய்தார்?

! முத்தம் என்பது உள்ளத்து உணர்ச்சியின் ஒரு வெளிப்பாடு, அவ்வளவே. அந்த உணர்ச்சி எத்தகையது என்பதுதான் முக்கியமே தவிர, முத்தம் என்ற செயல் அல்ல. இந்த நோக்கில் பார்த்தால் ஷபனா குற்றமற்றவர்.

● கே. ஆர். தேவேந்திரன், கொணவட்டம்.

? ஜெ. அரசுக்கும் ஆளுநருக்கும் இடையே ஏற்பட்டுள்ள உச்சகட்ட மோதலின் பின்விளைவுகள் எப்படி இருக்கும்?

! மாவட்டங்களில் கலெக்டர்கள் அல்ல; அமைச்சர்கள் கொடி உயர்த்துவார்கள் என்ற அறிவிப்பு, ஆளுநர் மீது ஜெ. நடத்தியுள்ள 'லேட்டஸ்ட்' தாக்குதல். பரஸ்பரக் குற்றச்சாட்டுக்கள், பத்திரிகைகளுக்குப் பரபரப்புச் செய்திகள். வாசகர்களுக்கு நொறுக்குத் தீனி. இவற்றின் பின்விளைவு என்ன என்பது, மத்திய அரசு ஆளுனருக்கு எந்த அளவுக்கு ஆதரவு தருகிறது என்பதைப் பொறுத்தது. நாடாளு மன்ற மெஜாரிட்டி கிடைத்துவிட்ட நிலையில், ஆந்திரா, கர்நாடகாவுடன் சேர்த்து தமிழகத்திலும் தேர்தலுக்கு வழி பிறக்கலாம்! ஆனால் அது உசிதமாகாது.

● வைத்தியா, திருவெண்ணெய்நல்லூர்.

? காஷ்மீர் பிரச்னை தீர என்னதான் வழி?

! இருங்க, இப்பத்தான் ஃபாரூக் அப்துல்லா திரும்பி வந்திருக்கார். 'சகஜ நிலை திரும்பும்'னு ஆரூடம் சொல்லியும் இருக்கார். என்ன பிளான் வைச்சிருக்காரோ, பொறுத்திருந்து பார்க்கலாம்!

● எஸ். கிருஷ்ணசாமி, சென்னை.

? மறைந்த நாடோடி பற்றி?

! நகைச்சுவை எழுத்து மட்டுமல்ல; அன்றே இன்வெஸ்டிகேடிவ் ஜர்னலிஸம் ஆரம்பித்து வைத்தவர். அரசு மருத்துவமனைகளின் அவலநிலை பற்றிய அவர் கணிப்புக் கட்டுரைகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. அப்புறம் செக்ஸ் அறிவூட்டும் புத்தகங்களும் எழுதினார். படிப்படியாக உயர்ந்து, கடைசியில் ஆன்மீக சொற்பொழிவுகளின் சாரத்தை வடித்துத் தந்தார் சிவமணியில். நல்ல எழுத்தாளர் என்பதோடு நல்ல மனிதரும் கூட.

● பி. ராஜன், தாராபுரம்.

? பஸ்களில் நோட்டீசு ஒட்டினால் ஓராண்டு ஜெயில் தண்டனையாமே?

! ஜெ மற்றும் அ.தி.மு.க. சம்பந்தப்பட்ட நோட்டீசுகள் தவிர வேறு எது ஒட்டினாலும் தண்டனை உண்டு!

● ராஜா ரஹ்மான், திருப்பரங்குன்றம்.

? ஆர்.டி. பர்மன் மரணம் குறித்து?

! அப்பாவைப் போலவே அற்புதக் கலைஞன். ஷோலே, ஹரே ராமா... போன்றவற்றில் இளைஞர்களைச் சுண்டி இழுக்கும் தாளம் போட வைத்தார். அமர் பிரேம், கட்டி பதங் போன்றவற்றில் மனசை வருடும் இசை வழங்கினார்.

● பசும்பொன், மகாராஜநகர்.

? தமிழக முதல்வர் பல்கலைக் கழகங்களுக்கெல்லாம் வேந்தராக ஆக்கப்பட்டுள்ளாரே?

* அகாதமி பரிசு



* தவறு என்ன?



நீங்கள் கேட்டவை - தராசு

! முதல்வர் - ஆளுநர் போரின் பல கட்டங்களுள் ஒன்று. அதுசரி, யாராவது வேந்தர் என்பதற்குப் பெண்பால் கண்டு பிடியுங்களேன்!

● ஆர். காஞ்சனா, நெய்வேலி.

? கே. ஆர். கௌரி நீக்கம் குறித்து?

! நல்ல வருவாய் உள்ள வக்கீல் தொழிலை விட்டு விட்டு கட்சிப் பணி ஏற்றவர் கௌரி. இவரது வாழ்க்கை நிகழ்ச்சிகள் கல் மனத்தையும் கரைய வைக்கும். கட்சிக்காகவே வாழ்ந்தார். அப்படிப்பட்டவர் நீக்கப்பட நேர்ந்தது வருத்தமே. நமது அரசியலில் அணைத்துக் கொண்டு போகிற, அனுசரித்துப் போகிற பக்குவம் குறைந்து கொண்டே வருவதற்கு மற்றுமொரு அத்தாட்சி.

● ஸ்ரீவத்ஸன், திண்டுக்கல். ❑

? வெளிநாட்டு கற்றுலா அனுபவங்களை மக்களுடன் பகிர்ந்து கொள்ளவாவது எம்.எல்.ஏக்கள் தொகுதிப் பக்கம் வருவார்களா?

! ஏங்க, உங்க தொகுதி என்ன அமெரிக்காவிலயா இருக்கு?

● சின்னஞ்சிறு கோபு, மங்கைநல்லூர்.

? எம்.வி.வி. அவர்களுக்கு சாகித்ய அகாதமி விருது தரப்பட்டிருப்பது குறித்து....?

! வழக்கம் போல் காலதாமதமாகத் தரப்பட்டதுதான் என்றாலும் இப்போதாவது தரப்பட்டதில் மகிழ்ச்சி. மணிக்கொடி சிறப்பு முத்திரையோடு எம்.வி.வி. படைத்த 'நித்ய கன்னி', 'வேள்வித் தீ' போன்றவை காலத்தை வென்று நிற்கும் படைப்புக்கள். பரிசு பெற்ற 'காதுகள்' நாவல் துறையில் சில புதிய எல்லைகளைத் தொட்டிருக்கும் படைப்பு.

● க. சாந்தி குமார், காட்பாடி.

? முதறிஞர் பட்டம் தற்போது யாருக்கு சிபாரிசு செய்யலாம்?

! கேட்டுட்டீங்க இல்ல, நம் அமைச்சருங்க கறுகறுப்பாயிடுவாங்க. ஏங்க, உங்களால சும்மா இருக்கவே முடியாதா?

● காமாட்சி சத்தியநாராயணன், வேலூர்.

? திருக்குறள் முனுசாமியை எவ்வகையில் அரசு நினைவு வைத்துக் கொள்ள வேண்டும்?

! சிலை வைத்து மாலை போடுவதைக் காட்டிலும், அவர் சிந்தனைகளுக்கு மலர் வளையம் வைக்காமல் இருந்தாலே போதும்! (நன்றி: வழக்கறிஞர் சுமதி)

● இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

? கப்புடுவை விமர்சிக்கா விட்டால் உங்களுக்குத் தூக்கமே வராது போலிருக்கு?

! நான் அவருடைய நண்பன்; அவர் எழுத்துக்களின் ரசிகன். அதனால்தான் அவர் தேவையின்றி ஆபாசம் புகுத்தும் போது வருந்துகிறேன். அச்சமயம் அவர் எந்தக் கலைஞரைப் பாராட்டுகிறாரோ அவரையே இழிவுபடுத்துவதாகவும் கருதுகிறேன்.

● கலைச்செல்வன், அருள்நெறிநகர்.

? அலை ஓசை ஒலிபரப்பு மகிழ்ச்சி தந்தாலும் காலை நேரம் சரியில்லையே?

! உங்களுக்காக யாராவது கேஸட்டில் ஒலிப்பதிவு செய்து விடலாமே! வானொலி நேரத்தில் திரும்பத் திரும்பப் போட்டுக் கேட்கும் அளவுக்கு மிக நன்றாக நிகழ்ச்சியை அமைத்து வருகிறார்களே!

● இராம பார்த்திபன், வயலூர்.

? சமீபத்தில் உங்கள் மனத்தைப் பாதித்த சம்பவம்?

! மாத்தையாவுக்கு மரண தண்டனை. அதுவும் கிட்டு மறைந்த நாளில். 'இந்தக் கொடுமைகளுக்கு எல்லையே இல்லையா? அமைதிக்கு வழியே இல்லையா?' என்று ஏங்குகிறது நெஞ்சம்.

● லதா ராஜசேகர், வலங்கைமான்.

? முதல்வரின் துணிச்சலைப் பாராட்டலாமா?

! ஓ! எத்தனை ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தினாலும் 'டோண்ட்கேர்' என்று சசிகலா உறவினருக்கு தார் காண்ட்ராக்ட் தந்து சாலைகள் செப்பனிடப்படுவதைத் தாமதப்படுத்த அபாரத் துணிச்சல் தேவைதான்!



✱ அழிந்து போகும்...



✱ விமர்சகரில் விமர்சகர்!



✱ நீக்கப்பட்டார்

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
ஸ்ரீவத்ஸன்,
20, வேப்பந்தோப்பு தெரு,
திண்டுக்கல் - 624 007.



✱ ஆருடம்

காத்துள்ள போதே தூற்ற வேண்டாமா?

◆ சைக்கிளைப் பற்றி ஓரளவே தெரிந்திருந்த நாங்கள், "நம் உயிர்த் தோழன் சைக்கிள்" இலவச இணைப்பு மூலம் சைக்கிளின் பரிணாம வளர்ச்சி, இன்றைய சைக்கிள் தொழில்கள் மற்றும் அதன் தொழில் நுட்பம் பற்றியும் முழுமையாக அறிய முடிந்தது. ஒவ்வொன்றைப் பற்றியும் அலசிச் சலித்து வெளியிட்டிருந்த இவ் விணைப்பு, பயனுள்ள இணைப்பாக அமைந்தது. நன்றி.

செம்பட்டி, வி.எஸ். இராமு.

◆ குமரன் குன்றத்தின் சரித்திரமான, கண்ணைக் கவரும் வண்ணப் படமும் சிறப்புக் கட்டுரையும் என்னை உடனே குமரன் குன்ற முருகனை தரிசிக்கப் புறப்பட வைத்து விட்டது!

சேலம் - 9, மு. இரவிச்சந்திரன்.

◆ ஒரு அப்பா தாத்தாவாகும் போது, அவர்களது மனநிலை எவ்வாறு இருக்கும் என்பதை, இரு பெரியவர்கள் நன்கு அனுபவித்துக் கூறியிருந்தார்கள்.

மணியக்காரன்பாளையம்,

ஏ.ஜி. கல்யாணசுந்தரம்.

◆ சேட்டியின் திமிச்சரியினால் நசுக்குற்ற ஏழை மக்களின் வாழ்வை, அவர்கள் பட்ட மனத்துயரத்தை அப்படியே பிரதிபலித்துக் காட்டிய அருமையான சிறுகதை ஜானகியாவின் 'புகல்' சிறுகதை.

திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

◆ 'கேரள அதிசயங்கள்' படித்தேன். அரசியல்வாதிகள் இருக்கும் வரைக்கும் அதிசயத்திற்கும் ஆச்சர்யத்திற்கும் குறைவேது?

மணக்காடு, ஸ்ரீவஹிதாபேகி.

◆ சுஜாதாவின் வண்ணத்துப் பூச்சி வேட்டை தொடர் ஆரம்பம் வண்ணமயமான அமர்க்களம்!

பள்ளிபாளையம், கே. ரஞ்சனிப்பிரியன்.

◆ 'பொங்கல் ஸ்பெஷல்' 'குடும்ப உறவுகள் சிறப்பிதழ்' அட்டையைப் பார்த்ததுமே மகிழ்ச்சி பொங்கியது. போட்டோவுக்கான 'போஸ்' ஆக இல்லாமல் மிகவும் இயற்கையாக இருந்தது.

பொள்ளாச்சி, சி.ஆர். நாகராஜன்.

◆ 68 - ஆம் பக்கத்திலுள்ள 'ஜோக்'குக் குண்டான படம், 70 ஆம் பக்கமும், 70 ஆம் பக்கத்திலுள்ள ஜோக்குக் குண்டான படம் 68 ஆம் பக்கத்திலும் போடப்பட்டுள்ளதே! இது என்ன ஏப்ரல் மாதம் என்று நினைப்பா?

திருவில்லிபுத்தூர்,

இரா. தேனம்மாள்.

◆ என்ன சார்? 9.1.94 கல்கியில் 56 - ம் பக்கம் வெளியான என் ஜோக்கில் 'சீர்காழி வி. ரேவதி' என்று பெயர் மாற்றிப் போட்டிருக்கின்றீரே... கொஞ்சம் கவனிக்கக் கூடாதா?

சீர்காழி, ஜே. பலராமன்.

◆ உங்களுக்குக் கொஞ்சம் கூடப் பொறுமை தாரமோ அரசியலோ தெரியாதுங்க. நாட்டுலே எந்த நேரம் பாத்தாலும் ஊழல் ஊழல்னு பொலம்பிட்டிருந்தா என்னதான் பிரோசனம் சொல்லுங்க? அதுனாலே ஊழலை தேசியக் கொள்கையா மாத்திடணும். அதைத்தான் நம்ம பிரதமர் செஞ்சிகிட்டு வாராங்க. மொதல் போடாத தொழில்தானே அரசியல்! காத்துள்ள போதே தூற்ற வேண்டாமா? அடுத்த தேர்தல்லே செயிக்க முடியாம போயிட்டா என்ன பண்ணலாம்னு யோசிக்கத்தான் இப்பவே அமைச்சருங்க குடும்பத்துக்குப் பணம் ஒதுக்க நல்ல திட்டம் போட்டிருக்காங்க. தோட்டா அச்சடிக்க விட்டாங்கன்னா நாட்டையே ஒண்ணாத்தரமாப் பொரட்டி எடுத்திடுவாருங்க!

கோவை, இ. ரங்கசாமி.

◆ இன்றைய கால நிலையில், 'செக்ஸ் கல்வி'யை, 'மேலை நாட்டுக் கல்வி' என்று ஒதுக்கும் பழமைவாதிகள் ஓரளவு இருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால், அவர்கள் சிறிதும் நம்பாத அளவுக்கு, நமது இளம் பருவத்தினர் முற்றிலும் மாறான உணர்வுகளையும், அதோடு விளக்கும் அளவுக்குப் பக்குவமும் பெற்றிருக்கிறார்கள். இதை உணர மறுக்கும் பெற்றோர்கள்தாம் திருந்த வேண்டும். இதற்கு, டாக்டர் ரெட்டியின் கருத்துக்கள் துணை செய்யும் என்று எதிர்பார்க்கலாம்.

திருச்சி - 9, கண்ணம்மா இராமசாமி.

◆ மதுக்கடைகளைத் திறந்து வைத்துக் கொண்டு, மதுவின் தீமைகளை விளக்குவது போல, புகை பிடிப்பது கேடு விளைவிக்கும் என்று எழுதி வைத்துக் கொண்டு, புகைப்பதை அனுமதித்து வருவது போலவே மாணவப் பருவத்தில் அளிக்கப்படுகின்ற செக்ஸ் கல்வியும் விருப்பத்திற்கும் விளைவிற்கும் தொடர்பின்றி இருக்கும். மேலை நாட்டவரின் நாகரிக மோகம் தான் பள்ளிகளில் செக்ஸ் கல்வி அத்தியாவசியம் என்று கருத இடமளிக்கிறது.

கோவை, சுவாமி சுந்தரானந்தா.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka